லை ரூபா: 15.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

Valampurii

பக்கங்கள்: பதினாறு

சங்கு 12 வள்ளுவர் ஆண்டு 2042 தை 18 செவ்வாய்க்கிழமை (01.02.2011) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 044

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
RAMCO
SLS 107 தரம் கொண்டதும்
100 வீத சாதாரண போட்லான்
சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து


## கொழும்பு சென்றவரை காணவில்லை

(கொழும்பு)

வல்வெட்டித்துறையிலிருந்து கொழும்பு நோக்கிப் பயணித்துக் கொண்டிருந்த இளம் குடும்பஸ்தர் ஒருவர் காணாமல் போயிருப்பதாக இலங்கை மனித உரிமைகள் ஆணைக் குழு மற்றும் பருத்தித்துறை பொலிஸில் குடும்பத்தவர்கள் முறைப்பாடுகளைச் செய்துள்ளனர்.

25வயதுடைய அ.துளசிமாறன் என்ற இளம் குடும்பஸ்தரே காணாமல் போயுள்ளார். இவர் ஒரு குழந்தையின் தந்தையாவார். கொழும்பிலுள்ள வர்த்தக நிலையமொன்றில் பணியாற்றுவதற்காக அவர் புறப்பட்டுச்சென்றிருந்ததாக (16ஆம் பக்கம் பார்க்க)

## லங்கா ஈ நியூஸ் அலுவலகம் ஆயுதக் குழுவால் தீக்கிரை



(கொழும்பு)

கொழுபிலிருந்து வெளிவரும் இணையத்தளமான லங்கா ஈ நியூஸ் அலுவலகம் நேற்று அதிகாலை இனந்தெரியாத ஆயுதக் குழுவொன்றினால் தீ வைத்துக் கொளுத்தப்பட்டுள்ளது. இச்சம்பவத்தின் போது ஊழியர்கள் எவரும் கடமையில் இல்லாத காரணத்தினால் உயிராபத்துகள் எதுவும் ஏற்படவில்லை. எனினும் அலுவலகத்திலிருந்த கணனிகள், தளபாடங்கள் மற்றும் ஆவணங்கள் அனைத்தும் எரிந்து நாசமாகியுள்ளன.

நேற்று அதிகாலை 2.00 மணியளவில் மாலம்பே தஹம் மாவத்தையில் அமைந்துள்ள லங்கா ஈ நியூஸ் இணைய அலுவலகத்தின் கதவுகளை உடைத்துக் கொண்டு அத்துமீறி நுழைந்த ஒரு குழுவினரே இத் தாக்குதலில் ஈடுபட்டனர். இச்சம்பவம் தொடர்பாக பொலிஸாருக்கும் தீயணைப்புப் படைப்பிரிவினருக்கும் தகவல் தெரிவிக்கப்பட்டபோதும் (16ஆம் பக்கம் பார்க்க)

# அரசாங்கத்தின் ஆட்டம் விரைவில் முடிவுக்கு வரும்

## வெறுப்படைகிறது ஜாதிக ஹெல உறுமய

(கொழும்பு)

அரசாங்கத்திற்கும் ஜாதிக ஹெல உறுமயவிற்கும் இடையில் முரண்பாடுகள் எழுந்துள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன. உள்ளூராட்சித் தேர்தலில் வேட்பாளர்களுக்கான ஒதுக்கீட்டில் ஏற்பட்ட சிக்கல்களை அடுத்தே இந்த முரண்பாடு ஏற்பட்டுள்ளது. (16ஆம் பக்கம் பார்க்க)

## பிரித்தானிய உயர் குழு இன்று யாழ்.வருகை

(யாழ்ப்பாணம்)

பிரித்தானிய உயர் அதிகாரிகள் குழுவினர் இன்று யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்கின்றனர்.

யாழ்ப்பாண கள நிலவரங்கள், அபிவிருத்திப் பணிகளை முன்னெடுப்பதற்கான உதவிகளை வழங்குவது குறித்து ஆராய்வதற்காக யாழ்ப்பாணத்திற்கு வருகைதரும் பிரித்தானியக் குழு அரச அதிகாரிகள், சமூக பிரதிநிதிகளைச் சந்தித்து கலந்துரையாடும். (ந-5)

## விருப்பு எண்கள் 7ந் திகதி வெளிவரும்

(கொழும்பு)

உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களில் போட்டியிடும் வேட்பாளர்களின் விருப்பு எண்கள் எதிர்வரும் 7ஆம் திகதிக்கு முன்னர் வழங்கப்படும்.

இத்தகவலை மேலதிக தேர்தல்கள் ஆணையாளர் (16ஆம் பக்கம் பார்க்க)

## சந்திரிகா சாட்சியமளித்தால் அதனை ஆணைக்குழு ஏற்கும்

(கொழும்பு)

கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு முன்னிலையில் சாட்சியமளிக்கும் காலக்கெடு முடிபடைந்த நிலையில் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் சாட்சியத்தை ஏற்றுக் கொள்ள தயாராக இருப்பதாக ஆணைக் குழு நேற்று அறிவித்துள்ளது.

முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க சாட்சியமளிக்க முன்வரும் பட்சத்தில் விசேட ஏற்பாடாக அவருக்கு சந்தர்ப்பம் வழங்க தயாராகவுள்ளோம் என ஆணைக்குழுவின் ஊடக இணைப்பாளர் லக்ஷ்மன் விக்கிரமசிங்க தெரிவித்தார். (16ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளுக்கு நிதி வழங்கியோர் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு நிதி உதவிகளை வழங்கிய அமைப்புக்கள் மற்றும் தனி நபர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என அமெரிக்காவிற்கான இலங்கைத் தூதுவர் ஜாலிய விக்கிரமசூரிய தெரிவித்துள்ளார்.

யுத்தம் இடம்பெற்ற காலத்தில் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு ஆயுதங்களையும் வெடிபொருட்களையும் கொள்வனவுசெய்வதற்கு நிதி உதவிகளை வழங்கியோருக்கு எதிராக அரசாங்கம் நடவடிக்கை எடுக்கும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இவ்வாறான நபர்கள் மற்றும் நிறுவனங்கள் தொடர்பில் அரசாங்கம் தகவல்களை திரட்டி வருகின்றது.

அமெரிக்காவில் இயங்கி வரும் தமிழீழ விடுதலைப் புலி ஆதரவு அமைப்புக்கள் மற்றும் நிறுவனங்களுக்கு எதிராக நடவடிக்கை எடுப்பது (16ஆம் பக்கம் பார்க்க)

# மீனவர்கள் மீது வன்முறை பிரயோகம் எவராலும் நியாயப்படுத்த முடியாது!



## இலங்கை–இந்தியா கூட்டறிக்கை

(கொழும்பு)

மீனவர்கள் விடயத்தில் வன்முறையைப் பிரயோகிப்பது எந்தச் சூழ்நிலையிலும் நியாயப்படுத்த முடியாது என இரு தரப்பினராலும் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளதாக இந்திய வெளிவிவகாரச் செயலாளர் நிருபமா ராவின் கொழும்பு விஜயத்திற்குப் பின்னர் இரு நாடுகளும் இணைந்து வெளியிட்ட கூட்டறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கை கடற்படையினரால் தமிழக மீனவர்கள் தொடர்ச்சியாகத் தாக்கப்படும் சம்பவம் குறித்து ஆராய்வதற்காக கொழும்பு வந்திருந்த இந்திய வெளிவிவகாரச் செயலாளர் (16ஆம் பக்கம் பார்க்க)

FRANCE
Rs. 5/-
Dialog

**Study & Work in UK and Canada**

Hurry......for Jan-2011
Intake Get Register Now
இறுதிச் சந்தர்ப்பம் IELTS தேவையில்லை
Administration & Documentation

என்பன வெற்றிகரமான முறையில் எங்களால் செய்து தரப்படும்.
ஐரோப்பிய நாடுகளுக்கான விசா பெறுவதற்கான Sponsorship
பிரச்சினையா? உடனடியாக ஏற்பாடு செய்து தரப்படும்.
சகல தொடர்புகளுக்கும்: 0729994777
London City College
No.01, Deanston House, Deanston Place, Colombo-03
(C-2291)

## அராலியில் திருட்டு

அராலி வடக்கு செட்டியார் மடத்தில் நேற்று முன்தினமிரவு திருட்டுச் சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது.

இதில் வீட்டில் உள்ளவர்கள் ஆழ்ந்த உறக்கத்திலிருந்த வேளை வீட்டு முன் கதவை உடைத்து வீட்டிற்குள் புகுந்த திருடர்கள் 2 வீடியோ கமரா, கையடக்கத் தொலைபேசி ஒன்று, 2பவுண் தங்க நகை மற்றும் 70 ஆயிரம் ரூபாய் பணம் என்பவற்றை திருடிச் சென்றுள்ளனர். சம்பவம் தொடர்பில் வட்டுக்கோட்டைப் பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (ந-5)

**வர்த்தகப் பெருமக்களே..**

பெறுமதிமிக்க உங்கள் வியா[illegible] பார நிறுவனங்களை இலகுவாக[illegible] பதிவு செய்து, அதற்குரிய செ[illegible] வத்தையும் உத்தரவாதத்தையு[illegible] பெற்றுக் கொள்ளுங்கள்.
தொடர்புகளுக்கு:-0729994777
(C-2290

# மன்மோகன் சிங் - கருணாநிதி டெல்லியில் முக்கிய சந்திப்பு



(புதுடில்லி)

புதுடில்லிக்கு விஜயம் செய்துள்ள தமிழக முதலமைச்சர் கருணாநிதி நேற்று பிரதமர் மன்மோகன் சிங் மற்றும் அகில இந்திய காங்கிரஸ் கட்சியின் தலைவர் சோனியா காந்தி ஆகியோரை சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார்.

பிரதமர் மன்மோகன் சிங்கை அவரது இல்லத்தில் சென்று சந்தித்த முதலமைச்சர் கருணாநிதி, அரசியல் நிலவரங்கள் மற்றும் தமிழக மீனவர் விவகாரம் குறித்து கலந்துரையாடியதாக தெரிவிக்கப்படுகிறது.

இச்சந்திப்பின் போது ஒரே மாதத்தில் தமிழக மீனவர்கள் அறுவர் இலங்கை கடற்படையினரால் சுட்டுக்கொல்லப்பட்டமை குறித்து பிரதமர் மன்மோகன் சிங்கிடம் முதலமைச்சர் கருணாநிதி தனது கவலையை தெரிவித்துள்ளார்.

இலங்கை கடற்படையினரால் தமிழக மீனவர்கள் தொடர்ச்சியாக தாக்கப்படுவதை தடுத்து நிறுத்த நிரந்தரத் தீர்வு காணப்பட வேண்டும் என முதலமைச்சர் கருணாநிதி வற்புறுத்தியதாகவும், இப்பிரச்சினை தொடர்பில் உறுதியான நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று பிரதமர் மன்மோகன் சிங் முதலமைச்சர் கருணாநிதியிடம் உறுதி அளித்ததாகவும் இந்தியச் செய்திகள் தெரிவிக்கின்றன.

அதேவேளை, காங்கிரஸ் கட்சியின் தலைவர் சோனியா காந்தியை அவரது இல்லத்தில் சந்தித்த முதலமைச்சர் கருணாநிதி, அரசியல் நிலவரம் மற்றும் தமிழக சட்டசபை தேர்தலில் காங்கிரஸ் கட்சிக்கான தொகுதிப் பங்கீடு ஆகியவை குறித்து ஆலோசனை நடத்தியதாக அச் செய்திகள் தெரிவிக்கின்றன.

தமிழகத்தில் விரைவில் நடைபெறவுள்ள சட்டசபை தேர்தலில் தி.மு.கவுடன் காங்கிரஸ் கூட்டணி என்பது உறுதியாகியுள்ள நிலையில், தொகுதிப் பங்கீடு மற்றும் பரப்புரை தந்திரோபாயங்கள் குறித்தும் அவர் சோனியா காந்தியுடன் முக்கிய ஆலோசனை நடத்தியதாக தெரிய வருகின்றது.

இந்தியாவின் உள்நாட்டு பாதுகாப்பு தொடர்பான மாநாட்டில் கலந்து கொள்வதற்காக நேற்றுமுன்தினம் தமிழக முதலமைச்சர் கருணாநிதி புதுடில்லிக்கு விஜயம் செய்திருந்தார்.

புதுடில்லியில் இன்று நடைபெறவுள்ள இந்தியாவின் உள்நாட்டு பாதுகாப்பு தொடர்பான அனைத்து மாநிலங்களின் உள்துறை அமைச்சர்களின் மாநாட்டில் கலந்து கொண்ட பின் முதலமைச்சர் கருணாநிதி இன்று மாலையே விமானம் மூலம் சென்னை திரும்புவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (ந-5)

## நயினாதீவில் அபிராமிப்பட்டர் விழா

(யாழ்ப்பாணம்)

அபிராமிப்பட்டர் விழா நயினாதீவ[illegible] நாகபூசணி அம்பாள் அமுதசுர[illegible] அன்னதான சபை மண்டபத்தில் நாளை[illegible] பிற்பகல் 2 மணிக்கு நடைபெறும்.

கலாசார உத்தியோகத்தர் எஸ்.உத[illegible] பாலன் தலைமையில் இடம்பெறும் இந்[illegible] நிகழ்வில் க.பரமலிங்கம் பிரதம விருந்தி[illegible] னராகவும், கு.சாந்தலிங்கம் சிறப்[illegible] விருந்தினராகவும் கலந்து கொள்வர்.

உளவளத் துணையாளர் த.நவராஜ் சிறப்புரை ஆற்றுவார். (ந)

# லங்கா நியூஸ் மீதான தாக்குதல் சுயாதீன விசாரணை தேவை!

## மங்கள சமரவீர தெரிவிப்பு



(கொழும்பு)

சுதந்திரமாகத் தகவல்களை அறிந்து கொள்ள வழிசெய்யும் ஊடகங்கள் மீது மேற்கொள்ளப்படும் தாக்குதல்கள் குறித்து சுயாதீனமான விசாரணை நடத்துமாறு ஐக்கிய தேசிய கட்சி வலியுறுத்தியுள்ளது.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து வெளியிட்ட அக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் மங்கள சமரவீர இதனை வலியுறுத்தினார்.

இவ் ஊடகவியலாளர் மாநாட்டில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

இனந்தெரியாத ஆயுதக் குழுவினரால் லங்கா ஈ நியூஸ் செய்தி இணையத்தளத்தின் பிரதான அலுவலகத்திற்கு தாக்குதல் நடத்தி தீ வைக்கப்பட்டுள்ளது.

லங்கா ஈ நியூஸ் என்பது இலங்கையில் நடத்தப்பட்டு வரும் மிகவும் சுயாதீனமான செய்தி இணையத்தளம் என்பது எம் எல்லோருக்கும் தெரியும்.லங்கா ஈ நியூஸ் என்பது உள்நாட்டவர்கள் மாத்திரமல்ல, வெளிநாட்டிலுள்ள இலங்கையர்கள் பலர் பார்வையிடும் செய்தி இணையத்தளமாகும்.

ஐக்கிய தேசிய கட்சி,மக்கள் விடுதலை முன்னணி என்பவற்றை விமர்சித்தமை மட்டுமல்ல ஏனைய ஊடகங்கள் வெளியிட அச்சம் கொள்ளும் செய்திகளை லங்கா ஈ நியூஸ் வெளியிட்டது.

ஜனாதிபதியின் அமெரிக்க விஜயம் தொடர்பில் அண்மையில் இதில் செய்தி வெளியிடப்பட்டிருந்ததுடன் அரசாங்கத் தரப்பில் காணப்படும் முறுகல் நிலைமைகள் குறித்தும் நேற்று முன்தினம் செய்தி வெளியிட்டிருந்தது.

சுயாதீன ஊடகவியலாளர்களுக்கு கடந்த காலங்களில் நடந்தது இன்று லங்கா ஈ நியூஸிற்கு நடந்துள்ளது.

இது தொடர்பிலும் முன்னர் இடம்பெற்ற ஊடகவியலாளர்கள் மீதான தாக்குதல் சம்பவங்கள் தொடர்பிலும் விசாரணை நடத்துமாறு ஐக்கிய தேசிய கட்சியான நாங்கள் வலியுறுத்துகின்றோம்.

நாட்டில் நடைபெறும் சில விடயங்களுக்கு எதிர்ப்புத் தெரிவித்து எதிர்வரும் 9ஆம் திகதி கொழும்பு லிப்டன் சுற்று வட்டத்தில் ஆர்ப்பாட்டம் ஒன்றை மேற்கொள்ள ஐக்கிய தேசிய கட்சி தீர்மானித்துள்ளது.

பல விடயங்கள் குறித்த மக்களை தெளிவுபடுத்த, எதிர்ப்புத் தெரிவிக்க இந்த ஆர்ப்பாட்டத்தை ஏற்பாடு செய்துள்ளோம். அன்று சரத் பொன்சேகா கைது செய்யப்பட்ட தினம். அவரை விடுதலை செய்யுமாறு வலியுறுத்தவுள்ளோம்.

ஊடக அடக்குமுறை, வடக்கு கிழக்கு பகுதிகளில் இடம்பெற்று வரும் மனிதப் படுகொலை,மனிதக் கடத்தல், அனைத்து தொடர்பிலும் எங்களுடைய எதிர்ப்பை இத் தினத்தில் வெளியிடவுள்ளோம்.

அதேபோன்று கொழும்பில் வீடற்றுள்ளவர்களுக்கு எதிராக மேற்கொள்ளப்படும் திட்டங்கள் மற்றும் தனியார் மயப்படுத்தல் குறித்தும் எமது எதிர்ப்பை வெளியிடுவோம் என நாடாளுமன்ற உறுப்பினர் மங்கள சமரவீர தெரிவித்துள்ளார். (ந-5)

**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை**
**கலைப்பீடம்**

**ஊடக வளங்கள் மற்றும் பயிற்சி மையம் (MRTC)**
**இதழியல் டிப்ளோமா (முழுநேரம்-இரண்டாண்டு)**
**மாணவர்களுக்கான புலமைப்பரிசில் திட்டம்**

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஊடக வளங்கள் மற்றும் பயிற்சி மையத்தில் இதழியல் டிப்ளோமா (முழுநேரம்-இரண்டு ஆண்டு) பயிற்சியில் இணைந்து கல்வி கற்கும் மாணவர்களுக்கு புலமைப்பரிசில் வழங்கப்படவுள்ளது. இதன் மூலம் ரூ 22,500.00, புலமைப்பரிசில் தொகையாக வழங்கப்படும்.

இதழியல் டிப்ளோமா (முழுநேரம்-இரண்டாண்டு) கற்கை நெறிக்கு புதிதாக இணைந்து கொள்ளவிரும்பும் மாணவர்களும் இதற்கு விண்ணப்பிக்க முடியும். க.பொ.த. உயர் தரத்தில் மூன்று பாடங்களில் சித்தியடைந்திருப்பதோடு பல்கலைக்கழக அனுமதிக்கான தகுதியுடையவர்கள் டிப்ளோமா கற்கைநெறிக்கும், புலமைப்பரிசிலுக்கும் விண்ணப்பிக்க முடியும்.

**விண்ணப்ப முடிவு திகதி:- 06.02.2011**

விண்ணப்பப்படிவங்களையும் விபரங்களையும் கீழ்வரும் முகவரியில் அமைந்துள்ள யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஊடக வளங்கள் மற்றும் பயிற்சி மையத்தில் பெற்றுக் கொள்ளலாம்.



**இல.84, ஜும்மா பள்ளி ஒழுங்கை,**
**யாழ்ப்பாணம்.**
**தொ.பே. இல.**
**021 222 9873**

பதிவாளர்
31.01.2011 (சி-2325)

**மணமகள் தேவை**

கௌரவமான படித்த பெற்றோர்- யாழ்ப்பாணம், 1977-அச்சுவினி 9இல் செவ்வாய் லண்டன் பாஸ்போட் உள்ள, கம்பனி முகாமையாளர் மணமகனுக்கு, குடும்பப்பாங்கான மணமகளை எதிர்பார்க்கின்றனர். யாழ்ப்பாணத்தில் உள்ளவர்கள் தொடர்பு கொள்ளவும். மணமகளை இரண்டு மாதத்துக்குள் அழைத்துச் செல்வார்.
தொடர்பு: 0776052567 (3611)

**தவறிவிட்டது**

சிறிகரன், கெஜலட்சுமி என்பவரின் தேசிய அடையாள அட்டை (இல. 705933928V) கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணத்துக்கும் இணுவிலுக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் ஒப்படைத்து உதவவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.
தொடர்புக்கு: சிறிலக்ஷ்மி ரீறூம்
கே.கே.எஸ்.றோட், இணுவில்.
T.P.: 0772102282 (3615)

**இடமாற்றம்**

50, கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணத்தில் இயங்கிவந்த “ஹரன் யுவலர்ஸ்” தாபனம் 07.02.2011 முதல் இல.205, மின்சார நிலைய வீதியில் (யாழ். போதனா வைத்திய சாலையின் பின்புறம்) இயங்கும் என்று எமது அன்பர்களுக்கும் வாடிக்கையாளர்களுக்கும் அறியத்தருகின்றோம்.

**க.கிருபாகரன்,** உரிமையாளர். (3617)

# இன்று ஒரு தகவல்

## குழந்தையின் மனம்

ஒரு குழந்தை தொட்டிலில் தூங்கிக் கொண்டிருந்தது. திடீரென்று அழ ஆரம்பித்தது.

குழந்தையின் அம்மா சமையலறையில் ஏதோ வேலையாக இருந்தார்.

அப்பா சும்மாதான் இருந்தார்.

'சரி, நாம ஏதாவது முயற்சி செய்து அழுகையை நிறுத்துவோம்' என்று நினைத்துக் கொண்டு எழுந்து போனார்.

ஒரு தாலாட்டுப் பாட்டுப் பாடினார். அதுவரைக்கும் மெதுவாக அழுது கொண்டிருந்த குழந்தை வீரிட்டுக் கத்த ஆரம்பித்தது.

இவர் பார்த்தார். சரியாக வரவில்லை. ஆதலால் குடுகுடுவென்று ஓடிவந்து தன் இடத்தில் உட்கார்ந்து கொண்டு மறுபடியும் பத்திரிகை பார்க்கத் தொடங்கினார்.

தாய் வந்து மறுபடியும் ஏதோ சொல்லி அந்தக் குழந்தையை சமாதானம் செய்ய வேண்டியதாயிற்று.

குழந்தையை அழ வைப்பதென்றால் அது அப்பாவால்தான் முடியும்.

அழும் குழந்தையை அமைதிப்படுத்த அம்மாவால் தான் முடியும்.

இப்படி பல அம்மாக்கள் சொல்வதுண்டு.

வேறுவழியில்லாமல் அப்பாக்களும் இதை ஒத்துக் கொள்வதுண்டு.

இதுவரைக்கும் சரி... இனிமேல் அவர்கள் அப்படி ஒத்துக்கொள்ள வேண்டிய அவசியமில்லை.

ஏனெனில், அவர்களாலும் குழந்தையின் அழுகையை நிறுத்த முடியும். அதற்கு ஒருவழி உண்டு. இப்பொழுது சொல்லிக் கொடுக்கிறேன்.

மனோதத்துவ நிபுணர்கள் சிலர் ஒரு சோதனை பண்ணிப் பார்த்துவிட்டு இதைச் சொல்லியிருக்கிறார்கள். என்ன தெரியுமா?

வேறொன்றுமில்லை .

குழந்தை அழ ஆரம்பித்தவுடன் ஒரு டேப் றெக்கோடரை எடுத்துக் கொண்டு அதனிடம் செல்லுங்கள். அது அழுவதை அப்படியே பதிவுசெய்து வைத்துக் கொள்ளுங்கள்.

அந்தக் குழந்தை மறுபடியும் எப்பொழுதாவது அழ ஆரம்பித்தால் இந்த 'டேப்'பை உடனே அதற்குப் போட்டுக் காட்டுங்கள் அது 'கப்சிப்' என்று அழுகையை நிறுத்திவிடும்.

அதேபோல் ஒரு மருந்துப் போத்தலை குழந்தை தொடக்கூடாது என்று நினைத்தீர்கள் என்றால்...

அந்தப் போத்தலின் மேல் ஒரு அழும் குழந்தையின் படத்தை ஒட்டி வையுங்கள். அதைப் பார்த்துவிட்டால் குழந்தைகள் அதை தொடுவதற்கு தயங்க ஆரம்பித்து விடுமாம். அவுஸ்திரேலியாவில் மருத்துவ ஆராய்ச்சியாளர்கள் சோதனை பண்ணிப் பார்த்துவிட்டு இதைச் சொல்கிறார்கள்.

ஆக, ஒரு குழந்தை அழும் சத்தத்தைக் கேட்டால் இன்னொரு குழந்தை அழுகையை நிறுத்தி விடுகிறது.

ஒரு குழந்தை அழுவது போலுள்ள படத்தை இன்னொரு குழந்தை தொடுவதற்கு யோசிக்கிறது.

இதுதான் இன்றைக்கு தகவல். ஒரு வீட்டில் ஒரு குழந்தை அழுது கொண்டே உட்கார்ந்திருந்தது. எதிரில் அக்குழந்தையின் அப்பா உட்கார்ந்துகொண்டு ஏதோ சொல்லிக் கொண்டிருந்தார். "குழந்தையிடம் என்ன சொல்கிறீர்கள்?" என்றேன்.

"நீ அழுவதை நிறுத்தினால்தான் நான் ஒரு பாட்டுப் பாடுவேன் என்று சொல்கிறேன்" என்றார்.

"நீங்கள் இப்படிச் சொல்வதனால்தான் நான் அந்தக் குழந்தை நிறுத்தாமல் அழுது கொண்டிருக்கிறது. அழுகையை நிறுத்தினால் நீங்கள் பாட ஆரம்பித்து விடுவீர்களோ என்ற பயம் அதற்கு. இப்படியெல்லாம் குழந்தையைப் பயமுறுத்தாதீங்க" என்றேன்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# இரத்தினபுரத்திலுள்ள 88 குடும்பங்கள் வீட்டுத் திட்டத்தில் புறக்கணிப்பு

(கிளிநொச்சி)

கிளிநொச்சி நகரத்தின் அருகில் உள்ள இரத்தினபுரம் கிராமத்தில் பூர்வீகமாக வாழ்ந்த 88 குடும்பங்களுக்கு இதுவரையில் வீடுகள் அமைத்துக் கொடுக்கப்படவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது.

மொத்தமாக 283 குடும்பங்கள் இரத்தனபுரம் கிராமத்தில் வசித்து வருகின்றன. போரினால் அழிக்கப்பட்ட வீடுகளை மக்களுக்கு மீள அமைத்துக் கொடுக்கும் வீட்டுத் திட்ட நடவடிக்கையில் இந்த மக்களுக்கான வீடுகள் இதுவரையில் அமைத்துக் கொடுக்கப்படவில்லை என்று மக்கள் பிரதிநிதி ஒருவர் தெரிவித்தார்.

இதனால் அப்பகுதி வாழ் மக்கள் பெரும் அசௌகரியங்களை அனுபவித்து வருகின்றார்கள் என்றும் அம்மக்களுக்கு உடனடியாக வீடுகள் கட்டிக் கொடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் அந்தப் பிரதிநிதி மேலும் தெரிவித்தார்.

இரத்தினபுரம் பகுதியில் கிளிநொச்சி நகரத்திற்கு மிக அண்மையில் உள்ள தாழ் நிலப்பகுதியில் வசித்து வரும் 88 குடும்பங்களே இவ்வாறு பாதிக்கப்பட்டுள்ளனர்.

இவர்கள் தாழ்நிலத்தில் வாழ்கின்றனர் என்றும் இவர்களுக்கு வேறு இடங்களில்தான் வீடுகள் கட்டிக் கொடுக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்ட நிலையில் கடந்த சில மாதங்களாக இவர்கள் மழையிலும் வெள்ளத்திலும் கடுமையான துன்பங்களுக்கு முகம் கொடுத்து வருகிறார்கள்.

கடந்த 30 வருடங்களாக வாழ்ந்து வரும் கிளிநொச்சியின் பூர்வீகக் குடிமக்களான இந்த மக்கள் தமது சொந்த நிலத்திலேயே வீடுகள் கட்டித் தர வேண்டும் என்று கோரிக்கை விடுத்துள்ளார்கள்.

30 வருடங்களாக தாம் குறித்த பகுதியில் வாழ்வதாகவும் அந்தப் பகுதியை கையகப்படுத்தும் நோக்கில் சர்ச்சைக்குரிய இடமாக்கி மக்களுக்கு ஒதுக்கப்பட்ட வீட்டுத் திட்டம் தடுக்கப்பட்டுள்ளதாக அப்பகுதி வாழ் மக்கள் கவலை தெரிவிக்கிறார்கள்.

கடந்த பருவமழை வெள்ளத்தில் வீடுகளின்றி தறப்பாள் கூடாரங்களுக்குள் கடும் அசௌகரியங்களை அனுபவித்ததாக தெரிவிக்கும் அம் மக்கள் தமக் கான வீட்டுத் திட்டத்தை வழங்கும்படி கோரிக்கை விடுத்துள்ளனர்.

(ஸ்ரீ-2-5)

# நூலக கற்கைநெறி மீட்டல் வகுப்புகள்

(யாழ்ப்பாணம்)

நூலகமும் தகவல் விஞ்ஞானமும் டிப்ளோமா கற்றைநெறி தரம்-1 (2010) பரீட்சை எதிர்வரும் 26 ஆம் திகதி சனிக்கிழமையும் 27 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமையும் நடைபெறும்.

இப்பரீட்சைக்குரிய மீட்டல் வகுப்புக்கள் இலங்கை நூலகச் சங்கத்தின் யாழ்ப்பாண நிலையத்தினால் எதிர்வரும் 5 ஆம் திகதி சனிக்கிழமையும் 6 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை யாழ். பல்கலைக்கழகத்திலும் நடைபெறவுள்ளது.

இப்பரீட்சைக்கு தோற்றவுள்ள அனைத்து மாணவர்களையும் தவறாது சமுகமளிக்குமாறு இலங்கை நூலகச் சங்க யாழ். நிலைய ஒருங்கிணைப்பாளர் திருமதி கல்பனா சந்திரசேகர் அறிவித்துள்ளார்.

(ஸ்ரீ-2)

# குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | யாழ்ப்பாணம் | சாவகச்சேரி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 200 | 180 | 200 | 200 |
| உருளைக்கிழங்கு | 50-55 | 60 | 70 | 60 |
| பச்சைமிளகாய் | 300 | 400 | 400 | 300 |
| தக்காளி | 70 | 80 | 100 | 90 |
| மரவள்ளிக்கிழங்கு | 50 | 40 | 60 | 50 |
| கோவா | 80 | 100 | 100 | 100 |
| கரட் | 100 | 100 | 140 | 110 |
| பூசணி | 30 | 50 | 50 | 30 |
| புடோல் | 70 | 100 | 120 | 90 |
| வாழைக்காய் | 35 | 40 | 70 | 50 |
| சின்ன வெங்காயம் | 250 | 280 | 280 | 270 |
| பெரிய வெங்காயம் | 70 | 70 | 100 | 80 |
| பாகற்காய் | 200 | 140 | 160 | 150 |
| வெண்டிக்காய் | 90 | 100 | 140 | 120 |
| கருணைக் கிழங்கு | - | 50 | 70 | 30 |
| பயற்றங்காய் | 150-200 | 200 | 200 | 170 |
| லீக்ஸ் | 110 | 120 | 160 | 130 |
| பீற்றூட் | - | 140 | 140 | 120 |
| கறிமிளகாய் | - | 220 | 250 | 280 |
| முருங்கைக்காய் | - | - | - | - |
| போஞ்சி | - | 120 | 160 | 150 |
| கத்தரிதம்புள்ள | - | 120 | 180 | 120 |
| கீரை - 1 பிடி | 10-15 | 20 | 25 | 30 |
| தேசிக்காய் | 30-40 | 60 | 80 | 80 |
| தேங்காய் (ஒன்று) | 30-60 | 40 | 60-70 | 50 |

# இராசி பலன்

*01.02.2011*
*(தை 18, செவ்வாய்க்கிழமை)*
*சூரிய உதயம் காலை 6.30 மணிக்கு*
*சதுர்த்தசி முழுவதும்*
*பூராடம் பிற்பகல் 12.02 மணிவரை*
*இராகு காலம் 3.36-5.06 மணிவரை*
*சுப நேரம் 11.06-12.36 மணிவரை*

**மேடம்** தைரியத்தோடு செயற்பட்டு சாதனை படைக்கும் நாள், சேமிப்பை அதிகரிக்கும் எண்ணம் உருவாகும், புதிய திருப்பங்கள் ஏற்படலாம், வீட்டை அழகுபடுத்துவதில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**இடபம்** சுப விரயம் ஏற்படும் நாள், சுற்றத்தாரை அனுசரித்துச் செல்வது நல்லது, குடும்பத்தில் சிறுசிறு கருத்து முரண்பாடுகள் தோன்றி மறையும், பயணங்களால் அலைச்சலும் மனச்சோர்வும் ஏற்படலாம்.

**மிதுனம்** விருந்தினர் வருகையால் கலகலப்பான சூழ்நிலை அமையும், ஆசைப்பட்ட பொருளொன்றை வாங்கி மகிழ்வீர்கள், நண்பர்கள் முன்வந்து உதவுவர்.

**கடகம்** பொதுநல ஈடுபாடு அதிகரிக்கும், பொல்லாதவர்கள் உங்களை விட்டு விலகுவர், கடன்களை அடைக்க வழிவகை செய்வீர்கள், உடல்நலம் சீராகும்.

**சிங்கம்** எண்ணங்கள் எளிதில் நிறைவேறும் நாள், அதிகாரிகள் அனுகூலமாக நடந்து கொள்வர், பிள்ளைகள் வழியில் அனுகூலமுண்டு, பூர்வபுண்ணிய செயற்பாடுகள் அமைதியைத் தரும்.

**கன்னி** விரதம், வழிபாடுகளில் நம்பிக்கை கூடும் நாள், குடும்பத்தினர் உங்கள் சொற்களுக்கு மதிப்பளித்து நடப்பர், இல்லத்தில் சுகங்களும் சந்தோசங்களும் அதிகரிக்கும்.

**துலாம்** மங்கல நிகழ்வுகளில் கலந்து கொண்டு மகிழும் நாள், இளைய சகோதரத்தின் வழியில் எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கப் பெறுவீர்கள், நல்லவர்களின் தொடர்புகள் அதிகரிக்கும்.

**விருச்சிகம்** வருமானம் அதிகரிக்கும் நாள், திருமணப் பேச்சுக்கள் நல்ல முடிவுக்கு வரும், புகழ் மிக்கவர்கள் வீடு தேடி வருவர், வருங்கால நலன் கருதி சேமிப்பை அதிகரிக்க முன்வருவீர்கள்.

**தனுசு** சிக்கனத்தை கடைப்பிடிக்க முற்படுவீர்கள், சோம்பலை விலக்குவது நல்லது, திடீர் பயணங்களால் வழக்கமான பணிகளில் தாமதம் ஏற்படலாம்.

**மகரம்** மனதிற்கினிய சம்பவங்கள் நடைபெறும் நாள், பெரியவர்களின் ஆலோசனைகளைக் கேட்டு நடப்பது நல்லது, வீட்டுத் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்வதில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**கும்பம்** குடும்ப மகிழ்ச்சி அதிகரிக்கும், எடுத்த காரியத்தில் எளிதில் வெற்றி கிடைக்கும், தனவரவை உயர்த்த வழிவகை செய்வீர்கள், உற்சாகமான நாள்.

**மீனம்** தொழில் வளர்ச்சி மேலோங்கும் நாள், மற்றவர்களின் மத்தியில் உங்களின் மதிப்பும் மரியாதையும் உயரும், சொல்லை செயலாக்கிக் காட்ட பெண் வழி ஒத்துழைப்பு கிடைக்கும்.

வளவன்

# நிறுவனத்தலைவர்களிற்கான கண்காணிப்பு குழுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

சுகாதாரத் திணைக்களத்தின் கீழ் இயங்கும் வைத்திய நிறுவனங்களிற்கும், அரச சார்பற்ற நிறுவனங்களிற்குமான பெப்ரவரி மாதத்திற்கான மாதாந்த மாவட்ட கண்காணிப்புக் குழுக்கூட்டம் நாளை மறுதினம் வியாழக்கிழமை காலை 9.30 மணிக்கு பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனை மாநாட்டு மண்டபத்தில் நடைபெறும்.

இதில் சம்பந்தப்பட்ட அனைவரையும் தவறாது சமுகமளிக்குமாறு யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன் அறிவித்துள்ளார். (ஸ்ரீ-2)

# யாழ்.மாநகர சபைக்கு புதிய செயலாளர் நியமனம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாநகர சபையின் புதிய செயலாளராக திருமதி சத்தியானந்தன் நியமிக்கப் பட்டுள்ளதாக யாழ்.மாநகரசபை முதல்வர் திருமதி யோ.பற்குணராஜா தெரிவித்துள்ளார்.

யாழ். மாநகரசபையின் மாதாந்தப் பொதுக்கூட்டம் நேற்று மாநகரசபையின் மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்றது. இதில் உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இவ்விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில், யாழ்.மாநகரசபை செயலாளராக இதுவரை காலமும் பணிபுரிந்த இ.ரட்ணசிங்கத்தின் பதவிக்காலம் முடிவுற்ற நிலையிலேயே கடந்த முதலாம் திகதி தொடக்கம் இவர் செயலாளராக நியமிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்தார்.

இதேவேளை யாழ். மாநகரசபை ஆணையாளரின் பதவிக்காலத்தை மேலும் 6 மாத காலத்திற்கு வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறி நீடித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஸ்ரீ-6-51)

# வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி

(அல்வாய்)

யா/மெதடிஸ்த உயர்தரப் பெண்கள் பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி எதிர்வரும் 5ஆம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு கல்லூரி மைதானத்தில் கல்லூரி அதிபர் திருமதி செ. சுந்தரநேசன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வடக்கு மாகாண துரித அபிவிருத்தித் திட்ட முகாமைமையாளர் கலாநிதி எஸ்.எஸ். சிவகுமார் கலந்துகொள்ளவுள்ளார். பரிசில்களை திருமதி லோகேஸ்வரி சிவகுமார் வழங்கிக் கௌரவிக்கவுள்ளார். (ஸ்ரீ-3-19)

# பாடசாலைகளுக்கு தளபாடங்கள் ஒதுக்கீடு

(அல்வாய்)

வடமராட்சி கிழக்கில் உள்ள அம்பன் அ.மி.த.க. பாடசாலைக்கும் குடத்தனை அ.த.க.பாடசாலைக்கும் வடமராட்சி கல்வி வலயத்தினால் தளபாடங்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன.

மாணவர்களுக்கான மேசை, கதிரைகளும் ஆசிரியர்களுக்கான மேசை, கதிரைகளும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக வடமராட்சி வலயக் கணக்காளர் தெரிவித்துள்ளார். (ஸ்ரீ-3-19)

# நிர்வாகசபை தெரிவு

(யாழ்ப்பாணம்)

தொண்டைமானாறு கலைவாணி சனசமூக நிலையத்தின் வருடாந்த பொதுக் கூட்டத்தில் புதிய நிர்வாகிகள் தெரிவு செய்யப்பட்டனர். இதில் தலைவராக சி.தியாகலிங்கம், செயலாளராக செல்வி ப.சரேகா, பொருளாளராக வெ.பிரேமதாசன், உப தலைவராக திருமதி ந. சிவாஜினி, உப - செயலாளராக மு.ஜானகுமார், கல்வி பொறுப்பாளராக செல்வி வி.மணிவதனி, விளையாட்டுப் பொறுப்பாளராக இ.விஷ்யந்தன், கலை கலாசார பொறுப்பாளராக இ.ஆழ்வார்ப்பிள்ளை, சுகாதாரப் பொறுப்பாளராக திருமதி த.செல்வமணி ஆகியோர் தெரிவுசெய்யப்பட்டனர்.

மேலும் நிர்வாகசபை உறுப்பினர் தெரிவும் இடம்பெற்றது. இதில் நிர்வாகசபை உறுப்பினர்களாக பா. செல்வச்சந்திரன், ந.ரகுவரன் ஆகியோர் தெரிவாகினர். (ஸ்ரீ-2)

## பருத்தித்துறை கடற் பரப்பில்

# 10 ஆயிரம் கிலோ எடை கொண்ட இராட்சத திமிங்கிலம் கரையொதுங்கியது





(பருத்தித்துறை)

பருத்தித்துறை முனைக் கடற்பரப்பில் 10 ஆயிரம் கிலோ எடைகொண்ட இராட்சத திமிங்கில வகை மீன் ஒன்று இறந்த நிலையில் அதிகாலை 5.30 மணிக்கு கரையொதுங்கியுள்ளது.

முருகைக் கல்லில் ஒதுக்கியதைக் கண்ட மீனவர்கள் அதனைப் பலத்த சிரமத்தின் மத்தியில் கரைக்கு இழுத்து வந்தனர்.

இத் திமிங்கிலம் ஆழிக் கடலில் இருந்து வந்திருக்கலாம் எனக் கருதப்படுகிறது. இது 10ஆயிரம் கிலோ கிராம் எடை கொண்டதாகவும் 32 அடி 5அங்குலம் நீளம் கொண்டதாகவும் அதன் வால்ப்பகுதி 6அடி நீளமுடையதாகவும் 18 அடி விட்டம் கொண்டதாகவும் காணப்படுகிறது.

இத் திமிங்கிலத்தை கரைக்குக் கொண்டுவர 6 மணித்தியாலயத்திற்கு மேல் தேவைப்பட்டதாக மீனவர்கள் தெரிவித்தனர்.

இதனை நடுக்கடலில் விடுவதற்கான நடவடிக்கைகளை பருத்தித்துறைப் பொலிஸாரும் இராணுவத்தினரும் மேற்கொண்டு வருகின்றனர்.

இத் திமிங்கிலம் உக்கிப் போக 3மாதம் எடுக்குமென்றும் மீனவர்கள் தெரிவிக்கின்றனர்.

இவ்வகை மீன் ஒன்று சுமார் 35 வருடங்களுக்கு முன்னர் வடமராட்சி கடற்பரப்பில் கரையொதுங்கியதாக அப்பகுதி வயோதிப மீனவர் ஒருவர் தெரிவித்தார். (ஸ்ரீ-3,10,24,19,48,61)

# நீர்த்தாங்கி அமைக்க யுனிசெப் நிதியுதவி

(அல்வாய்)

வடமராட்சி வலயப் பாடசாலைகளில் நீர்த்தாங்கி அமைப்பதற்கு நிதியுதவி வழங்க யுனிசெப் நிறுவனம் முன்வந்துள்ளது.

இத்திட்டத்தின் கீழ் வடமராட்சி இந்து மகளிர் கல்லூரி, ஹாட்லிக் கல்லூரி, கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரியின் ஆரம்பப் பாடசாலை, ஆழியவளை சி.சி.த.க. பாடசாலை, செம்பியன்பற்று அ.த.க. பாடசாலை, உடுத்துறை மகா வித்தியாலயம், மாமுனை அ.த.க.பாடசாலை ஆகிய பாடசாலைகளுக்கு நீர்த்தாங்கி அமைப்பதற்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் வ. செல்வராஜா அறிவித்துள்ளார். (ஸ்ரீ-3-19)

# பாடசாலைகளுக்கு விளையாட்டு உபகரணங்கள் கையளிப்பு

(அல்வாய்)

வடமராட்சிகிழக்கு பாடசாலைகளில் கல்வி கற்கும் மாணவர்களின் நன்மை கருதி பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறு தொழில் அபிவிருத்தி அமைச்சர் கே.என். டக்ளஸ் தேவானந்தாவினால் விளையாட்டு உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன.

மேற்படி விளையாட்டு உபகரணங்கள் மணற்காடு றோ.க.த.க.பாடசாலை, நாகர் கோவில் மகாவித்தியாலயம், மாமுனை அ.த.க.பாடசாலை, உடுத்துறை மகாவித்தியாலயம், குடத்தனை றோ.க.த.க.பாடசாலை, குடத்தனை அ.மி.த.க.பாடசாலை, அம்பன் அ.மி.த.க.பாடசாலை, தாளையடி றோ.க.த.க. பாடசாலை, வெற்றிலைக்கேணி பரமேஸ்வரா வித்தியாலயம், மருதங்கேணி இந்து தமிழ்க் கலவன் பாடசாலை, ஆழியவளை சி.சி. த.க. பாடசாலை, செம்பியன்பற்று றோ.க.த.க. பாடசாலை, செம்பியன்பற்று அ.த.க. பாடசாலை ஆகிய பாடசாலைகளுக்கு கையளிக்கப்பட்டுள்ளன.

இதில் வலைப்பந்துகள், உதைபந்துகள், துடுப்பாட்ட பந்துகள் மற்றும் உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன. (ஸ்ரீ-3-19)


**முக்கிய அறிவித்தல்**

**மூன்று நட்சத்திர விடுதி (ஹோட்டல்) அமைப்பு தொடர்பாக பொது மக்களின் அபிப்பிராயம் கோரல்**

மேற்காணும் விடயம் தொடர்பாக, இல.34, செட்டித்தெரு, நல்லூர், யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் ஆதன உரிமையாளரால், மூன்று நட்சத்திர விடுதி அமைப்பதற்கான ஆரம்ப கட்டப் பணிகள் மேற்கொள்ள இருப்பதாக அறியத்தரப்பட்டுள்ளது. எனவே, முன்னேற்பாடு நடவடிக்கை மாநகரசபையால் எடுக்கவேண்டியுள்ளதால், இச்சூழலில் வாழ்கின்ற பொதுமக்கள் மேற்படி மூன்று நட்சத்திர விடுதி அமைப்பு தொடர்பாக தங்களது அபிப்பிராயத்தினை 15 நாட்களுக்குள் யாழ். மாநகர சபைக்கு அறியத்தருமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

திருமதி யோ.பற்குணராஜா,
மாநகர முதல்வர்,
மாநகரசபை.

(C-2323)


# மழை வெள்ளம் காரணமாக நெல் அறுவடை பாதிப்பு

(பருத்தித்துறை)

வடமராட்சி, தென்மராட்சிப் பகுதிகளில் திடீரெனப் பெய்த பலத்த மழையையடுத்து நெல் அறுவடை பாதிப்படைந்துள்ளதாக விவசாயிகள் கவலை தெரிவித்துள்ளனர்.

அநேகமான வயல்களில் அறுவடைக்கு விவசாயிகள் தயாராகி வந்தவேளை திடீரெனப் பெய்த மழையால் அறுவடை செய்ய முடியாத நிலையில் மழை வெள்ளம் வயல்களில் அதிகரித்துக் காணப்படுகிறது.

முன்பு பெய்த மழையையடுத்து வயல்களில் மழைவெள்ளம் தேங்கிநின்ற வேளையில் அறுவடை செய்ய தாமதித்து வந்த விவசாயிகளுக்கு தற்போது பெய்து வரும் மழையினால் மேலும் பாதிப்பு ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மழை தொடர்ந்து பெய்யுமானால் நெல் அறுவடை செய்ய முடியாமல் கைவிடப்பட வேண்டிய நிலை ஏற்படலாம் என விவசாயிகள் அச்சம் தெரிவிக்கின்றனர். (ஸ்ரீ-3-10)

# பரிவர்த்தனை கோபுரங்களின் உதவியின்றி கையடக்கத் தொலைபேசிகளை இயக்கலாம்

தொலைபேசிப் பரிவர்த்தனைக் கோபுரங்களின் உதவியின்றி சமிக்ஞைகளை பெறக்கூடிய புதிய கையடக்க தொலைபேசி தொழில்நுட்பத்தை கண்டுபிடித்துள்ளதாக விஞ்ஞானிகள் உரிமை கோரியுள்ளனர்.

இந்தப் புதிய தொழில்நுட்பம் அனர்த்த நிலைமைகளின் போது தொலைபேசி பரிவர்த்தனைகளை மேற்கொள்வதற்கு உறுதுணையாக அமையும் என பின்டர்ஸ் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த சர்வதேச விஞ்ஞானிகள் குழு தெரிவிக்கிறது.

மேற்படி புதிய தொழில்நுட்பம் தொலை பேசி பரிவர்த்தனைக் கோபுரங்களிலிருந்து சமிக்ஞைகளை பெறமுடியாத பிரதேசங்களுக்கு சமிக்ஞைகளைக் பெற வழிவகை செய்வதாக மேற்படி ஆய்வுக்குத் தலைமை தாங்கிய கலாநிதி போல் கார்ட்னர் ஸ்டீபன் தெரிவித்தார்.

நாங்கள் விசேட கையடக்க வன்பொருள் எதனையும் பயன்படுத்தாமல் சாதாரண தொலைபேசிகளிலேயே இந்த புதிய தொழில்நுட்ப நிகழ்ச்சித் திட்டத்தை வடிவமைத்துள்ளோம் என அவர் மேலும் கூறினார். (ஸ்ரீ-2)

# இலங்கைப் பணிப்பெண் கொலை; பிரேத பரிசோதனையில் நிரூபணம்

(கொழும்பு)

கடந்த வருடத்தின் பிற்பகுதியில் சவுதி அரேபியாவில் மரணமான இலங்கைப் பணிப் பெண்ணின் பிரேத பரிசோதனையிலிருந்து அவர் கொலை செய்யப்பட்டாரென்று தெரிய வருவதாக றியாட்டிலுள்ள இலங்கைத்தூதரகம் தெரிவித்துள்ளது.

36 வயதான புஸ்பவல்லி செல்லத்துரை கடந்த 2010 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 5 ஆம்திகதி மர்மமான முறையில் மரண மடைந்ததைத் தொடர்ந்து அவரது எஜமானி பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டார்.

கிடைக்கப்பெற்ற பிரேத பரிசோதனை அறிக்கை உத்தியோகபூர்வமானதல்லவென இலங்கைத் தூதரக அதிகாரி தெரிவித்தார். உத்தியோகபூர்வ அறிக்கை வெளிநாட்டு அமைச்சு மூலம்தான் வழங்கப்படுமெனவும் அவர் கூறினார்.

விரிவான அறிக்கை கிடைத்த பின்னரே புஸ்பவல்லி எவ்வாறு கொலை செய்யப்பட்டாரெனக் கூறமுடியுமெனவும் அந்தத் தூதரக அதிகாரி குறிப்பிட்டார்.

சவுதி அரேபியாவிலுள்ள கிழக்கு மாகாணத்திலுள்ள ஹொஃபுப் நகரில் ஒரு பிரேத சாலையில் வைக்கப்பட்டுள்ள இந்தப் பெண்ணின் சடலம் அடுத்த வாரமளவில் இலங்கைக்குக் கொண்டுவரப்படும்.

தனது சகோதரியின் மரணம் மற்றும் அது பற்றிய விசாரணை ஆகியவற்றில் காட்டிய அக் கறைக்காக எனது குடும்பம் அரசாங்கத்திற்கும் றியாட்டிலுள்ள இலங்கைத் தூதரகத்திற்கும் நன்றி தெரிவிக்கின்றது என இந்தப் பெண்ணின் சகோதரி சறோஜா தெரிவித்தார்.

இவர் பெய்ரூட்டில் பணிப்பெண்ணாகவுள்ளார். மரணமான பெண்ணின் கணவர் நான்கு வருடங்களுக்கு முன்னர் இறந்துவிட்டார். இவரது 4 பிள்ளைகளும் அவரது குடும்பத்தாரால் கவனிக்கப்படுகின்றனர். (ஸ்ரீ-2)

# ஜனாதிபதிக்கு எதிரான வழக்கு நகைச்சுவையான செயற்பாடாகும்

## அமைச்சர் மஹிந்த சமரசிங்க தெரிவிப்பு



(கொழும்பு)

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு எதிராக அமெரிக்காவில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளமை நகைச்சுவையான செயற்பாடாகும். இது குறித்து பதிலளிக்க வேண்டிய அவசியம் அரசாங்கத்திற்கு இல்லை என்று பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சரும் அரசாங்கத்தின் மனித உரிமைகளுக்கான செயற்பாட்டாளருமான மஹிந்த சமரசிங்க தெரிவித்தார்.

புலிகளுக்கு ஆதரவாக செயற்படும் அமெரிக்க வழக்கறிஞர் புரூஸ் பெய்ன் ஒரு நகைச்சுவையாளர். இந்நிலையில் இலங்கை ஜனாதிபதிக்கு எதிராக அவர் தாக்கல் செய்துள்ள வழக்கானது மிகப்பெரிய நகைச்சுவையாகும்.

எனவே, அவ்வாறான நகைச்சுவை தொடர்பில் நாங்கள் குழப்பமடைய தேவையுமில்லை என்றும் அவர் கூறினார்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு எதிராக அமெரிக்காவில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக ஏ.எப்.பி செய்தி வெளியிட்டுள்ளது. மூன்று வெவ்வேறு சந்தர்ப்பங்களில் தமது உறவினர்கள் கொல்லப்பட்டுள்ளமைக்கு எதிராக அமெரிக்காவில் வாழும் மூன்று தமிழர்கள் தாக்கல் செய்துள்ள இந்த வழக்கில் முப்பது மில்லியன் டொலர்களை நட்டஈடாக வழங்குமாறும் கோரப்பட்டுள்ளது. கொலம்பியா மாவட்ட நீதிமன்றத்தில் கடந்த வெள்ளிக்கிழமை இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இந்நிலையில் இவ்விடயம் குறித்து கருத்து வெளியிடுகையிலேயே அமைச்சர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அமைச்சர் மஹிந்த சமரசிங்க இவ்விடயம் குறித்து மேலும் கூறுகையில்,

அமெரிக்க வழக்கறிஞர் புரூஸ் பெய்ன் ஒரு நகைச்சுவையாளர். அதனை அவ்வாறு குறிப்பிடலாம். எனவே, அவரின் செயற்பாடுகள் குறித்து நாங்கள் அலட்டிக்கொள்ளவோ குழப்பமடையவோ வேண்டிய அவசியம் இல்லை. இதே வழக்கறிஞர் புரூஸ் பெய்ன் 2008 ஆம் ஆண்டில் அமெரிக்காவின் வோஷிங்டன் போஸ்ட் பத்திரிகையில் ஒரு ஆக்கத்தை எழுதினார். அந்தக் கட்டுரையில் வடக்கு, கிழக்கில் தனிநாடு அமைய வேண்டும் என்ற கருத்தை வலியுறுத்தியிருந்தார்.

அந்தளவுக்கு புலிகளுக்கு ஆதரவாக அவர் செயற்பட்டு வருகின்றார். அந்த வகையில் இவர் நீண்டகாலமாக புலிகளுக்கு ஆதரவாக வெயற்பட்டு வந்தவர். இந்த வழக்கறிஞர் புலிகளுக்கு சார்பானவர் என்றும் ஒத்துழைப்பு வழங்குபவர் என்றும் சர்வதேச மட்டத்தில் அனைவருக்கும் தெரியும்.

எனவே, இவ்வாறான புலிகளின் ஆதரவு செயற்பாட்டாளர் ஒருவர் மேற்கொண்டுள்ள நடவடிக்கை தொடர்பில் நாங்கள் அலட்டிக் கொள் ளவோ குழப்ப மடையவோ வேண்டிய தேவை இல்லை. இவ்வாறானவர்களின் செயற் பாடுக ளுக்கு பதிலளித்து எமது காலத்தை வீணடிக்க வேண்டிய அவசியமும்இல்லை என்றார். (ஸ்ரீ-2)

# கிழக்கு மாகாணத்தில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிதியுதவி

## யாழ்.மாநகரசபை தீர்மானம்

(யாழ்ப்பாணம்)

கிழக்கு மர்காணத்தில் அண்மையில் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கு காரணமாக பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிதியுதவி வழங்க யாழ். மாநகரசபையில் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

யாழ். மாநகர சபையில் நேற்று இடம் பெற்ற மாதாந்த பொதுக் கூட்டத்தின் போதே இத் தீர்மானம் எடுக்கப்பட்டது.

இது தொடர்பாக யாழ். மாநகரசபை உறுப்பினர் கே.விந்தன் வாய் மொழி மூல பிரேரணையை முன் வைத்தார்.

இப்பிரேரணை யாழ். மாநகரசபை பிரதி முதல்வர் இ. இளங்கோவினால் ஆமோதிக்கப்பட்டதைத் தொடர்ந்து யாழ். அரசாங்க அதிபர் ஊடாக இந்த நிதி அனுப்பி வைக்க தீர்மானம் மேற்கொள்ளப் பட்டது. (ஸ்ரீ-2-6)




ஜெய்குருதேவ்

ஸ்ரீஸ்ரீ ரவிசங்கர் குருஜி அவர்களின்

THE ART OF LIVING

**வாழும் கலைப்பயிற்சி**

சுதர்சன கிரியா, மூச்சுப்பயிற்சி, தியானம், யோகா ஆரம்பம்

காலம்:- இன்று (01.02.2011) செவ்வாய்க்கிழமை
இடம்:- இல. 132, பலாலி வீதி, யாழ்ப்பாணம் (அம்மன் வீதி அருகில்)
நேரம்:- மாலை 4.50 மணி

(ஆ)

அனைவரையும் தவறாது சமுகமளிக்கும் வண்ணம் கேட்டுக்கொள்கின்றோம்.

தொ.பே: 0770474757, 0777222133, 0779492589


# மரண அறிவித்தல்கள்

## சரவணமுத்து அண்ணாமலை

**(இளைப்பாறிய கிளை மூகாமையாளர் அச்சுவேலி ப.நோ.கூ.சங்கம்)**



நெல்லியோடை, அச்சுவேலி தெற்கைப் பிறப்பிடமாகக் கொண்ட சரவணமுத்து அண்ணாமலை 29.01.2011 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சரவணமுத்து மனோன்மணி தம்பதியரின் புத்திரனும் காலஞ்சென்ற தியாகராசா-இரத்தினவல்லி தம்பதியரின் மருமகனும் புனிதவதியின் அன்புக்கணவரும் காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை, பாலசுப்பிரமணியம், தையல்நாயகி ஆகியோரின் சகோதரனும் கலைமதி (கனடா), கலைச்செல்வன் (கணக்காளர், பிரதேச செயலகம், வவுனியா), கலைவாணி (ஆசிரியை, அச்சுவேலி சரஸ்வதி வித்தியாலயம் ), கலைச்செல்வி (ஆசிரியை, நீர்கொழும்பு விஜயரத்தினம் மகா வித்தியாலயம், கலையோதி (ஆசிரியை, முள்ளியவளை வித்தியானந்தா கல்லூரி) ஆகியோரின் பாசமிகு தந்தையும் வரதராஜன், பிறேமிளா, வைகுந்தநாதன், ஜெயகாந்தன், யோன்சன் ஆகியோரின் பாசமிகு மாமனாரும் ஆதித்தியன், ஆரபி, கலைநாதன், அர்ச்சனா, விவர்னிகா, நதுமிதா, சஞ்சய், சுஜித், அபினன் ஆகியோரின் பாசமிகு பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 01.02.2011 இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் ஒரு மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று ஆவரங்கால் கருதடி இந்து மயானத்தில் பூதவுடல் தகனஞ் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்

0783257566, 0771372259 (சி-1073)

## கதிர்காமு வினாயகம்பிள்ளை

பிராமண வீதி, தும்பளையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கதிர்காமு வினாயகம்பிள்ளை நேற்று முன்தினம் (30.01.2011) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சிவயோகத்தின் அன்புக் கணவரும் செல்வேந்திரம், சுமதி காலஞ்சென்ற நாகேந்திரம் மற்றும் ஜெகதாம்பாள், ஜெயராணி ஆகியோரின் தந்தையுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (31.01.2011) திங்கட்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் பிற்பகல் 4.00 மணியளவில் தகனஞ் செய்யப்பட்டது.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்: பிள்ளைகள்.

தொ.பே: 021 226 4486 (சி-1074)

# ஜீவனோபாயத் தொழிலின்றி வாழும் கிளிநொச்சி மாவட்ட கடற்றொழிலாளர்கள்

யுத்தகாலத்தில் பல்வேறுபட்ட பிரச்சினைகளிற்கெல்லாம் முகம் கொடுத்தவாறு தமது ஜீவனோபாயத் தொழிலினை மேற்கொண்ட கிளிநொச்சி மாவட்ட கடற்றொழிலாளர்கள் போர் ஓய்ந்த அமைதிச் சூழலிலும் அவல வாழ்வு வாழ்ந்து வருகின்றனர்.

யுத்தம் நடைபெற்ற காலப்பகுதியில் எரிபொருள் தட்டுப்பாடு, வெளியிணைப்பு இயந்திரம், படகுகள் போன்றவற்றை பெறமுடியாத சூழல், கடற்படையினரின் கடற்றொழிலாளர்கள் மீதான தாக்குதல்கள், புலிகள் அமைப்பின் பாஸ் நடைமுறைகள் எனப் பல்வேறுபட்ட பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்தவாறு தங்கள்தொழிலினை மேற் கொண்டு வந்தனர்.

ஆனால் இறுதிப் போர் நடவடிக்கையின் பின்னர் இயல்பு நிலை தோன்றிவிட்டதாக கூறப்படும்போது மீள்குடியேற்றம் செய்யப்பட்ட கடற்றொழிலினை நம்பி வாழும் குடும்பங்களிற்கு ஆழ்கடலிற்குச் சென்று கடற்றொழிலினை மேற்கொள்ள அனுமதி வழங்கப்படவில்லை. இதனால் இக் குடும்பங்கள் சொல்லொணாத் துன்பங்களை அனுபவித்து வருகின்றனர்.

உலக உணவுத் திட்டத்தால் வழங்கப்படும் நிவாரணப் பொருட்களும் ஆறு மாதத்துடன் நிறுத்தப்பட்டுள்ளது. இவ்வாறு வழங்கப்படும் நிவாரணப் பொருட்களில் கூட அளவுகளினைக் குறைத்தல், குறிப்பிட்ட பொருட்களினை நிறுத்தல், நிறைகுறைப்பு என்ற தடைகளைத் தாண்டிக் கிடைக்கும் நிவாரணப் பொருட்களும் உணவுத் தேவைக்கு போதுமானதல்ல.

கிளிநொச்சி மாவட்டத்தில், கண்டாவளை பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட கரைச்சி வடக்கு கடற்தொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தில் கல்லாறு, கண்ணகிநகர், தருமபுரம், நாகேந்திரபுரம், தட்டுவன்கொட்டி, உமையாள்புரம் - பரந்தன், காஞ்சிபுரம்-குமரபுரம் கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கம் என ஏழு கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்கள் அங்கம் பெற்றுள்ளன.

கரைச்சி வடக்கு கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்திற்குட்பட்ட பகுதிகளில் ஆயிரத்து 357 கடற்றொழிலாளர் குடும்பங்கள் வாழ்ந்து வருகின்றன. இவற்றுள் கல்லாறு கிராமத்தில் 175 கடற்றொழிலாளர் குடும்பங்களும், கண்ணகிநகர் கிராமத்தில் 82 குடும்பங்களும் தருமபுரம் கிராமத்தில் 275 குடும்பங்களும், நாகேந்திரபுரம் கிராமத்தில் 245 குடும்பங்களும், தட்டுவன் கொட்டி கிராமத்தில் 345 குடும்பங்களும், உமையாள்புரம் -பரந்தன் கிராமங்களில் 110 குடும்பங்களும், காஞ்சிபுரம் -குமாரபுரம் கிராமங்களில் 125 குடும்பங்களும் கடற்தொழிலினை நம்பி வாழ்ந்து வருகின்றன.

கல்லாறு, கண்ணகிநகர், தருமபுரம், நாகேந்திரபுரம், தட்டுவன்கொட்டி ஆகிய கிராமங்களினைச் சேர்ந்த கடற்றொழிலாளர் குடும்பங்கள் பேய்ப்பாறை பிட்டி, சுண்டிக்குளம், பூனைத் தொடுவாய் ஆகிய கடல்களில் தமது தொழிலினை மேற்கொண்டு வந்தனர். தற்போது இக் கடல் பகுதிகளின் கடற்றொழிலினை மேற்கொள்ள அனுமதி வழங்கப்படவில்லை.

கடற்றொழிலினை மேற்கொள்வதற்கு கடலை அண்மித்த தரைப்பகுதிகளில் மிதிவெடிகள் மற்றும் வெடிபொருட்கள் அகற்றப்படாமை காரணமாக குறிப்பிடப்படுகின்றது. இது தொடர்பாக சம்பந்தப்பட்ட அதிகாரிகளின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டபோதும் எதுவிதமான ஆக்கபூர்வமான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படவில்லை.

வெடிபொருட்களின் அபாயம் காணப்படுவதாகக் கூறப்படும் பிரதேசங்கள் எங்கும் இராணுவத்திற்கு தெரிந்தும், தெரியாமலும் பலநூற்றுக்கணக்கானோர் சென்று வருகின்றனர். ஆனால் இதுவரையில் எவருமே இவ் வெடிபொருட்கள், மிதிவெடிகளினால் பாதிப்படையவில்லையென்பது நோக்கத்தக்கது.

தமது ஜீவனோபாய தொழிலினை மேற்கொள்ளமுடியாத நிலையில், பல்வேறுபட்ட சமூகவிரோத செயற்பாடுகளில் ஈடுபட்டு சிலர் தமது வாழ்க்கையை நகர்த்த வேண்டிய துர்ப்பாக்கிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர். இவ்வாறான சமூகவிரோத செயற்பாடுகளால் பல குடும்பங்கள் பாதிக்கப்படும் புறச்சூழல் தோற்றுவிக்கப்படுகின்றது. இதைவிட கலாசார சீரழிவுகளும் நிகழ்ந்தேறுகின்றன.

இதுதவிர தட்டுவன்கொட்டி, உமையாள்புரம், பரந்தன், காஞ்சி புரம், குமாரபுரம் ஆகிய கிராமங்களைச் சோந்த கடற்றொழிலாளர்களும் கடற்றொழிலினை மேற்கொள்ள அனுமதி வழங்கப்படவில்லை. இக் கிராமங்களைச் சோந்த கடற்றொழிலாளர்கள் கிளாலி, சுட்டதீவு போன்ற கடற்பகுதிகளில் கடற்றொழிலினை மேற்கொண்டு வந்தனர். தற்போது இக் கடற்றொழிலாளர்களுக்கும் மிதிவெடி அபாயத்தினை காரணம் காட்டி தொழில் செய்வதற்கான அனுமதி மறுக்கப்பட்டுள்ளது.

கடற்றொழிலினை மேற்கொள்ள அனுமதி மறுக்கப்படுவதால் கடற்றொழிலாளர்களின் வாழ்வாதாரப் பிரச்சினைகளும், சமூகப் பிரச்சினைகளும் தோன்றுவதற்கு ஏதுவாகின்றது. எனவே சம்பந்தப்பட்ட படைத்துறை மற்றும் அரச அதிகாரிகள் இம் மக்களது வாழ்வாதாரப் பிரச்சினைகளை நீக்குவதற்கு துரிதமான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டியது மறுக்கமுடியாததும், அவசியமானதும், அவசர தேவையாகவும் உள்ளது. (ஸ்ரீ-3-30)




# தனியார் பேருந்து சேவையில் கூடுதல் கட்டணம் அறவீடு


(கிளிநொச்சி)

யாழ்ப்பாணத்தில் இருந்து பிற மாவட்டங்களிற்கு போக்குவரத்துச் சேவையில் ஈடுபடும் தனியார் பேருந்துகளில் கிளிநொச்சி, வவுனியா ஆகிய இடங்களிற்கு கூடுத லான கட்டணம் அறவிடப்படுவதாக பயணிகள் தெரிவித்துள்ளனர்.

யாழ்ப்பாணத்தில் இருந்து கிளிநொச்சிக்கு 70 ரூபாவும் யாழ்ப்பாணத்தில் இருந்து வவுனியாவிற்கு 140 ரூபாவுமே தனியார் பேருந்துக் கட்டணம் நடைமுறையில் உள்ளது. அண்மையில் மாலை வேளையில் சேவையில் ஈடுபடும் தனியார் பேருந்து ஒன்றில் கிளிநொச்சிக்கு 100 ரூபாவும் வவுனியாவிற்கு 200 ரூபாவும் அறவிடப்பட்டதாக பொதுமக்கள் தெரிவித்தனர்.

எனவே, இதுவிடயத்தில் யாழ்ப்பாணம் தனியார் பேருந்து உரிமையாளர் கழகத்தினர் உரிய நடைமுறைகளைப் பின்பற்ற வேண்டுமென அவர்கள் கேட்டுள்ளனர். (ஸ்ரீ-3-30)

# சித்திரப் போட்டியில் முதல் மூன்று இடங்களைப் பெற்றோர் கௌரவிப்பு



கிளிநொச்சி)

'சுகமாக வாழ்வோம்' எனும் கருப்பொருளில் வடமாகாணக் கல்வி அமைச்சினால் பாடசாலைகளிற்கிடையே நடாத்தப்பட்ட சித்திரப் போட்டியில் மாவட்ட மட்டத்தில் முதல் மூன்று நிலைகளினையும் பெற்ற மாணவர்கள் பணப்பரிசில்கள் வழங்கிக் கௌரவிக்கப்பட்டதுடன் சான்றிதழ்களும் வழங்கப்படவுள்ளன.

கிளிநொச்சி கல்வி வலயத்தில் முதல் மூன்று நிலைகளினையும் பெற்ற மாணவர்களிற்கான பரிசளிப்பு நிகழ்வு கடந்த 25 ஆம் திகதி நண்பகல் 12 மணியளவில் கிளி/ பிரமந்தனாறு மகா வித்தியாலயத்தில் அதிபர் கி.விக்னராஜா தலைமையில் நடைபெற்றது.

கிளிநொச்சி கல்வி வலயத்தில் முதலாவது நிலையினைப் பெற்ற பெ.அற்புத குமார் (தரம் 11) இற்கு ஐயாயிரம் ரூபா பணப் பரிசிலும் இரண்டாவது நிலை யினைப் பெற்ற சி.சிந்துஜன் (தரம் 10) இற்கு மூவாயிரம் ரூபா பணப் பரிசி லும் மூன்றாவது நிலை யினைப் பெற்ற சுதர்சன் (தரம் 10) இற்கு இரண்டாயிரம் ரூபா பணப்பரிசிலும் நிகழ் வில் கலந்து கொண்ட சிறப்பு விருந்தினர்களால் வழங்க வைக்கப்பட்டது. அத்துடன் இவர்களிற் கான சான்றிதழ்கள் வழங்கப்படவுள்ளன.

இதேவேளை மாவட்ட மட்டத்தில் முதல் மூன்று நிலைகளினைப் பெற்ற மாணவர்கள் மாகாண மட்ட சித்திரப் போட்டிக்கு தெரிவாகியுள்ளனர். கிளிநொச்சி கல்வி வலயத்தில் ஒரே பாடசாலை மூன்று நிலைகளினையும் தனதாக்கியுள்ளதுடன் கிளி/ பிரமந்தனாறு மகா வித்தியாலயத்தின் சித்திரபாட ஆசிரியர் பி. நிசாந்தன் இம் மாணவர்களினை சிறப்பான முறையில் வழிகாட்டியுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது.

இந்நிகழ்வில் கிளிநொச்சி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் க.முருகவேள், உதவிக் கல்விப் பணிப்பாளர் இ. இரட்ணகுமார் மற்றும் ஆசிரிய ஆலோசகர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர். (ஸ்ரீ-3-30)

# நெல்வயல்களில் கழுத்துக்குத்தி நோய்த்தாக்கம் அதிகரிப்பு

(கிளிநொச்சி)

அண்மையில் பெய்த பருவகால மழை காரணமாக கிளிநொச்சி மாவட்டத்தில் நெல் வயல்களில் கழுத்துக்குத்தி நோய்த்தாக்கம் அதிகரித்து வருவதாக விவசாயிகள் தெரிவித்துள்ளனர்.

கிளிநொச்சி மாவட்டத்தில் வட்டக்கச்சி, இராமநாதபுரம், புளியம்பொக்கணை, மகிழங்காடு, பெரியகுளம் ஆகிய இடங்களில் இந் நோய்த்தாக்கம் கூடுதலாகக் காணப்படுகின்றது.

நெற்பயிரின் இலைகளில் கண் வடிவ புள்ளிகள் தோன்றுவதுடன், நெற்கதிர்களின் மத்தியில் நரைநிறமாகவும், ஏனைய பகுதிகள் கபில நிறமாகவும் காணப்படலாம். இந் நோய் காணப்படும் வயல்நிலங்களில் வழிந்தோடும் நீரில் இருந்து ஏனைய வயல்களிற்கும் பரவாமல் தடுப்பதற்கு நோய்த்தாக்கத்திற்கு உள்ளான வயல்களில் இருந்து நீர் செல்வதைத் தடுத்தல் வேண்டும்.

இந்நோயைக் கட்டுப்பாட்டில் கொண்டு வருவதற்கு சிபார்சு செய்யப்பட்ட பங்கசு நாசினிகளான பவஸ்ரின், புல்லெற், பொலிகோர், கினோசான் போன்றவற்றின் ஒரு பங்கசு நாசினியை நோய்த் தாக்கத்திற்குள்ளான வயலிற்கும் சூழவுள்ள வயல்களிற்கும் விசிறல் வேண்டும்.

இது தொடர்பான மேலதிக விபரங்களை பகுதி விவசாயப் போதனாசிரியர்கள் மூலமாகவும் பெற்றுக்கொள்ள முடியும். (ஸ்ரீ-3-30)

# தையல், மரவேலை பயிற்சிநெறிக்கு விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது

(கிளிநொச்சி)

வேலைவாய்ப்பற்ற இளைஞர், யுவதிகளிற்கு தொழில்வாய்ப்பை ஏற்படுத்தும் நோக்கில் கிளிநொச்சி மகாதேவா ஆச்சிரம சைவச் சிறுவர் இல்லத்தில் தையல், மரவேலை பயிற்சிநெறிகள் ஆரம்பிக்கப்படவுள்ளதாக மாகாண பொதுநிர்வாக பிரதி பிரதம செயலாளரும், மகாதேவா ஆச்சிரம சைவச் சிறுவர் இல்லத்தின் தலைவருமான தி.இராசநாயகம் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில், 18 தொடக்கம் 38 வயது வரையானோர் இப் பயிற்சி நெறியினை தொடரலாம் எனவும், தையல் பயிற்சி நெறிகள் 50 கற்கையாளர்களும் மரவேலைப்பயிற்சி நெறிக்கு 50 கற்கையாளர்களும் இணைத்துக் கொள்ளப்படவுள்ளனர். பயிற்சிக் காலத்தில் உதவுதொகை வழங்கப்படுவதுடன், பயிற்சி நிறைவில் உபகரணத் தொகுதியும் தேசிய மட்டத்திலான தரச் சான்றிதழும் வழங்கப்படவுள்ளன.

இப்பயிற்சி நெறிகளில் கலந்துகொள்ள ஆர்வமுடையவர்கள் எதிர்வரும் 5 ஆம் திகதி சனிக்கிழமைக்கு முன்னதாக தங்கள் விபரங்கள் அடங்கிய சுயவிபரப் படிவங்களை தலைவர், குருகுலம், மகாதேவா சைவச் சிறுவர் இல்லம், ஜெயந்திநகர், கிளிநொச்சி எனும் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின் றனர். முதலில் கிடைக்கப்பெறும் விண்ணப்பப் படிவங்களே கவனத்திலெடுக்கப்படும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ஸ்ரீ-3-30)

# வட்டக்கச்சி பிரதேச வைத்தியசாலையில் வெளிநோயாளர் பிரிவிற்கான சிகிச்சைகள்

(கிளிநொச்சி)

வட்டக்கச்சி பிரதேச வைத்தியசாலையில் வாரத்தின் இரண்டு நாட்கள் வெளிநோயாளர் பிரிவிற்கான சிகிச்சைகள் வழங்கப்பட்டு வருவதாக வைத்தியசாலை வட்டாரங்கள்மூலம் அறியமுடிகின்றது.

வட்டக்கச்சிப் பிரதேசத்தில் மக்கள் முழுமையாக மீள்குடியமர்ந்த நிலையில், வாரத்தில் இரண்டு நாட்கள் மாலை வேளையில் மட்டும் வெளிநோயாளர் பிரிவு செயற்பட்டு வந்தது. இதனால் சாதாரண நோய்கள், காயங்கள் போன்றவற்றிற்கு சிகிச்சையினைப் பெறுவதற்கு பல கிலோமீற்றர் தொலைவிலுள்ள கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலைக்கே செல்லவேணடிய நிலை காணப்பட்டது.

தற்போது வாரத்தில் திங்கள், வெள்ளி ஆகிய இருநாட்கள் காலை 9 மணி தொடக்கம் மாலை 4 மணிவரை வெளிநோயாளர் பிரிவில் சிகிச்சையளிக்கப்பட்டு வருவதால் வட்டக்கச்சி, இராமநாதபுரம், சிவிக்சென்ரர், மாயவனூர், புதுக்காடு ஆகிய இடங்களைச் சேர்ந்த பொதுமக்கள் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

சாதாரண நோய்கள், காயங்களிற்கு தற்போது சிகிச்சையளிக்கப்பட்டு வருவதுடன், கடந்த டிசம்பர் மாதம் அறுநூறிற்கு மேற்பட்டோர் வெளிநோயாளர் பிரிவில் சிகிச்சை பெற்றுள்ளனர்.


இதேவேளை வட்டக்கச்சி - கிளிநொச்சி பிரதான வீதி மிக மோசமாகச் சேதமடைந்து காணப்படுவதால் அவசர நோயாளர்களை நோயாளர் காவு வண்டி மூலம் கொண்டு செல்வதில் மிகுந்த சிரமங்களை எதிர்கொள்ள வேண்டிய துர்ப்பாக்கிய நிலை காணப்படுகின்றது. (ஸ்ரீ-3-30)



# கள்ளிக்காட்டு

# இதிகாசம்

29



கவிப்பேரரசு வைரமுத்து

ஆத்துத் தண்ணிய அடிச்சு அடிச்சுக் கதற்றான். அழுது பொலம்பி என்ன பண்ண? போன உசுரு வரவா போகுது? தாங்கித் தாங்கி வளத்த தங்கமாங்கனிய இனி நாய் திங்கப் போகுதோ? நரி திங்கப் போகுதோ? மீன் திங்கப் போகுதோ? யாரு கண்டா? "முத்துக்கண்ணி! முத்துக்கண்ணி! ஒன்னத் தண்ணியில விடவா தாயி அண்ணனாப் பொறந்தேன்னு கத்திக் கதறி, இரு தாயி! இரு! நானும் வாரேன்னு இடுப்பிலயிருந்து கத்திய எடுக்கிறான். தந்தலையத் தானே அறுத்துக்கிட்டுத் தலவேற முண்டம் வேறயா அவனும் ஆத்தோடயே போயிட்டான்."

மொச்சைக்காய் உரிப்பதை நிறுத்திவிட்டு மொக்கராசு விக்கிவிக்கி அழ ஆரம்பித்தான், மொச்சைக்காய் பிசுபிசுக்கும் கையோடு கண்ணையும் துடைத்துக் கொண்டு "அப்புறம்?" என்றான்.

"ஊர் அழிஞ்சுபோச்சு; வீடு வாசல் இல்ல... மாடு கண்டு இல்ல... குடிதண்ணிக் கெணத்துல விசத்தைக் கலந்துட்டுப் போயிட்டாங்க பாவிக. ஒரு ஈகாக்கா குருவி இல்ல. ஊரு காலியாயிருச்சு. சாமியே வந்து சாபங்குடுத்திட்டுப் போனமாதிரி ஒரு உத்தமப் பொண்ணு பொறந்து ஊர் அழிஞ்சு போச்சு."

"அண்ணந்தம்பி அத்தனபேரும் செத்துப் போயிட்டாகளா?"

"அதுல செத்தவங்க போகத் தப்பிப் பொழச்சவங்கதான் ஊர் ஊரா அலஞ்சு தலை மறைவாத் திரிஞ்சு கடைசியா இந்தக் கள்ளிக்காட்டுக்கு வந்து சேந்திருக்காங்க."

"ஊரு இப்பவே இந்த லச்சணம்... அப்ப எப்படி இருந்திருக்கும்?"

"பொட்டக்காடக் கெடந்திருக்கும். புல்லு மொளச்சுக் கெடந்திருக்கும். பாம்பு பல்லி பூச்சிபட்டைய வெரட்டி வீடுகட்டி இங்கயே கரட்டுக்காட்ட உழுது கஞ்சி குடிச்சிருந்திருப்பாங்க. முத்துக்கண்ணி தெய்வமாப் போயிட்டா. அவ பேர்லதான் முத்தாலம்மன் கோயில்கட்டிப் பாவம் தீரக் கும்புட்டாங்க பாவிக. இதானப்பா பொன்னு வெளையிற பூமியவிட்டு இந்தக் கள்ளிக் காட்டுக்கு வந்த கத. தாத்தன் பாட்டன் சொல்லிக் கேட்ருக்கேன். இதுல எம்புட்டு உம்மையோ? எம்புட்டுப் பொய்யோ?"

"எல்லாமே பொய்யாவுமிருக்காது. உம்மை இல்லாமையும் இருக்காது. தாத்தா ஒண்ணு சொல்லட்டுமா?"

"என்னடா சொல்லப்போற? ஒருமரக்கா மொச்சக்காய உரிச்சுத் தின்டுபுட்டுக் கடைசில உப்பு இல்லேன்னு கத சொல்லப்போறியா?"

"அது இல்ல தாத்தா! அந்தப் பொம்புளப்புள்ளையத் தண்ணியில விட்ட பாவந்தான் நாம தண்ணியில்லாத காட்ல கெடக்கமோ?"

"இருந்தாலும் இருக்கும்பா. தென வெதைச்சாத் தென அறுக்கணும். வென வெதைச்சா வென அறுக்கணுமில்ல. ஆனா நம்மூர்ல தண்ணிக்குப் பஞ்சம்னா சொல்ற? குடி தண்ணிக்கு வேணும்னாப் பஞ்சமிருக்காலம். 'குடி' மக்க தண்ணிக்குப் பஞ்ச மில்ல..." என்று சொல்லி அவராய்ச் சிரித்துக் கொண்டார் பேயத்தேவர். அந்தச் சிரிப்புக்குக் கீழே சுருள்சுருளாய் சோகமிருந்தது.

பொய்யில்லை அவர் சொன்னது. அதே நேரத்தில் முன்ஜாமத்தின் கனத்த இருட்டில் சகல சரக்குகளையும் மொத்தம் சேர்துக் கொண்டிருந்தான் சின்னு, கன்னிமார்ஓடையில் கள்ளச் சாராயம் காய்ச்ச.

பால் திரியத் தொடங்கும் நேரம் பாத்திரத்துக்குத் தெரியாது என்பது போல, பிள்ளைகள் கெடத் தொடங்கும் நேரமும் பெற்றவர்களுக்குத் தெரிவதில்லை. 'ஏதோ போறான்... ஏதோ வாரான்' என்று நினைத்துக் கொண்டிருப்பார்கள். ஆனால் அவன் "எங்க போறான் எப்ப வாரான்" என்பதைப் பற்றிப் பெருசுக பெருசுபடுத்துதில்லை. அங்கேதான் ஆரம்பமாகிறது கோளாறு.

சுரைக்காய் பீடியிலிருந்து சின்னு கஞ்சாவுக்குத் தாவுகிறவரைக்கும் அவன் ஓர் அப்பிராணி என்றுதான் பெரும்போக்காக நினைத்திருந்தார் பேயத்தேவர். என்னைக்கு மொதமொதலா அண்டாவத் தூக்கிட்டுப்போயி அம்பலகாரர் வீட்ல அடகுவெச்சானோ அன்னைக்குத் தான் வெளியவந்தது அவன் வெவகாரம்.

ஒண்ணு... அன்புக்குக் கட்டுப்படணும்; இல்லட்டி... அடிதடிக்குக் கட்டுப்படணும். அவன் ரெண்டுக்குமே கட்டுப்படல. எப்பப் பாத்தாலும் மொரண்டு; எல்லார் கூடயும் சண்ட. ஒருத்தர் பேச்சையும் கேக்காம உச்சிக்கரட்ல போயிப் படுத்துக்கிட்டான். கரட்டு உச்சியில் சாலி மரத்துக்குக் கீழே ஒரு கல்லுக்குழி இருந்தது. வெயிலுக்கும் மழைக்கும் இது அணவா ஆதரவா இருந்தது. ஒரு ஆள் இடக்கு மடக்காக முடக்கிப் படுத்துக் கொள்ள அதில் இடமிருந்தது.

உள்ளே பரம்பரையா அனுபோக பாத்தியதை கொண்டிருந்த பாம்பு, பல்லி, பூரான்களைக் காலி செய்துவிட்டு அங்கே வசிக்க ஆரம்பித்தான் சின்னு. சில நேரத்தில் ஏதோ ஞாபகத்தில் பழைய வீடுதேடி வந்து பாம்புகளும் அவனோடு படுத்திருப்பதுண்டு. 'நல்ல' பாம்புக; 'போ'ன்னாப்போயிருங்க.

ஆடு மாடு மேய்க்க வருபவர்களின் தூக்குச்சடி திருடிக் களவாணிக் கஞ்சி குடித்தான் சின்னு. பாறைப் பள்ளத்தில் கிடந்த மழைத்தண்ணீர்தான் அவன்குடிக்க-குளிக்க-துவைக்க. பொழுது வருவது போவதெல்லாம் தெரியாது அவனுக்கு. பகல் ராத்திரி இரண்டையும் கஞ்சாவுக்குள் புதைத்துவிட்டான். பசியை மட்டும் புதைக்க முடியவில்லை. ஓர் ஆட்டைப் பிடித்து உரித்து 'உப்புகண்டம்' போட்டுக்கொண்டால் ஒருவாரம் தள்ளலாம் என்று முடிவெடுத் தான். காட்டுக்குள்ளிருக்கும் நரி, கோழிபிடிக்க நாட்டுக்குள் வருவது மாதிரி கரட்டிலிருந்து இரை தேட இறங்கினான்.

ஆடுகளின் நோக்கும் போக்கும் மேய்ச்சல் விவரங்களும் அத்துபடி அவனுக்கு. ஏறுவெயிலில் மஞ்சம் பட்டிக் கரட்டில்மேயும் மந்தையாடுகள் வெயில் தாழ பன்னயாங்கொளத்துக்குத் தண்ணி குடிக்கப் போகுங்க. செவத்தவீரன் காட்டு மேட்டுல ஏறிப் பள்ளத்துல எறங்குங்க. அது உச்சிமேடு. அந்தப்பக்கம் இருக்கறது இந்தப் பக்கம் தெரியாது. இந்தப்பக்கம் இருக்கறது அந்தப் பக்கம் தெரியாது. மேட்டு எறக்கத்துல பொத்தக்கள்ளிப் புதருக்குள்ள கம்முன்னு ஒக்காந்தான் சின்னு. மூளைக்குள்ள சுளீர்ன்னு ஏர்றமாதிரி ஒரு இழு இழுத்தான் கஞ்சாவ.

"ம்மே!'... ம்மே!'... ம்மம்மே!'..."

ஆடுகளின் சங்கீதம் ஆரம்பித்துவிட்டது. 'வாங்கடி வாங்க.' ஆடு களவாணத் தயாராய்ப் பொத்தக் கள்ளிக்குள் பம்மினான் சின்னு. ஆடுகள் மந்தையாய் வந்தாலும் ஒரு ஆடுதான் முன்னால் வரும். மிச்ச ஆடுகள் ரெண்டு நாலு ஆறு என்று வரிசையாய்ப் பின்னால் வரும். சின்னு பம்மியிருப்பது வசதியான இடம்.


மேய்ப்பவனுக்கு ஆடு ஏறுவது தெரியும்; இறங்குவது தெரியாது. முதல் ஆடு வந்ததும் இழுத்து அமுக்கிப் பிடித்துப் பொத்தக்கள்ளிக்குள் படுத்துக் கொண்டால் மந்தைகடந்ததும் சாவதானமாகத் தூக்கிக்கொண்டு போகலாம். யாருக்கும் தெரியாது. அதுல ஒரே ஒரு சிக்கல் இருக்கு. முதல் ஆடு செம்மறி ஆடா இருந்தாச் சிக்கல் இல்ல; கத்தாது; சொன்னபடி கேக்கும்; சொந்தக்காரனாயிடும். வெள்ளாடாயிருந்தா வெவகாரந்தான். அது கத்தும்; காட்டிக் கொடுத்திரும். வர்றது செம்மறி ஆடோ? வெள்ளாடோ? சரி! சாமி விட்டவழி. பேயத்தேவரும் அழகம்மாளும் என்னைப் பெத்திநேரம் நல்லதென்னா எனக்குச் செம்மறி ஆடு; இல்ல வெள்ளாடுதான்.

ஆடுகளின் சத்தமும் குளம்போசையும், ஆட்டு வாசனையும் நெருஞ்க நெருங்கக் காரியமே கண்ணானான் சின்னு. இந்தா! இந்தா! ஏறுது... ஏறுது... வருது... வந்திருச்சு... அப்பன் ஆத்தா என்னைப் பெத்த நேரஞ்சரியில்ல. மூஞ்சிகாட்டிய முதல் ஆடு வெள்ளாடு; வேறவழியில்ல; முதல் ஆட்டைத் தான் தூக்க வேண்டும். அது இரண்டாம் ஆட்டுக்கும் தெரியக்கூடாது. முதல் ஆட்டைத் தவற விட்டு இரண்டாம் ஆட்டைத் தூக்கினால் அது கத்திக் கதறி 'இந்தா இவன்தான்'னு காட்டிக் குடுத்திரும்.


கண்ணிமைக்கும் நேரத்தில் பொத்தக்கள்ளிப் புதருக்குள்ளிருந்து கைவிட்டு விசுக்கென்று இழுத்தான் வெள்ளாட்டை, அது நிலைகுலைந்து கத்தியது. 'யாத்தே! பொழப்பக் கெடுத்திரும் போலிருக்கே.' அவன் சற்றும் யோசிக்கவில்லை, ஆட்டை இழுத்து மடியில்போட்டுச் சட்டென்று குனிந்து சங்கைக் கடித்தான்; சத்தம் குறைத்தான். தங்கள் 'முன்னோடி' புதருக்குள் மூச்சற்றுக் கிடக்கிறது என்பதை அறியாமல் கசகசவென்று கடந்துபோனது மந்தை.

(வளரும்)









பருத்தித்துறை சென்.தோமஸ் றோமன் கத்தோலிக்க பெண்கள் பாடசாலையில் தரம்1 மாணவர்களின் கால்கோள்விழா அண்மையில் நடைபெற்றது. இந் நிகழ்வில் அருட்சகோதரன் அன்ரனி சுரேந்திரகுமார் மாணவருக்கு இறையாசீர் வழங்குவதையும் அருகில் பாடசாலை அதிபர் அருட்சகோதரி ஜெயநாயகி நிற்பதையும் தரம் 2 மாணவர்களின் கலை நிகழ்வையும் நிகழ்வில் கலந்துகொண்டோரையும் படங்களில் காணலாம்.(படங்கள்:-அல்வாய் செய்தியாளர்)

## விலங்கு விசர்நோய் தடுப்பூசி ஏற்றல்

யாழ்ப்பாணம் மாநகரசபை எல்லைக்குள் அமைந்த கொழும்புத்துறை பொதுச் சுகாதாரப் பரிசோதகர் பிரிவுக்குட்பட்ட வளர்ப்பு நாய்களுக்கு விலங்கு விசர் நோய்த் தடுப்பூசி ஏற்றப்படவுள்ளது. இதில் நாளை புதன் கிழமை காலை 9 மணி தொடக்கம் 11 மணி வரை பாலர் பாடசாலை நெடுங்குளத்தில் வைத்து வழங்கப்படவுள்ளது.

அத்துடன் காலை 11.30 மணி தொடக்கம் மதியம் 1.30 மணிவரை நெடுங்குளம் வீதியில் வைத்து வழங்கப்படும். எனவே இச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி தங்களது வளர்ப்பு நாய்களுக்கு மேற்படி தடுப்பூசியினை ஏற்றிக் கொள்ளுமாறு யாழ். மாநகர சபை சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் ம.மரியதாசன் அறிவித்துள்ளார். (ஶ்ரீ-2)

# குறைந்தபட்சம் எம்மால் துவிச்சக்கரவண்டி ஒன்றைக்கூட தயாரிக்க முடியவில்லையே

## பிரதமர் ஆதங்கம்

(கொழும்பு)

தன்னிறைவுகொண்ட நாடாக எம்மால் இன்னும் உருவாக முடியாமல் உள்ளது. குறைந்தபட்சம் எம்மால் துவிச்சக்கரவண்டி ஒன்றைக் கூட தயாரிக்க முடியவில்லை.

நாம் தொடர்ந்து இது தொடர்பில் சிந்திக்க வேண்டும். இந்த நிலைமைக்கு அரசியலும் ஒரு வழியில் காரணமாகியுள்ளது என்பது உண்மையாகும் என்று பிரதமர் டி.எம்.ஜயரட்ன தெரிவித்தார்.

பண்டாரநாயக்க ஞாபகார்த்த மாநாட்டு மண்டபத்தில் கடந்த 29ஆம் திகதி மாலை நடைபெற்ற சப்ரகமுவ பல்கலைக்கழகத்தின் பட்டமளிப்பு விழாவில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்

அவர் அங்கு மேலும் கூறியதாவது,

ஆன்மீக சகவாழ்வுடன் கட்டியெழுப்பப்படும் பொருளாதார செயற்பாடுகள் ஊடாக உலகத்தை வெற்றிகொள்ள நாட்டின் அனைத்து புத்திஜீவிகளும் ஒரு நோக்கத்துக்கு வரவேண்டும். மத பின்னணியின் கீழேயே ஆன்மீக சூழலை உருவாக்க முடியும்.

மதம் மற்றும் இனம் தொடர்பிலான வைராக்கியத்தை கைவிடவேண்டும். நாம் ஒரு பூமியின் மக்கள் என்ற வகையில் ஒரு நோக்கத்துக்கு வந்து நாட்டை கட்டியெழுப்ப முன்வரவேண்டும்.

சமூகத்தை நல்வழிக்கு கொண்டு வரக்கூடிய பண்புகளையே அனைத்து மதங்களும் கூறியுள்ளன. சிறந்த பண்புகளை எதிர்காலத்துக்கு கொண்டு செல்வது முக்கியமாகும். பல்கலைக்கழகங்களிலிருந்து வெளியேறும் பட்டதாரிகளுக்கு பாரிய பொறுப்புள்ளது.

நாட்டை கட்டியெழுப்பும் செயற்பாட்டில் அவர்களின் அறிவு மிக முக்கியமானதாகும். பட்டத்தை ஆபரணமாகவோ கிரீடமாகவோ பார்க்காமல் மக்களின் முன்னேற்றத்துக்காக தமது உழைப்பையும் அறிவையும் பயன்படுத்தவேண்டும்.

எமது நாட்டில் பல்கலைக்கழகங்கள் ஆரம்பிக்கப்பட்டு பல தசாப்தங்கள் ஆகிவிட்டன. அதிகளவானோர் பட்டம் பெற்றுவிட்டனர். ஆனால் அந்த அறிவு முறையான வகையில் நாட்டில் பயன்படுத்தப்பட்டுள்ளதா? என்பது கேள்விக்குறியாகும் என்றார். (ஶ்ரீ-2)

# ஐ.தே.க.வேட்பாளர் மீது பேருவளையில் தாக்குதல்

பேருவளை நகர சபையின் முன்னாள் பிரதி மேயரும் உள்ளூராட்சி சபை தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சியின் சார்பில் போட்டியிடும் வேட்பாளருமான ஹசன் பாயிஸ் தாக்குதலுக்குள்ளாகி கொழும்பிலுள்ள தனியார் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகிறார்.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் வேட்பாளர் ஒருவருடைய உறவுக்காரரும் பேருவளை நகர சபை முன்னாள் மேயர் மர்ஜான் பளீல் என்பவரே தன்னை தாக்கியதாக ஹசன் பாயிஸ் தெரிவித்தார்.

இச்சம்பவம் தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

தாக்குதலுக்குள்ளான குறித்த நபர் நண்பர்களுடன் கடந்த 28 ஆம் திகதி பேருவளையில் இருந்த போது வாகனத்தில் வந்த முன்னாள் மேஜர் இவரை சரமாரியாக தாக்கியுள்ளார். எனினும் அவருடன் வந்த மற்றவர்கள் எவ்வித தாக்குதலிலும் ஈடுபடவில்லை என தெரிவிக்கப்படுகின்றது.

தாக்குதலில் ஈடுபட்ட நபருடைய மகன் இம்முறை தேர்தலில் போட்டியிடுவதால் தாக்குதலுக்குள்ளான குறித்த நபரை தேர்தலில் போட்டியிட வேண்டாம் என கூறப்பட்டதாம்.

அதனை மீறி செயற்பட்டதாலேயே தாக்குதல் மேற்கொள்ளப்பட்டதாக தாக்கியவர்கள் கூறிவிட்டுச் சென்றதாக தெரிவித்தார்.

இந்த சம்பவத்துடன் தனக்கு எவ்விதமான தொடர்பும் இல்லை என்று தெரிவித்த பேருவளை நகர சபையின் முன்னாள் மேயர் மர்ஜான் பளீஸ் எனக்கெதிராக பொலிஸில் முறைப்பாடு தெரிவிக்கப்பட்டிருப் பின் அதற்கு முகம் கொடுப்பதற்கு நான் தயார் என்று அவர் தெரிவித்துள்ளார். (ஶ்ரீ-2)

- தபால் மூலம் -

ஆறு மாத கால டிப்ளோமா

Course Length - Six Month

20

JAN 2011 TO JUN 2011

தமிழ் மொழி மூலம்

| | |
|---|---|
| Dip. in Psychology | - உளவியல் டிப்ளோமா |
| Dip. in Office Administration | - காரியாலய நிர்வாக டிப்ளோமா |
| Dip. in Human Resources Management | - மனிதவள முகாமைத்துவ டிப்ளோமா |
| Dip. in Civil Engineering | - சிவில் எஞ்ஜினியரிங் டிப்ளோமா |
| Dip. in Business Management | - வியாபார முகாமைத்துவ டிப்ளோமா |
| Dip. in Banking Management | - வங்கி முகாமைத்துவ டிப்ளோமா |
| Dip. in Sales & Marketing Management | - விற்பனை மற்றும் சந்தைப்படுத்தல் டி.மா. |
| Dip. in Health & Hospital Management | - சுகாதாரம் மற்றும் வைத்தியசாலை டி.மா. |
| Dip. in Nursing Administration | - தாதியர் நிர்வாக டிப்ளோமா |
| Dip. in Educational Management | - கல்வி முகாமைத்துவ டிப்ளோமா |
| Dip. in Montessori | - மொண்டிசூரி டிப்ளோமா |

கற்கை முடிவில் பரீட்சை நடைபெறும் பிராந்திய நிலையங்கள்

• கல்முனை • மட்டக்களப்பு • திருகோணமலை • புத்தளம்
• வவுனியா • மன்னார் • யாழ்ப்பாணம் • கண்டி • கொழும்பு
• ஹட்டன் • அனுராதபுரம் • நுவரெலியா

மேலதிக விபரங்கள் மற்றும் விண்ணப்பப்படிவம் பெற உங்களது பெயர், முகவரி, தெரிவுசெய்த கற்கைநெறி என்பனவற்றை கீழ் உள்ள கையடக்க தொலைபேசிக்கு SMS செய்து பெற்றுக்கொள்ளலாம்.

Mobile: 0777 140 844, 071 803 48 48

விண்ணப்பம் அனுப்ப வேண்டிய முகவரி

Country Co-ordinator

MARUTHUR . A. HASSEN

(B.Sc. Psychology, M.Sc. Psychology)

ALL INDIA INSTITUTE OF MANAGEMENT STUDIES

24, 1st FLOOR, SUPERMARKET COMPLEX, MAIN STREET, SAINTHAMARUTHU-07.

Web: www.aiimas.com, www.iimat.com, www.aicomas.org

Tel: 067 2222917, 067 3671749, 067 3679688, 071 803 4848

விண்ணப்ப முடிவுத் திகதி : 10.02.2011

# நோர்வேயின் மத்தியஸ்தம் தேவையில்லை; வெளிநாட்டு சக்திகளுக்கு இடமில்லை

## அரசாங்கம் அறிவிப்பு

(கொழும்பு)

நோர்வேயின் மத்தியஸ்தம் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது என இலங்கை அரசாங்கம் அறிவித்துள்ளது.

இலங்கை அரசாங்கத்திற்கும் புலம் பெயர் தமிழ் மக்களுக்கும் குறிப்பாக புலி ஆதரவு தமிழ் மக்களுக்கும் இடையில் மத்தியஸ்தம் வகிக்கத் தயார் என நோர்வே அமைச்சர் எரிக்சொல்ஹெய்ம் அறிவித்திருந்தார்.

எனினும் இவ்வாறான மத்தியஸ்தத்தை எதிர்ப்பார்க்கவில்லை என இலங்கை அரசாங்கம் அறிவித்துள்ளது. உள்நாட்டு விவகாரங்களில் நோர்வே அல்லது வேறும் வெளிநாட்டு சக்திகளுக்கு எதிர்காலத்தில் இடமில்லை என தெரிவித்துள்ளது.

யுத்தத்தின் பின்னரான இலங்கையில் அபிவிருத்தியை ஏற்படுத்துவதற்கு சகல புலம் பெயர் அமைப்புக்களுடனும் பேச்சு வார்த்தை நடத்தத் தயார் என அரசாங்கம் அறிவித்துள்ளது.

(ஶ்ரீ-2)

# வன்முறையில் ஈடுபடும் வேட்பாளர்களுக்கு எதிராக கடும் சட்ட நடவடிக்கை

(கொழும்பு)

உள்ளூராட்சி சபைத் தேர்தல்களில் போட்டியிடும் வேட்பாளர்கள் வன்முறை செயல்களுடன் சம்பந்தப்பட்டால் அமுலில் உள்ள சட்டங்களின் படி 5 வருடங்களுக்கு எந்த தேர்தலிலும் போட்டியிட முடியாது.


அத்துடன் குறித்த 5 ஆண்டு காலத்தில் வாக்குரிமையும் இரத்துச் செய்யப்படும் என பொலிஸ் தேர்தல் பணியகத்திற்கு பொறுப்பான பிரதி பொலிஸ்மா அதிபர் காமினி நவரத்ன தெரிவித்துள்ளார்.


அமைதியான முறையில் தேர்தலை நடத்துவதற்காக இந்த சட்டங்கள் இயற்றப்பட்டுள்ளன.

வேட்பாளர்கள் எவரேனும் தேர்தல் வன்முறையில் சம்பந்தப்பட்டால் அவர்களுக்கு எதிராக குறித்த சட்டத்தின் கீழ் கடும் நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் காமினி நவரத்ன மேலும் கூறியுள்ளார்.

(ஶ்ரீ-2)







காரைநகர் யாழ்ற்ரன் கல்லூரியின் வருடாந்த இல்லமெய்வல்லுநர் போட்டி கடந்த சனிக்கிழமை கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் கல்லூரி அதிபர் தி.சோமசேகரம் தலைமையுரை நிகழ்த்துவதையும் சிறப்பு விருந்தினராக கலந்துகொண்ட இ.எஸ்.பி.நிறுவன உரிமையாளர் நாகரட்ணம் உரை நிகழ்த்துவதையும் போட்டிகளில் முதல் இடங்களைப்பெற்ற இரு இல்லத்தலைவர்களுக்கும் வெற்றிக்கேடயம் வழங்குவதையும் படங்களில் காணலாம். (படங்கள்:-காரைநகர் செய்தியாளர்)

## லங்கா ஈ நியூஸ் இணையத்தள அலுவலகத்திற்கு தீ வைப்பு

மாலேபேயிலுள்ள லங்கா ஈ நியூஸ் இணையத்தள அலுவலகத்திற்கு இனந்தெரியாத நபர்களால் நேற்று அதிகாலை 2 மணியளவில் தீ வைக்கப்பட்டுள்ளது.


தீ கட்டுப்பாட்டுக்கு கொண்டு வந்த போதும் அனைத்து பொருட்களும் சேதமடைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதனையடுத்து சம்பவம்தொடர்பில் தலங்கம பொலிஸார் விசா ரணைகளை மேற்கொண்டனர். இதேவேளை லங்கா ஈ நியூஸ் இணையத் தளத்திற்கு தீ வைக்கப்பட்ட சம்பவம் தொடர்பில் விரைவான விசாரணைகளை மேற்கொள்ளுமாறு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ பொலிஸ் மா அதிபருக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

சம்பவம் தொடர்பில் விரைவான புலனாய்வு விசாரணைகளை மேற்கொள்ளுமாறும் அறிவுறுத்தியதாக ஜனாதிபதியின் ஊடக பேச்சாளர் பந்துல ஜயசேகர தெரிவித்தார். (ஸ்ரீ-2)

## துனிசியாவை போன்று இலங்கையிலும் கலகம் ஏற்படக்கூடிய அபாயம்

### ரணில் தெரிவிப்பு



(கொழும்பு)

துனிசியா நாட்டைப் போன்று இலங்கையிலும் கலகம் ஏற்படக் கூடிய அபாயம் காணப்படுவதாக எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

ஒரு கிலோ அரிசியின் விலை 125 ரூபாவாக உயர்வடையக் கூடிய சாத்தியம் காணப்படுவதாகவும் இவ்வாறு பொருட்கள் சேவைகளுக்கான விலை உயர்வடைந்தால் கிளர்ச்சி ஏற்படக்கூடும் எனவும் அவர் குறிப் பிட்டுள்ளார்.

கம்பஹாவில் நடைபெற்ற கூட்டமொன்றில் கலந்துகொண்டு உரையாற்றிய போது அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் சித்திரைப் புத்தாண்டு காலப்பகுதியில் அரிசி விலை அதிகரிக்கக்கூடிய சாத்தியம் காணப்படுவதாக ரணில் விக்கிரமசிங்க குறிப்பிட்டுள்ளதாக ஆங்கில ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது. (ஸ்ரீ-2)

## மூன்றாவது சர்வதேச விமான நிலையம் சிகிரியாவில் அமைக்கப்படவுள்ளது

(கொழும்பு)

சிகிரியாவில் மூன்றாவது சர்வதேச விமான நிலையமொன்றை அமைப்பது தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப் படுகிறது.

இரண்டாவது சர்வதேச விமான நிலையப் பணிகள் அம்பாந்தோட்டை மாத்தலா பகுதியில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

இரண்டாவது சர்வதேச விமான நிலையத்தின் நிர்மாணப் பணிகள் பூர்த்தியானதன் பின்னர் மூன்றாவது சர்வதேச விமான நிலையமொன்றை அமைக்கும் பணிகள் ஆரம்பமாகும் என சிவில் விமானப் போக்குவரத்து அமைச்சர் பிரியங்கர ஜயரட்ன தெரிவித்துள்ளார்.

மூன்றாவது விமான நிலையமொன்றை அமைப்பது குறித்து ஜனாதிபதியுடன் ஏற்கனவே பேச்சுவார்த்தை நடத்தப்பட்டுள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார்.

சுற்றுலாத்துறையை அபிவிருத்தி செய்யும் அரசாங்கத்தின் நோக்கத்திற்கு வலு சேர்க்கும் வகையில் மூன்றாவது சர்வதேச விமான நிலையம் நிர்மாணிக்கப்படவுள்ளது.

கிரியா அல்லது ஹிங்குராங்கொட ஆகிய பிரதேசத்தில் மூன்றாவது விமான நிலையத்தை அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப் படுகிறது. இதற்கு மேலதிகமாக ஆறு உள்ளூர் விமான நிலையங்களையும் மேம்படுத்தத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் தெரிவித்துள்ளார்.

இரத்மலானை, நுவரெலியா போன்ற உள்ளூர் விமான நிலையங்கள் விரைவில் அபிவிருத்தி செய்யப்படவுள்ளன. (ஸ்ரீ-2)




★ 1662 - ஒன்பது மாத முற்றுகையின் பின்னர் சீனாவின் இராணுவத் தளபதி கொக்சிங்கா தாய்வான் தீவைக் கைப்பற்றினார்.

★ 1788 - ஐசாக் பிறிக்ஸ் மற்றும் வில்லியம் லோங்ஸ்ட்ரீட் ஆகியோர் நீராவிப் படகுக்கான காப்புரிமம் பெற்றனர்.

★ 1793 - ஐக்கிய இராச்சியம் மற்றும் நெதர்லாந்து மீது பிரான்ஸ் போரை அறிவித்தது.

★ 1814 - பிலிப்பைன்சில் மயோன் எரிமலை வெடித்ததில் ஆயிரத்து 200 பேர் கொல்லப்பட்டனர்.

★ 1832 - ஆசியாவின் முதலாவது அஞ்சல் (தபால்) வண்டி சேவை (mail coach) கண்டியில் ஆரம்பமாகியது.

★ 1864 - டென்மார்க்-புரூசியா போர் ஆரம்பமானது.

★ 1880 - யாழ்ப்பாணத்திற்கும் பருத்தித்துறைக்கும் இடையில் முதலாவது தபால் வண்டி (mail coach) சேவையை ஆரம்பித்தது.

★ 1884 - ஒக்ஸ்ஃபோர்ட் ஆங்கில அகராதியின் முதற் பதிப்பு வெளியானது.

★ 1893 - தோமஸ் எடிசன் தனது முதலாவது அசையும் படத்துக்கான படப்பிடிப் பகத்தை நியூஜேர்சியில் கட்டி முடித்தார்.

★ 1908 - போர்த்துக்கல் மன்னன் முதலாம் கார்லொஸ் மற்றும் அவனது மகன் இளவரசர் லூயிஸ் பிலிப் லிஸ்பன் நகரில் கொல்லப்பட்டனர்.

★ 1913 - உலகின் மிகப்பெரிய தொடரூந்து நிலையம் Grand Central Terminal நியூயோர்க் நகரில் திறக்கப்பட்டது.

★ 1918 - ரஷ்யா ஜூலியன் நாட்காட்டியில் இருந்து கிரகோரியன் நாட்காட்டிக்கு மாறியது.

★ 1924 - சோவியத் ஒன்றியத்தை ஐக்கிய இராச்சியம் அங்கீகரித்தது.

★ 1946 - நோர்வேயின் ட்றிகிவா லீ ஐக்கிய நாடுகள் சபையின் முதலாவது செயலாளர் நாயகமாகத் தெரிவு செய்யப் பட்டார்.

★ 1958 - எகிப்து மற்றும் சிரியா ஆகியன இணைந்து 1961 வரையில் ஐக்கிய அரபுக் குடியரசு என ஒரு நாடாக இயங்கின.

★ 1974 - பிரேசிலில் 25மாடிக் கட்டடம் ஒன்றில் தீப்பற்றியதில் 189 பேர் கொல்லப்பட்டனர்.

★ 1979 - 15 ஆண்டுகள் நாடு கடந்த நிலையில் வாழ்ந்த ஈரானின் மதத் தலைவர் அயத்தொல்லா கொமெய்னி டெஹ்ரான் திரும்பினார்.

★ 1998 - கிளிநொச்சிநகர் மீதான தாக்குதல் -1998: கிளிநொச்சி நகரம் மீதான விடுதலைப்புலிகளின் தாக்குதல் ஆரம்பமாகியது.

★ 2004 - சவுதி அரேபியாவில் ஹஜ் பயணத்தின் போது கூட்ட நெரிசலில் சிக்கி 251 பேர் கொல்லப்பட்டனர்.

★ 2005 - நேபாள மன்னர் ஞானேந்திரா நாடாளுமன்றத்தைக் கலைத்து நாட்டைத் தனது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தார்.

★ 2005 - கனடா ஓரினத் திருமணத்தை சட்டபூர்வமாக்கிய நான்காவது நாடானது.

★ 2007 - மட்டக்களப்பு வந்தாறுமூலையில் இடம்பெற்ற கிளைமோர் குண்டுத் தாக்குதலில் பேருந்து ஒன்று சிக்கியதில் 2 அதிரடிப்படையினர் 6 பொலிஸார் உட்பட 11 பேர் கொல்லப்பட்டனர்.

### பிறப்புகள்

★ 1905 - எமிலியோ செக்ரே, நோபல் பரிசு பெற்றவர் (இ.1989)

★ 1931 - போரிஸ் யெல்ட்சின், ரஷ்ய முன்னாள் ஜனாதிபதி (இ.2007)

### இறப்புகள்

★ 1958 - கிளிண்டன் டேவிசன், நோபல் பரிசு பெற்ற அமெரிக்க இயற்பியலாளர் (பி.1888)

★ 1964 - பம்மல் சம்பந்த முதலியார், தமிழ் நாடகத்துறையின் முன்னோடி (பி.1873)

★ 1976 - வேர்னர் ஐசன்பேர்க், நோபல் பரிசு பெற்ற ஜேர்மனிய இயற்பியலாளர் (பி.1901)

★ 1976 - ஜோர்ஜ் விப்பிள், நோபல் பரிசு பெற்ற அமெரிக்க அறிவியலாளர் (பி.1878)

★ 1986 - அல்வா மீர்டல், நோபல் பரிசு பெற்ற சுவீடன் எழுத்தாளர் (பி.1902)

★ 2003 - கல்பனா சாவ்லா, விண்வெளி வீராங்கனை (பி.1961)

2003 - கொலம்பியா விண்ணோடம் பூமியின் வளிமண்டலத்தினுள் வெடித்துச் சிதறியதில் இந்திய விண்வெளி வீராங்கனை கல்பனா சாவ்லா உட்பட ஏழு பேர் கொல் லப்பட்டனர்.



# பிரச்சினைகளை வரவேற்போம்

உங்களுக்குச் சந்தோஷமானது என்று நம்பி நீங்கள் ஏற்றுக் கொண்டது எதுவாக இருந்தாலும், அதோடு சில சவால்கள் இலவச இணைப்பாகச் சேர்ந்துவரும்.

அது கடின உழைப்பாக இருக்கலாம்,



மும்முரமான போட்டியாக இருக்கலாம், எதிர்பாராத தடைகளாக இருக்கலாம்... எதுவாக இருந்தாலும் அதையெல்லாம் ஆசையோடு, சந்தோஷத்தோடு ஏற்றுக் கொள்ளுங்கள்.

உங்கள் வளர்ச்சியில் உண்மையிலேயே விருப்பம் இருந்தால், பிரச்சினைகளை ஆசையோடு வரவேற்கப் பழகுங்கள்.

தோற்றுக்களைத்தவர்கள் பொதுவாகச் சொல்லும் காரணம் என்ன தெரியுமா?

'எனக்கு மட்டும் நேரமே சரியில்லை. நான் மாவு விற்கப் போனால் காற்று அடிக்கிறது. உப்பு விற்கப் போனால் மழை பெய்கிறது.'

நீங்கள் கேட்டாலும், கேட்காவிட்டாலும் எப்படியும் இந்த உலகம் உங்கள் மீது பிரச்சினைகளை வீசி வேடிக்கை பார்க்கத்தான் போகிறது. அப்புறம் ஏன் அவற்றை எதிர்கொள்ளத் தயங்குகிறீர்கள்?

கடினமான சந்தர்ப்பங்கள் உண்மையில் சாபங்கள் அல்ல. உங்களுக்கு அருளப்படும் வரங்கள்!

ஒரு சினமாவுக்குப் போகிறீர்கள். அடுத்தடுத்த காட்சிகள் நீங்கள் எதிர்பார்த்தபடியே வந்துகொண்டிருந்தால் அந்த சினிமாவை ரசிப்பீர்களா, அல்லது 'போர்' என்று எழுந்து வெளியே வருவீர்களா?

எதிர்பாராத திருப்பங்கள்தானே ஒரு வாழ்க்கையைச் சுவையாக அமைத்துத் தரமுடியும். கடவுளிடம் ஒரு விவசாயி கடுமையாகச் சண்டைக்குப் போனான்.

"உனக்குப் பயிர்களைப்பற்றி என்ன தெரியும்? நீ நினைத்தபோது மழையை அனுப்புகிறாய். தப்பான சமயத்தில் காற்றை வீசுகிறாய். உன்னால் பெரிய தொந்தரவாக இருக்கிறது. பேசாமல், அந்த வேலைகளை விவசாயி ஒருத்தனிடமே ஒப்படைத்து விடேன்!"

கடவுள் உடனே, "அப்படியா? சரி, இனி மேல் வெளிச்சம், மழை, காற்று எல்லாம் உன் கட்டுப்பாட்டிலேயே இருக்கட்டும்" என்று வரம் அருளிவிட்டுப் போய்விட்டார்.

விவசாயிக்குச் சந்தோசம் பிடிபடவில்லை. அடுத்த பருவம் வந்தது.

"மழையே, பெய்" என்றான். பெய்தது. நிறுத்தச் சொன்னபோது, நின்றது. ஈரமான நிலத்தை உழுதான். தேவையான வேகத்தில் காற்றை வீசச் செய்து, விதை தூவினான். மழை,வெயில், காற்று எல்லாமே அவன் சொன்ன பேச்சைக் கேட்டன. பயிர் பச்சைப் பசேலென்று வளர்ந்தது. வயல் வெளியைப் பார்க்கவே படுரம்மியமாக இருந்தது.

அறுவடைக்காலம் வந்தது. விவசாயி ஒரு கதிரை அறுத்தான். திறந்து பார்த்தான். அதிர்ந்தான். உள்ளே தானியத்தைக் காணவில்லை. அடுத்தது, அதற்கடுத்தது என்று ஒவ்வொரு கதிராக வெட்டி எடுத்துத் திறந்த பார்த்தால், ஒன்றிலுமே தானியம் இல்லை.

"ஏ கடவுளே!" என்று கோபத்தோடு கூப்பிட்டான். "மழை, வெயில், காற்று எல்லாவற்றையுமே மிகச் சரியான விகிதங்களில் தானே பயன்படுத்தினேன்! ஆனாலும், பயிர் பாழாகி விட்டதே, ஏன்?"

கடவுள் புன்னகைத்தார்; "என் கட்டுப்பாட்டில் இருந்தபோது காற்று வேக்மாக வீசும். அப்போது கதிர்களெல்லாம், அம்மாவை இறுக்கிக் கொள்ளும் குழந்தைகளைப் போல பூமிக்குள் தங்கள் வேர்களை மிக ஆழமாக அனுப்பிப் பிடித்துக்கொள்ளும். மழை குறைந்தால், தண்ணீரைத் தேடி வேர்களை நாலா பக்கமும் அனுப்பும். போராட்டம் இருந்தால்தான் தாவரங்கள் தங்களைப் பாதுகாத்துக் கொண்டு, வலுவாக வளரும். எல்லாமே வசதியாக அமைத்துக் கொடுத்ததில் உன் பயிர்களுக்குச் சோம்பேறித்தனம் வந்துவிட்டது. தளதளவென்று வளர்ந்ததே தவிர, ஆரோக்கியமான தானியங்களைக் கொடுக்க அவற்றுக்குத் தெரியவில்லை!"

"வேண்டாமடா, உன் மழையும் காற்றும்! நீயே வைத்துக்கொள்" என்று கடவுளிடமே திருப்பி தந்துவிட்டான் விவசாயி.

ஆம்... வாழ்க்கை எல்லாவிதத்திலும் சௌகரியமாகவே அமைந்துவிட்டால், அதைப்போன்றகொரு வெறுமை வேறெதுவும் இல்லை.

பிரச்சினைகள் உங்களைப் போட்டு அழுத்தும்போதுதான், உங்கள் திறமை அதிகரிக்கும். சவால்கள்தான் மனிதனை முழுமையாக்கும்.

இருட்டு என்றொரு பிரச்சினை இருந்ததால்தானே மின்விளக்கைக் கண்டுபிடித்தீர்கள்? பயணம் என்பது பிரச்சினையாக இருந்ததால்தானே வாகனங்களுக்கு உருக் கொடுத்தீர்கள்? தொலைவில் இருப்பவர்களைத் தொடர்புகொள்வது பிரச்சினையாக இருந்ததால்தானே, தொலைபேசியை உருவாக்கினீர்கள்?

பிரச்சினைகளே இல்லாமல் இருந்துவிட்டால் உங்கள் மூளையின் திறனை எவ்வாறு அறிவீர்கள்?

சங்கரன்பிள்ளை ா புதிய வீடு கட்ட விரும்பினார். கட்டட நிபுணர் விதவிதமான பிளான்களைக் காட்டினார்.

'இல்லை, இது இல்லை. நான் நினைத்திருப்பது வேறுமாதிரி' என்று ஒவ்வொரு பிளானையும் நிராகரித்தார் சங்கரன்பிள்ளை. நிபுணர் களைத்துப் போனார். "உங்கள் மனதில் என்னதான் இருக்கிறது?" என்று கேட்டார்.

ஒரு புராதன பித்தளைக் குமிழைச் சங்கரன்பிள்ளை தன் பொக்கெட்டிலிருந்து எடுத்துக் காட்டினார். "இதைக் கதவில் பொருத்தக்கூடிய மாதிரி ஒரு வீட்டுப் பிளானை இது



ஆன்மீகம் 05

வரை நீங்கள் எனக்குக் காட்டவில்லையே?" என்றார்.

பிரச்சினைகளை எதிர்கொள்ளத் தைரியமில்லை... ஆனால், வாழ்க்கை மட்டும் வசதியாக அமைய வேண்டும் என்று நினைப் பவர்கள்தான் சங்கரன்பிள்ளையைப் போல் கதவுக்குமிழை வைத்துக் கொண்டு அரண்மனைக்கு ஆசைப் படுகிறார்கள்.

எதற்காக எல்லாம் திட்டப் படியே முடிய வேண்டும்?

ஏதாவது ஒன்று பிய்த்துக் கொண்டு தான் போகட்டுமே... அதை எதிர்கொள்வோம். சமாளிப்போம். அதுதானே உண்மையான வெற்றி?

முடிவு சாதகமாக இருக்குமா, இருக்காதா என்று வீண் யோசனைகள் செய்து கொண்டிருக்காதீர்கள். முழுமையான ஈடுபாட் டுடன் செயலாற்றுங்கள்.

இனிமேல் சவால்கள் எதிர் வந்தால் அவற்றுக்குச் சாபம் கொடுக்காதீர்கள்.

அத்தனையையும் ஆசையோடு எதிர் கொள்ளுங்கள்.

**சத்குரு ஜக்கி வாசுதேவ்**

# ஆத்திசூடி: ஔவையார் - பாரதி - முருகையன்
# ஒரு கருத்தியல் ரீதியான ஒப்பாய்வு 04

**"கொழும்பில் நடைபெற்ற சர்வதேச எழுத்தாளர் மாநாட்டில் சமர்ப்பிக்கப் பட்ட ஆய்வுக்கட்டுரை"**

"தெய்வம் நீ என்றுணர்
மந்திரம் வலிமை
ஐம்பொறி ஆட்சி கொள்
ஞாயிறு போற்று
நெகிழ்வது அருளின்
மொய்ம்புறத் தவம் செய்
மோனம் போற்று
லாவகப் பயிற்சி கொள்"

என்பவை ஆன்மீகம் தொடர்பான பாரதியின் நோக்கினைத் தெளிவாகக் காட்டுகின்றன.

முருகையனின் ஆன்மீகம் தொடர்பான உசாவலும் வித்தியாசமானது. ஒரு மனிதனிடத்தில் உள்ள உறுதிப்பாடும், தெளிவுமே இவரைப் பொறுத்தவரை "தெய்வம்" என்று வரையறுக்கின்றார்.

"நின்ற நிலையில் நில்
தெளிவே தெய்வம்"

என்று வரும் சிந்தனைகளைக் குறித்து நோக்கலாம்.

**ஆத்திசூடியில் உழைப்பும் தொழிலும்**

ஒருவன் தன் தொழிலிலும் உழைப்பிலும் எவ்வாறு விளங்க வேண்டும் என்பதனைப் பாடுகின்ற ஔவையார் "இரந்துண்ணுதல்" என்ற நிலையினை இழிவானது என்றும், அதனைத் தவிர்த்தலின் பொருட்டு உழைப்பையும் வலியுறுத்துகிறார்.

"செய்வதைத் திருந்தச் செய்
சோம்பித் திரியேல்
நெற்பயிர் விளை"

என்றெல்லாங் கூறுகின்ற ஔவையார் விளை நிலத்தைக் குறைக்காதே, சிறப்பான செயல் புரிவதை மறவாதே, அளவுக்கு அதிகமாகத் தூங்காதே என்றெல்லாம் கூறுகின்றார். இதனை,

"அஃகஞ் சுருக்கேல்
சீர்மை மறவேல்
அனந்த லாடேல்"

என்று கூறி "ஏற்பது இகழ்ச்சி" என்றும் கூறியுள்ளார்.

பாரதியார் முயற்சி, உழைப்பு, தொழில் என்பவற்றை எந்தவகையில் ஆற்றுதல் வேண்டும்? உலகில் அதற்கான உதாரணங்கள் எவை? போன்ற கேள்விகளுக்குப் பதில் கூறுகின்றார்.

"கூடித் தொழில் செய்
கெடுப்பது சோர்வு
நாளெல்லாம் வினை செய்
யவனர்போல் முயற்சி கொள்
கைத்தொழில் போற்று
ஓய்தல் ஒழி"

போன்ற வரிகளில் பொதிந்துள்ள கருத்துக்கள் கவனிக்கத்தக்கவை.

பாரதிக்கு அப்பால் முருகையனின் ஆத்திசூடி வரிகளில் நிகழ்கால வாழ்வின் தொழில்கள் உழைப்புக்களின் உயர்வு பேசப்படுகின்றது. சமூக வாழ்வின் கிராமிய ஆதாரத் தொழில்கள் பற்றி இவர் சிந்திப்பது வாழ்வியலுடன் மிக நெருக்கமானது. முருகையனது எழுபத்தாறில்,

"உழவு விரும்பு
ஊர்திகள் ஓட்டு
எந்திரம் பழகு
கமம் செய்ய விரும்பு
காணி திருத்து
கிண்டி எரு இடு
கீரையும் பயிர் செய்
குளங்கள் திருத்து
கூடி உழைத்திடு
கெதியைக் குறையேல்
கொத்திச் சாறு
கோழிப் பண்ணை வை
பாடு படுக
மின் வலுப் பயன் கொள்
வேலையால் உய்தி காண்
சோர்வே பெரும் பகை"

என்று வரும் சிந்தனைகள் சாதாரண வாழ்நிலை அனுபவங்களின் வழியான உறைப்பான கருத்துக்களாய் அமைந்துள்ளன.


**ஆத்திசூடியில் வீரம், தன்னம்பிக்கை**

தன்னம்பிக்கையான வாழ்வுக்கும் வீரத்துக்கும் முக்கியம் கொடுப்பதாக ஆத்திசூடி அமைந்துள்ளது. ஒருவன் தனது இயலுமையைத் தானே சந்தேகிக்கக் கூடாது என்பதை 'இயல்வது கரவேல்' என ஔவையார் கூறுகின்றார். இது தனி மனித முன்னேற்றத்தின் முக்கிய அடிப்படையாகும். அத்துடன்,

"தோற்பன தொடரேல்
போர்த் தொழில் புரியேல்
மாற்றானுக் கிடங் கொடேல்
முனை முகத்து நில்லேல்"

என்ற வரிகளில் தோல்வியற்ற வாழ்வுக்கான வழிமுறைகள் ஔவையாரால் கூறப்படுகின்றன.

ஒப்பீட்டளவில் வீரம், தன்மானம் என்பன தொடர்பாக அதிகம் பேசியவர் பாரதியே ஆவார்.



அவரது காலத்து மனிதனின் போக்குகள் அதற்கான காரணமாய் அமைந்திருக்கலாம். அந்நியர் ஆட்சிக்கு உட்பட்ட ஒரு சமூகத்தின் பிரதிநிதியாக நின்று,

"அச்சம் தவிர்
ஆண்மை தவறேல்
உடலினை உறுதி செய்
ஏறு போல் நட
கீழோர்க்கு அஞ்சேல்
சாவதற்கு அஞ்சேல்
சிதையா நெஞ்சு கொள்
சூரரைப் போற்று
ஞமலி போல் வாழ்ழேல்
தாழ்ந்து நடவேல்


**இ.இராஜேஸ்கண்ணன்**
விரிவுரையாளர், சமூகவியல்துறை,
யாழ்.பல்கலைக்கழகம்.

தோல்வியிற் கலங்கேல்
பகைக்கு இடங்கொடேல்
முனையிலே முகத்து நில்"

என்று இன்னும் ஏராளம் சொல்லுகின்றார். இந்த வரிகளை ஔவையாரின் வரிகளுடன் ஒப்பிட்டு நோக்குகின்ற போது, "தோற்பன தொடரேல்" என்று ஔவையார் கூறும் கருத்து பராதியாரால் "தோல்வியில் கலங்கேல்" என்று சிந்திக்கப்படுகிறது.

(தொடரும்)

# மூளைக்காய்ச்சல் (MENINGOCOCCUS)



மூளைக்காய்ச்சல் மெனிங்கோகாக்கஸ் ஒருவரிடம் இருந்து மற்றவர்களுக்குப் பரவக் கூடிய தொற்றுநோய்.

இந்தக் காய்ச்சல், ஒரே நேரத்தில் பெரியவர்களையும் குழந்தைகளையும் தாக்கக் கூடியது. அதனால், பொதுமக்கள் இடையே பீதி ஏற்படுகிறது. குழந்தைகளுக்கு வரும் மெனிங்கோகாக்கஸ் மூளைக்காய்ச்சலுக்கான சிகிச்சை முறைகள் மிகவும் முன்னேறியிருந்தாலும், அதனால் மோசமான விளைவுகளும் ஏற்படுகின்றன.

மெனிங்கோகாக்கஸ் மூளைக்காய்ச்சல் தாக்கிய குழந்தைகளுக்கு முறையான சிகிச்சை அளிக்காவிட்டால் 80 சதவீதம் இறப்பு நிச்சயம். ஆனால், நோய் அறிகுறிகள் தென்பட்டவுடனேயே சிகிச்சை அளித்தால் இறப்பு சதவீதம் 10 தான்.

**நோய்க் காரணி**

மெனிங்கோகாக்கஸ் மூளைக்காய்ச்சலை நெசிரியா மெனிஞ்சைட்டிடிஸ் (Neisseria meningitidis) என்ற பக்றீரியா ஏற்படுத்துகிறது.

இந்த பக்றீரியா கிருமிகள் மனிதர்களை மட்டும்தான் தாக்கும். இந்தக் கிருமிகள் மூக்கிலும் தொண்டையிலும் அதிக அளவிலும், வேகமாகவும் வளரக் கூடியது.

இந்த பக்றீரியா கிருமியில் 13 சிறு குழுக்கள் (Sub groups) உள்ளன. அவற்றை மூன்று பெரிய குழுக்களாகப் பிரிக்கலாம்.

1. சீரோ டைப் (Sero type)

2. சப்-சீரோ டைப் (Sub-Sero type)

3. இம்யூனோ டைப் (Immuno type)

**நோயின் தன்மை**

மெனிங்கோகாக்கஸ் மூளைக்காய்ச்சலுக்குக் காரணமான பக்றீரியாவில் நிறைய வகைகள் உள்ளன. இவற்றில், A,B,C,W135,Y ஆகியவை மிக அதிக அளவிலும், D,X, 29E ஆகியவை அவ்வப் போதும் நோயை ஏற்படுத்துகின்றன.

## குழந்தைகளுக்கு வரும் காய்ச்சல்கள்



இந்தக் கிருமிகள், குளிர் மற்றும் வெப்பத்தில் இறந்துவிடக் கூடியவை.

இந்த பக்றீரியா கிருமிகளால், ஆண்கள்தான் அதிக அளவில் பாதிக்கப்படுகிறார்கள்.

**பக்றீரியா இருக்கும் இடங்கள்**


பொதுவாக, மூக்குமற்றும்தொண்டையில் இந்த பக்றீரியா கிருமிகள் இருக்கும். பாதிக்கப்பட்டவரின் மூக்கில் இருந்து ஒழுகும் தண்ணீர் மற்றும் தும்மும் போது வெளிப்படும் எச்சில் துளிகள் மூலமாக மற்றவர்களுக்கு இந்த பக்றீரியா கிருமிகள் பரவி நோயை ஏற்படுத்துகின்றன.

இந்த நோய் பெரும்பாலும், குழந்தைகளுக்கும், வயது வந்த ஆண் -பெண் இருபாலாருக்கும் பரவக்கூடியது என்றாலும் எல்லா வயதினருக்கும் கூட இந்த நோய் ஏற்படலாம்.

**நோய் தாக்கும் இடங்கள்**

எல்லா வயதினருக்கும் இந்த நோய் தாக்கலாம். இளம் வயதில் நோய் எதிர்ப்புத் திறன் குறைவாக இருப்பதால் அந்த வயதில் நோய்த்தொற்று எளிதில் ஏற்படுகிறது.

மக்கள் அதிகமாகக் கூடும் இடங்களான பாடசாலைகள், அகதிமுகாம்கள் மற்றும் இராணுவ வீரர்கள் கூடும் இடங்களில் வசிப்பவர்களுக்கு இந்த நோய் எளிதில் ஏற்படும். வீட்டில் சுற்றுச் சூழல் பாதிக்கப் பட்டவர்களுக்கும் இந்த நோய்ப் பாதிப்பு அதிகம்.



**நோய் அறிகுறிகள்**

பக்றீரியா நோய்க் கிரு மிகள் உடலுக்குள் நுழைந்த 3-4 நாட்களில் உடலில் நோய் அறி குறிகள் ஏற்படத்தொடங்கும்.

இந்த நோய் இரண்டு வகையாக ஏற்படும். அவை,

1. மூளைக்காய்ச்சல் இல்லாமல் இரத்தத்தில் கிருமி மட்டும் இருப்பது. (Meningoccal Sepsis Without Meningitis)

2. மூளைக்காய்ச்சலுடன் கூடிய மெனிங்கோகாக்சீமியா, உடனே வரும் மெனிங்கோ காக்சிமியா (Acute Meningo Coccemia)


டாக்டர் பி.சேகர்
குழந்தைநல மருத்துவர்
சென்னை

தொண்டைவலி, காய்ச்சல், வாந்தி, பேதி, உடல்வலி,தலைவலி, தோலில் சிவப்பு நிறத் தடிப்புகள், கால்,கை வலி, நடக்கமுடியாமை, கைகால்கள் சில்லிட்டுப் போதல் மற்றும் உடலின் நிறம் மாறுதல் போன்றவை இந்த நோயின் முக்கிய அறிகுறிகளாகும்.


(தொடரும்)




# பெண்களை அதிகம் பாதிக்கும் புற்றுநோய்



Stage I Stage II




உலகில் அதிகளவில் பெண்கள் முட்டைப்பை புற்றுநோயால் பாதிக்கப்பட்டுள்ளனர். முட்டைப்பை புற்றுநோய் என்பது அறிகுறிகள் இல்லாமல் ஆளைக் கொல் லும் ஒரு நோய் ஆகும். ஆனால் இது இலங் கையில் சற்றுக்குறைவு என்று மருத்துவர் களின் கணிப்புகள் கூறுகின்றன. இந்த நோய் தாமதமாகத் தான் கண்டறியப்படுகின்றது. அதனால் உயிர்ப்பலிக்கு காரணமாகி விடுகிறது.

முட்டைப்பை புற்றுநோயானது முட்டைப் பையின் செல்களைப் பாதிக்கிறது. ஆகவே, அது எவ்வகை செல்களை பாதிக்கிறது? என்பதைப் பொறுத்தே புற்றுநோய் வகைப்படுத்தப்படுகிறது. 'எபித்லி யல் ஓவரியன் கார்சீனமோ' முட்டைப் பையின் படிமச் செல்களைப் பாதிக்கிறது. 'ஜேர்ம் செல் கார்சீனமோ' முட்டை உருவாக்கும் செல்களை பாதிக்கிறது. 'ஸ்ட்ரோமல் கார்சீன மோ' முட்டைப்பையின் திசுக் களைப் பாதிப் பதுடன் ஈஸ்ட்ரோஜன் மற்றும் புரொஜஸ்ட்ஜன் ஓமோன்களை உருவாக்கும் செல்க ளையும் பாதிக்கிறது.

இதில் 'எபித்லியல் ஓவரியன் கார்சீனமோ' தான் மிகவும் ஆபத் தான வகை! 40 வயதிற்கும் குறைவாக உள்ள பெண்கள் மத்தியில் முட்டைப்பை புற்று நோய் குறைவாகக் காணப்படுகிறது.போஸ்ட் மெனோபாஸ் நிலையில் உள்ள பெண்களையே இவ்வகை பாதிக்கிறது. பரம்பரை காரணமாகவும் சிலருக்கு முட்டைப்பை புற்றுநோய் ஏற்படக் கூடும்.

அதாவது குடும்பத்தில் பெற்றோருக்கு மார்பகப் புற்றுநோய், குடல் புற்றுநோய் இருப்பின் இந்த நோய் ஏற்படக்கூடிய சாத்தியக் கூறுகள் அதிகம். இதேபோல் குழந்தையில்லாதவர்கள், இளம் வயதிலேயே பூப்படைந்தவர்கள், தாமதமாக இறுதி மாதவிடாய் அடைந்தவர்களுக்கும் இந்நோய் ஏற்பட அதிக வாய்ப்புள்ளது.

குழந்தைப் பேறுக்காக நெடுநாட்கள் எடுத்துக்கொண்ட மருந்து, மாத்திரைகளாலும் முட்டைப்பை புற்றுநோய் ஏற்படும்.ஓமோன் சிகிச்சை அதாவது 'ஈஸ்ட் ரோஜன் ரீப்ளேஸ் மெண்ட் தெரபி', 'ஓமோன் ரீப்ளேஸ் மெண்ட் தெரபி' போன்ற சிகிச்சை எடுத்துக்கொள்வதாலும் முட்டைப்பை புற்று நோய் ஏற்படுகிறது.

இந்நோயை ஆரம்ப நிலையில் கண்டறிவது மிகவும் கடினம். இதன் அறிகுறியாக சிலருக்கு செரிமானமின்மை, வயிறு உப்பிக் காணப்படும்.மேலும் ஒரு சிலருக்கு உடல் எடை வெகுவாகக் குறையும். முதுகுவலி, மயக்கம், அடிவயிற்றில் வலி ஏற்படும். இவ் வகை அறிகுறிகள் சாதாரணம் என்பதால் பெண்கள் அதை அவ்வளவாகக் கண்டு கொள்வதில்லை.

அதேசமயம் மற்றவகை புற்றுநோய்களின் அறிகுறிகள் எளிதில் தென்பட்டுவிடும். சி.டி.ஸ்கான், அடிவயிறு பரிசோதனைகள் மற்றும் சி.எ. 125 மூலம் முட்டைப்பை, குடல் புற்றுநோய் இருப்பின் அவர்களுக்கு 'மார்பக புற்றுநோய் ஜீன்ஸ்', 'பி.ஆர்.சி.ஏ.' மற்றும் 'பி.ஆர்.சி.ஏ2' உள்ளதா? என்று கண்டறிவது நல்லது . அத னால் பரம்பரையில் யாருக் காவது புற்று நோய் இருப்பின் கண்டிப்பாக மற்றவருக்கும் புற்றுநோய் வரும் என்று கூறமுடியாது.

**வருமுன் காப்போம்**

முட்டைப்பை புற்றுநோய் வராமல் தடுக்க உணவில் பழங்கள், காய்கறிகள் மற்றும் முழு தானிய வகைகள் அதிகம் இடம் பெறச் செய்யவேண்டும். உடற்பயிற்சி மூலம் உடல் எடையைச் சரிவர பராமரிக்க வேண்டும். நாற்பது வயதுக்கு மேல் வருடாந்தம் பரிசோதனைகள் கண்டிப்பாகச் செய்துகொள்ள வேண்டும்.

**ஆங்கில மருத்துவம்**

மற்றவகை புற்றுநோய் போல் முட்டைப்பை புற்றுநோய்க்கும் அறுவைச் சிகிச்சை, ஹீமோதெரபி என்று இருவகை சிகிச்சைகள் தேவைப்படும். இதில் பாதிக்கப்பட்ட உறுப்பு அதாவது முட்டைப்பைகள் மற்றும் கருப்பையையே அகற்ற வேண்டிய சூழ்நிலை

டாக்டர் ப.உ.லெனின்
சென்னை

கூட ஏற்படலாம். மூன்று மாத கால இடைவெளி என்ற அடிப்படையில் சுமார் மூன்று முறை ஹீமோதெரபி சிகிச்சை அளிக்கப்படும். இவ்வகை அறுவைச் சிகிச்சையின் வெற்றி என்பது செய்யும் மருத்துவ நிபுணரைப் பொறுத்தது. 'ஹீமோ தெரபி' மூலம் நல்ல செல்களும் அழிய வாய்ப்பிருக்கிறது. புற்றுநோய் செல்களை அழிக்க வேண்டிய கட்டாயத்தில் இப்பதால் இதற்கு வேறொன்றும் செய்ய முடியாது.

# கிளி.மாவட்ட அபிவிருத்திக்கு 2538 மில்லியன் ரூபா முதலீடு

கிளிநொச்சி மாவட்டத்தில் நான்கு பிரதேச செயலாளர் பிரிவுகளிலுள்ள 95 கிராம சேவகர் பிரிவுகளில் தேர்ந்தெடுக்கப்பட்ட 329 கிராமங்களின் அபிவிருத்திக்காக பொருளாதார அபிவிருத்தி அமைச்சு கடந்த வருடம் 2 ஆயிரத்து 538 மில்லியன் ரூபாவை முதலீடு செய்துள்ளது.

பொருளாதார அபிவிருத்தி அமைச்சினால் கிளிநொச்சி மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பில் அரசாங்கத் தகவல் திணைக்களம் விடுத்துள்ள ஊடக அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

கிளிநொச்சி மாவட்டத்தில் மேற்கொண்ட அபிவிருத்தித் திட்டத்திற்கான முதலீட்டில் 300கிலோ மீற்றர் வீதியை புனரமைப்பதற்கு 95 மில்லியன் ரூபாவும் ,நீர்வழங்கல் வேலைத்திட்டத்தின் கீழ் பாரியளவான கிணறுகளை சுத்தம் செய்யும் நான்கு வேலைத் திட்டத்திற்கு 3 மில்லியன் ரூபாவும் முதலீடு செய்யப்பட்டுள்ளது.

விவசாய மேம்பாட்டிற்கான திட்டத்திற்கு 16 மில்லியன் ரூபா முதலீடு செய்யப்பட்டுள்ளதுடன் விவசாய சேவை நிறுவனத்தை புனரமைப்பதற்கும் உத்தியோக பூர்வ வாசஸ்தலங்கள் இரண்டு மற்றும் பாதுகாப்பு கூடாரம் நிர்மாணிப்பதற்கும் 5 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டதுடன் 25 விவசாயத்திட்டங்களை முன்னெடுப்பதற்கும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

அதேபோல உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்கும் விதை உற்பத்தி மையங்கள் மற்றும் 6 உர களஞ்சியசாலைகளை நிர்மாணிப்பதற்கும் 17 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. பூநகரி,கந்தவேளை மற்றும் கரைச்சி போன்ற பிரதேசங்களில் பாற்பண்ணை அலுவலகங்களை அமைப்பதற்கு 7.5 மில்லியன் ரூபாய் ஒக்கப்பட்டுள்ளது. 100 மில்லியன் ரூபா செலவில் அக்கராயன் குளத்தை புனரமைப்புச் செய்வதற்கான நடவடிக்கைகள் மேம்படுத்தப்பட்டுள்ளன.

அக்கராயன் குளத்தில் இருந்து ஆயிரத்து 383 ஹெக்ரேயர் வயல் நிலத்திற்கு தண்ணீர் வசதிகள் பெற்றுக்கொடுக்கப்படுகின்றன. அதற்கு அப்பால் 40 சிறியரக குளங்களை புனரமைப்பதற்கு 84 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. பிரதேச மக்களின் செயற்றிறனை அதிகரித்துக்கொள்ளும் நோக்கில் 12 மில்லியன் ரூபா செலவில் கைத்தொழில் பயிற்சிச்சாலைகளும் அமைக்கப்பட்டுள்ளன. அந்தப் பயிற்சி நிலையங்களில் 126 பேர் பயிற்சி பெறுகின்றனர்.

அத்துடன் பிரதேச செயலாளர் அலுவலகம் நான்கினது கட்டடங்களை புனரமைப்பதற்கு 27 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளதுடன் கண்ணிவெடி அகற்றல் வேலைத்திட்டத்தின் கீழ் 88 கிராம சேவகர் பிரிவுகளில் கண்ணிவெடி அகற்றப்பட்டதுடன் 7 கிராம சேவகர்கள் பிரிவுகளில் கண்ணிவெடி அகற்றும் நடவடிக்கைகள் துரிதப் படுத்தப்பட்டுள்ளன.

மூவாயிரத்து 484 வீடுகள் நிர்மாணிக்கப்பட்டுள்ளதுடன் பூநகரிப் பாடசாலையும் மீண்டும் நிர்மாணிக்கப்படுகின்றது. கரைச்சி வலயக்கல்வி அலுவலகத்தை புனரமைப்பதற்கு 22 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

அதேபோல் 13 வீடுகளை திருத்துவதற்கும் கூரைகளை அமைப்பதற்கும் 17 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளதுடன் பொது அபிவிருத்தி திட்டத்திற்கு என 14 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

அதற்கு அப்பால் சமூக மற்றும் விளையாட்டுத்துறைகளை மேம்படுத்துவதற்காக அமைக்கப்பட்டுள்ள 22 வேலைத்திட்டங்களுக்கு 4 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. (ஸ்ரீ-2)

## மனித நடத்தைக்கும் இசைக்கும் தொடர்பு

இசைக்கும், மனிதனின் நடத்தைக்கும உள்ள தொடர்பு குறித்து ஓர் ஆய்வு நடத்தப்பட்டது. இசை ஆர்வத்துக்கேற்ப மனிதனின் நடவடிக்கைகள் வேறுபடுவதாக ஆய்வு முடிவு தெரிவிக்கிறது. ஒருவருடைய இசை ஆர்வத்தை வைத்து அவருடைய குணாதிசயங்களை அறிய முடியும்.

அதாவது ஒருவர் என்ன விரும்புகிறார். ஏன் விரும்புகிறார் என இசை ஆர்வத்தின் அடிப்படையில் தெரிந்து கொள்ள முடியும். ஒருவர் நட்புடன் பழகுவாரா, மாட்டாரா என்பதையும் இசையின் அடிப்படையில் தெரிந்து கொள்ளலாம். இசையில் அதிக ஆர்வம் இல்லாதவர்கள் மற்றவர்களுடன் நட்பாக பழக மாட்டார்களாம்.

இளமைப் பருவத்தில் மனிதனை அடையாளப்படுத்த இசை உதவுகிறது. ராக் இசையை விரும்புகிறவர்கள் சமூக விழிப்புணர்வுடனும் சுதந்திரமாகவும் இருப்பார்கள். பொப் இசையை ரசிப்பவர்கள் மற்றவர்களின் எண்ணங்களையே பிரதிபலிப்பார்களாம். இவ்வாறு ஆய்வாளர்கள் கூறுகின்றனர். (ஸ்ரீ)

## தவறவிடப்பட்ட அடையாள அட்டைகளை பெற்றுக் கொள்ளவும்

கிளிநொச்சி தனியார் பேருந்து உரிமையாளர் கழகத்தில் 13 பேரின் தேசிய அடையாள அட்டை மற்றும் இராணுவ அடையாள அட்டைகள் என்பன கிடைக்கப் பெற்றுள்ளதாகவும் உரியவர்கள் கிளிநொச்சி தனியார் பேருந்து பணிமனையில் வந்து பெற்றுக் கொள்ளுமாறு கழக உரிமையாளர் அறிவித்துள்ளார்.

கிடைக்கப்பெற்றுள்ள தேசிய அடையாள அட்டை விபரங்கள் வருமாறு ,

சிவபாதம் சிவரூபன் 813445000 V, இராசேந்திரம் வனிதா 908100328V, கதிர்காமநாதன் கமலாம்பாள் 458541671V, முத்துலிங்கம் ஞானசவுந்தரி 848493457V, துர்க்கைலெட்சுமி யூட் அன்ரனி 797474908 V, லியோபோல் ஜோன் எட்வேட் மைக்கல் 761544225V

இராணுவ அடையாள அட்டைகளின் விபரம் வருமாறு, கமலாம்பாள் கதிர்காமநாதன் 2195142, மாரிமுத்து மகேந்திரம் 2126301, மலர்விழி கனகசபை 1870812, சயானி சவுந்தரலிங்கம் 1547732, செங் கதிர் செல்வராசன் பகீரதன் 2061502, செங்கதிர் செல்வராசன் தர்மசிவராணி 206 1501, தங்கவேல் மகேஸ்வரி பதிவிலக்கம் :- விஏ-00 1241, 1-1285057049. (ஸ்ரீ-9)

## அத்தியாவசிய உணவுப் பொருட்களின் விலைகள் 50வீதத்தால் குறைந்துள்ளது

(கொழும்பு)


அத்தியாவசிய உணவுப் பொருட்களின் விலைகள் அதிகரிக்கவோ அல்லது தட்டுப்பாடு ஏற்படவோ இடமளிக்கப்பட மாட்டாது என்று கூட்டுறவு மற்றும் வர்த்தக அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

கிழக்கு செத்தல் மிளகாய், சீனி, பருப்பு உள்ளிட்ட அத்தியாவசியப் உணவுப் பொருட்களின் விலைகள் பெருமளவு குறைந்துள்ளன. இவற்றின் விலை அதிகரித்தால் சதொசா மூலம் இறக்குமதி செய்து பாவனையாளர்களுக்கு சலுகை விலையில் வழங்க நடவடிக்கை எடுக்கப்படும்.

அண்மையில் முட்டை, கிழங்கு, வெங்காயம், கோழி இறைச்சி ஆகியவற்றின் விலைகள் அதிகரித்ததையடுத்து அவற்றை இறக்குமதி செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டது.

இதேவேளை இறக்குமதி செய்யப்பட்ட அத்தியாவசிய உணவுப் பொருட்களின் விலைகள் 50 சதவீதத்தால் குறைந்துள்ள தாக புறக்கோட்டை மொத்த வர்த்தக சங்கம் தெரிவித்துள்ளது.

சில நாட்களுக்கு முன் 135 ரூபாவுக்கு விற்கப்பட்ட ஒரு கிலோ பெரிய வெங்காயம் நேற்று முன்தினம் முதல் கிலோ 55 ரூபாவுக்கும், 90 ரூபாவுக்கு விற்கப்பட்ட ஒரு கிலோ உருளைக்கிழங்கு 45 முதல் 50 ரூபாவுக்கும், 195 ரூபாவுக்கு விற்கப்பட்ட ஒரு கிலோ பருப்பு 135 ரூபாவுக்கும், 290 ரூபாவுக்கு விற்கப்பட்ட ஒரு கிலோ வெள்ளைப் பூண்டு 200 ரூபாவுக்கும் தற்போது விலை குறைந்துள்ளதாக மொத்த வர்த்தக சங்கம் தெரிவிக்கிறது. (ஸ்ரீ-2)



சுவாமி விவேகானந்தரின் 149ஆவது ஜெயந்தி தின நிகழ்வு அண்மையில் பருத்தித்துறை ஸ்ரீராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரமத்தில் நடைபெற்றது. இந் நிகழ்வில் தும்பளை சிவப்பிரகாச மகாவித்தியாலயத்தில் கல்வி பயிலும் மாணவருக்கு பருத்தித்துறை ஸ்ரீராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரமம் சார்பில் பருத்தித்துறை இலங்கை வங்கி உதவி முகாமையாளர் சி.தவலிங்கம் துவிச்சக்கரவண்டியை வழங்குவதை படத்தில் காணலாம்.


## ஆத்மசாந்திப் பிரார்த்தனையும் அஞ்சலி நிகழ்வும்



கடந்த 20.12.2010 அன்று அமரத்துவமடைந்த முன்னாள் கிளிநொச்சி, ஊர்காவற்றுறை தொகுதிகளின் பாராளுமன்ற உறுப்பினரும், வேலணை மண்ணின் மைந்தனும், தமிழ் அறிஞருமாகிய

### அமரர் பண்டிதர் கா.பொ.இரத்தினம்

அவர்களின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையும், அஞ்சலி நிகழ்வும் நடைபெறவுள்ளது.

காலம்:- 02.02.2011 புதன்கிழமை பகல் 10.00 மணி

இடம்:- பண்டிதர் ஐயாவின் வேலணை இல்லம்

இந்நிகழ்விலும், மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு தங்களை அன்புடன் அழைக்கின்றோம்.

வேலணை கிழக்கு,
வேலணை-5

அன்புடன்
குடும்பத்தவர்களும்,
ஏற்பாட்டாளர்களும்.

(3614)

உண்மையை உறுதியாகக் கடைப்பிடிப்பதிலிருந்து தான் வலிமை எல்லாம் கிடைக்கிறது.

– மகாத்மா காந்தி

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

# வடக்கில் நடைபெறும் கடுமையான மேற்பார்வை

'கடும் சுவர் கடும் மொட்டை' இப்படியொரு பழமொழி தமிழில் உண்டு. இந்தப் பழமொழி ஆழமான கருத்தைக் கொண்டுள்ளது.

பழமொழியின் கருத்தை தெரிந்து கொள்வதற்கு வடபுலத்தில் தற்போது இடம்பெற்று வரும் அரச திணைக்களங்கள் மீது மேற்கொள்ளப்படும் அதிரடியான மேற்பார்வை பற்றி விளக்குவது பொருத்தமாகும்.

தற்போது வடக்கிலுள்ள அரச திணைக்களங்கள் மீது அதிரடியான சோதனைகள்– மேற்பார்வைகள் நடத்தப் படுகின்றன.

இத்தகைய நடவடிக்கைகள் தேவையாயினும் அது அதிகமாகும்போது மேற்பார்வையால் எதிர் விளைவையே அடைய முடியும்.

உதாரணமாக பாடசாலைகள் மீது கடுமையான சோதனைகள் இடம்பெறும்போது அதனால் நேர்மையாகச் செயற்படுவோர் வெறுப்படைவர்.

கல்வியில் மிகப் பெரும் உயர்நிலையில் இருந்த வடபுலத்தின் இன்றைய நிலைக்குக் காரணம் மாகாணக் கல்வித் திணைக்களத்தினதோ, வலயக் கல்வித் திணைக்களத்தினதோ, பாடசாலை நிர்வாகத்தினதோ பலவீனம் அல்ல.

மாறாக வடபுலத்தில் ஏற்பட்ட மிக மோசமான யுத்தம், அதனால் ஏற்பட்ட இடப்பெயர்வு– சொத்தழிவுகள்– உயிரிழப்புக்கள் என்பனவே காரணமாகும்.

யுத்தத்தால் ஏற்பட்ட இழப்புகளுக்கு நிவாரணம் தேடி, உரிய உரிய இடங்களில் மக்களைக் குடியமர்த்தும் பணிகள் முன்னெடுக்கப்பட்டும் தொழில் இழந்தவர்கஞ்க்கு வேலைவாய்ப்பை வழங்கும்போதும் வடபுலம் மீண்டும் தலைநிமிரும்.

காணாமல்போனவர்களை தேடும் படலம் இன்றுவரை தொடரும்போது, தடுப்பு முகாம்களில் உள்ள உறவுகளின் விடுதலைக்காக சதா கண்ணீர் விடும்போது வீட்டிலிருந்து கற்கும் பிள்ளைகளின் மனநிலை எங்ஙனம் இருக்கும் என்பதை ஒருகணம் சிந்திக்க வேண்டும்.

வடபுலம் அதிலும் யாழ்ப்பாணம் தலைசிறந்த ஆசிரியர்களைக் கொண்டிருந்த மண். எவரும் கட்டளையிடாமல் தாங்களே வீடுவீடாகச் சென்று மாணவர்களைப் பாடசாலைக்கு அழைத்துவந்து கல்வி புகட்டிய பேராசான்கள் வாழ்ந்த மண். இன்றும் அத்தகைய ஆசிரியர்களுக்கு குறைவு இல்லை.

இருந்தும் ஏனோ தெரியவில்லை எல்லா ஆசிரியர்களையும் சந்தேகக் கண்கொண்டு பார்க்கும் நிலைமை நம் மண்ணில் ஏற்பட்டுவிட்டது.

'அதிகாரிகள் வருகிறார்கள் பராக் பராக்' என்ற மன்னராட்சிக் கால மேற்பார்வை இப்போது வடபகுதியில் உள்ளது. இத்தகைய அழுத்தம் நிச்சயமாக ஆசிரியப் பணியைப் பாதிக்கும்; மனக் குழப்பத்தை ஏற்படுத்தும்; செய்கின்ற தொழிலில் வெறுப்பை உண்டுபண்ணும். கடமையை தட்டிக் கழிக்கவும், ஏமாற்றவும் கற்றுக்கொள்ளவேண்டிய கட்டாயத்திற்கு ஆசிரியர்கள் ஆளாவர். அவர்கள் மட்டுமல்ல கல்விப் புலம் முழுவதுமே பாதிக்கப்படும்.

எனவே மேற்பார்வை என்பது தெரியாத விடயத்தை தெரியப்படுத்துவதாகவும், அதிபர், ஆசிரியர்கள், கல்வித் திணைக்களத்தினர் போன்ற சகலரையும் உற்சாகப் படுத்துவதாகவும் அமைய வேண்டும். அப்போதுதான் தொழிலில் பற்றுவரும். கடுமையான மேற்பார்வை மூலம் வினைத்திறனை– விளைதிறனை ஏற்படுத்த முடியும் என்று யாரேனும் நினைப்பார்களாயின் அது தோல்வியிலேயே முடியும்.

டேலர் போன்ற ஆராட்சியாளர்களின் முடிவுகளை ஒருகணம் படிப்பது எல்லோருக்கும் நல்லது. இல்லையேல், கடும் சுவர்; கடும் மொட்டை என்பதாகவே நிலைமை முடியும்.

# வடபகுதி மீனவர்களின் பிரச்சினை இந்தியத் தூதுக்குழுவிடம் எடுத்துரைப்பு

(கொழும்பு)

இலங்கைக்கான விஜயத்தை மேற்கொண்டுள்ள இந்திய வெளிவிவகாரச் செயலாளர் திருமதி நிருபமா ராவ் தலைமையிலான உயர்மட்ட பிரதிநிதிகள் குழுவினர் நேற்று வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸைச் சந்தித்துக் கலந்துரையாடினர்.

இச் சந்திப்பில் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகமும் பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறு தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சருமான டக்ள்ஸ் தேவானந்தாவும் கலந்து கொண்டார்.

மேற்படி கலந்துரையாடலின்போது இலங்கை மீனவர்கள் எதிர்நோக்கியிருக்கும் பிரச்சினைகள் தொடர்பாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா விரிவாகவும் எடுத்துரைத்தார்.

வட மாகாண மீனவர்கள் முகம் கொடுத்து வருகின்ற பிரச்சினைகள் தொடர்பில் தெளிவுபடுத்திய அமைச்சர், கடந்த சுமார் 30 வருடகால யுத்த அனர்த்தத்திற்குப் பின்னர் இம் மீனவர்கள் சுதந்திரமாக தொழிலில் அனுமதிக்கப் பட்டுள்ள நிலையில் இந்திய மீனவர்களது றோலர் படகுகளினால் பாரிய பிரச்சினைகளுக்கு உள்ளாகியுள்ளனர். இந்த றோலர்ப் படகுகள் இந்தியாவின் கடல் எல்லைக்குட்பட்ட வளங்களை அழித்தொழித்துவிட்டு இப்போது எமது கடற்பகுதிகளில் உள்ள வளங்களை அழித்து வருவது மட்டும் அல்லாமல் எமது மீனவர்க்ளினது வலைகளை பாரிய அளவில் சேதமாக்கியும் எமது மீனவர்களை அச்சுறுத்தியும் வருகின்றனர்.

எனவே இதற்கு ஒரு முடிபு விரைவாக காணப்படுவது ஆரோக்கியமானதாகும்.

இரு தரப்பினரும் சந்திக்கக்கூடிய வாய்ப்பினை உருவாக்கி பரஸ்பரம் கலந்துரையாடலை ஏற்படுத்தி அதன் மூலம் புரிந்துணர்வுகளை ஏற்படுத்துவதன் ஊடாக இந்தப் பிரச்சினைக்கு ஒரு முடிபு காண இயலும் என்றும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா நம்பிக்கை தெரிவித்தார்.

அமைச்சர் தெரிவித்த கருத்துக்களுக்கு இந்திய உயர்மட்டப் பிரதிநிதிகள் குழு இணக்கம் தெரிவித்துள்ளது. (ந)

## மெய்வல்லுநர் போட்டி

(யாழ்ப்பாணம்)

அராலி கிழக்கு அ.மி.த.க.பாடசாலை வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று பிற்பகல் 1.30 மணிக்கு பாடசாலை அதிபர் திருமதி கா.நகுலராஜா தலைமையில் இடம்பெறும்.

இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக சங்கானை கோட்டக் கல்விப் பணிப்பாளர் எங்கரசு, சிறப்பு விருந்தினராக யாழ்.கல்வியியற் கல்லூரி விரிவுரையாளர் இ.சத்தியேந்திரம்பிள்ளை, கௌரவ விருந்தினராக கூல் எயார் நிறுவனப் பொறியியலாளர் செ.அலன்சேவியர் ஆகியோர் கலந்து கொள்வர். (ந)

# க.பொ.த. சா/த பரீட்சையில் தனிப்பட்ட பரீட்சார்த்தியாக தோற்றிய இடம்பெயர் மாணவர்களின் பரீட்சை பெறுபேறுகள் வெளியீடு

(யாழ்ப்பாணம்)

வன்னி மாவட்டத்தில் இருந்து இடம் பெயர்ந்து தனிப்பட்ட பரீட்சாத்தியாக யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் க.பொ.த. (சா/த) 2009 (பழைய பாடத் திட்டம்) பரீட்சைக்குத் தோற்றிய 21 பரீட்சார்த்திகள் தங்களினது பெறுபேற்றினை யாழ். வலயக் கல்வி அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாமென யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் அறிவித்துள்ளார்.

மேலும் பெறுபேற்றினை பெற்றுக் கொள்ள வரும்போது தமது தேசிய அடையாள அட்டையுடன் சமுகமளிக்கும் படியாகவும் அவர் கேட்டுள்ளார். பெயர் விபரம் வருமாறு,

சிவபாலன் பிரதீபன் (97380636), சிவசிதம்பரம் சர்மிலன் (97380741), விஜிதா சிவபாலன் (97380628), தர்ஷிகா தெய்வேந்திரம்(97380792), நிரோஜா திரவியம் (97380709), ஜெகதீஸ்வரன் கீர்த்தனா (97380750), ஜெகதீஸ்வரன் கீர்த்தனன் (97380768) தம்பிராஜா ரஞ்ஜினி(97380920), செல்வநாதன் மேனகன் (97380695), நவரத்தினம் சதீஸ் (97380849), ஞானப்பிரகாசம் அன்ரன் வினோத் (97380547), கந்தசாமி உஷாந்தி (97380830), ஸ்ரீரஞ்சினி அமரசிங்கம் (97380873), பிரதீபா அழகேந்திரம் (97380865), அன்ரனி சாகர் சுஜந்தன் (97380717), கலிஸ்து விமல் நிக்ஷன் (97381071), கிருஜா நடராஜா (97380970), அம்புறோஸ் மேரின் சுகந்தினி (97380822), கஸ்பர் மரியநாயகி (97380949), சிவராசலிங்கம் கோகுலன் (97380610), அமலராஜா ரின்சிகா (97380903). (ஸ்ரீ-2)

## அஞ்சலி நிகழ்வு

அமரர் பண்டிதர் கா.பொ.இரத்தினம் அவர்களின் ஆத்ம சாந் திப் பிரார்த்தனையும் அஞ்சலி நிகழ்வும் நாளை புதன்கிழமை மு.ப. 10 மணிக்கு பண்டிதர் ஐயாவின் வேலணை இல்லத்தில் நடை பெறவுள்ளது.

பேராசிரியர் இரா.சிவசந்திரன் தலைமையில் இடம்பெறவுள்ள அஞ்சலி நிகழ்வில் யாழ்.மாவட்ட நாடாளு மன்ற உறுப்பினர்களான மாவை சேனாதிராஜா, சுரேஷ் பிரேமச்சந்திரன் மற்றும் பேராசிரியர் சி.க.சிற்றம்பலம், உள்ளூர் பாடசாலை அதிபர்கள், ஊடகவியலாளர்கள் சமூக, சமயப் பெரியார்கள் பங்கு பற்றி அஞ்சலி உரை ஆற்றவுள்ளனர்.

இந்நிகழ்வில் பண்டிதர் ஐயாவோடு இணைந்த நெஞ்சங்கள் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படு கின்றனர். (ஸ்ரீ)

# றோலர் படகு மூலம் மீன்பிடிக்க அனுமதி

(யாழ்ப்பாணம்)

கடந்த ஒரு மாத காலமாக றோலர் படகு மூலம் கடற்றொழில் செய்ய குரு நகர் பகுதியில் தடை செய்யப்பட்டு இரு ந்தது.

தற்போது மீண்டும் இவ்வாரம் முதல் அனுமதி வழங்கப்பட்டு வழமை போல் நடைபெற்று வருகின்றது.

மேலும் சிறு தொழிலாளருக்கு பாதி ப்பு ஏற்படாமல் கரையை அண்டிய பகுதிகளில் தொழில் முறைகளை மேற் கொள்ளாது ஆழ்கடலில் றோலர் படகு மூலம் தொழில் செய்யலாம் என்றும் கிழமைக்கு மூன்று நாள் மட்டும் இத் தொழிலில் ஈடுபடலாம் என்றும் தெரிவி க்கப்படுகின்றது. (ஸ்ரீ-3-39)

# சுவாமி விவேகானந்தரின் அறிவுரைகள்



### நாம் ஏன் ஒத்துப் போவதில்லை?

ஒரு நாள் கடலில் வாழ்ந்து வந்த தவளை ஒன்று அங்கு வந்து அந்தக் கிணற்றில் விழுந்து விட்டது.

"நீ எங்கிருந்து வருகிறாய்?"

"கடலில் இருந்து"


"கடலா ? அது எவ்வளவு பெரியது? எனது கிணற்றளவு பெரியதாய் இருக்குமா?" என்று கூறி, ஒரு பக்கத்தில் இருந்து எதிர்ப்பக்கத்திற்குத் தாவிக் குதித் தது கிணற்றுத் தவளை.

"நண்பா. இந்தச் சின்னக் கிணற்றோடு எப்படி கடலை ஒப்பிட முடியும்?" என்று கேட்டது கடல் தவளை .

கிணற்றுத்தவளை மறுபடியும் ஒரு குதி குதித்து ,"உனது கடல் இவ்வளவு பெரிதாய் இருக்குமோ?" என்று கேட்டது. "சேச்சே! என்ன முட்டாள் தனம்! கடலை உன் கிணற்றோடு ஒப்பிடுவதா?" "நீ என்ன சொன்னாலும் சரி, என் கிணற்றை விட எதுவும் பெரிதாக இருக்க முடியாது கண்டிப்பாக இதை விடப் பெரிதாக எதுவும் இருக்க முடியாது. இதன் பொய்யன் ,இவனை வெளியே விரட்டுங்கள்!" என்று கத்தியது கிணற்றுத்தவளை.

# விஜய் அரசியலுக்கு வந்தால் நீங்கள் வரவேற்பீர்களா?

## சரத்குமார் பதில்



அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சி சார்பில் சமத்துவ தொழிற்சங்க கூட்டமைப்பு என்ற பெயரில் தொழிற்சங்கம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. புதிய தொழிற்சங்கத்தின் அறிமுக நிகழ்ச்சி சென்னையில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

இந்நிகழ்ச்சிக்கு அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சியின் தலைவர் ஆர்.சரத்குமார் தலைமை தாங்கினார். பின்னர் சரத்குமார் செய்தியாளர்களைச் சந்தித்தார்.

**கூட்டணி குறித்து எந்தக் கட்சியுடன் பேச்சுவார்த்தை நடத்துகிறீர்கள்?**

நாங்கள் தி.மு.க.வை எதிர்த்து வருகிறோம். அப்படியென்றால் எங்களுடன் யார் பேச்சுவார்த்தை நடத்துவார்கள் என்பதை நீங்களே எண்ணிக்கொள்ளுங்கள்.

**எதிர்வரும் சட்டமன்றத் தேர்தலில் ஆலங்குளம் தொகுதியில் நீங்கள் போட்டியிடுவதாகச் சொல்லப்படுகிறதே?**

ஆலங்குளம், ராதாபுரம், ஸ்ரீவைகுண்டம், திருச்செந்தூர் தொகுதிகளில் போட்டியிட அழைக்கிறார்கள். எந்தத் தொகுதியில் போட்டியிடுவேன் என்பது விரைவில் முடிவு செய்யப்படும்.

**அ.தி.மு.க. கூட்டணியில் உள்ள கட்சிகள் தொகுதி பங்கீடு குறித்த பேச்சுவார்த்தையை தொடங்கியுள்ள நிலையில் நீங்கள் கூட்டணி குறித்து எப்போது அறிவிப்பீர்கள்?**

இன்னும் ஒரு வாரத்தில் அறிவிப்பேன்.

**நடிகர் விஜய் அரசியலுக்கு வந்தால் நீங்கள் வரவேற்பீர்களா?**

யார் அரசியலுக்கு வந்தாலும் வரவேற்போம் என்றார். (ஸ்ரீ-2)

# செங்கல்பட்டு சிறையில் அகதிகள் நான்காவது நாளாக உண்ணாவிரதம்

செங்கல்பட்டு கிளைச் சிறையில் திறந்த வெளி அகதி முகாமில் தங்கிக் கொள்ள அனுமதி கோரி இலங்கைத் தமிழ் அகதிகள் 18 பேர் 4 ஆவது நாளாக தொடர் உண்ணாவிரதம் இருந்து வருகின்றனர்.

உரிய கடவுச்சீட்டு,விசா இன்றி சுற்றித்திரிந்த இலங்கை அகதிகள் 27 பேர் செங்கல்பட்டு- காஞ்சிபுரம் நெடுஞ்சாலையில் உள்ள கிளைச் சிறையில் அடைக்கப்பட்டிருந்தனர்.

தஞ்சை, திருச்சி, மதுரை, இராமேஸ்வரம் போன்ற இடங்களில் திறந்தநிலை அகதிகள் முகாமுக்கு எங்களை அனுப்பி வையுங்கள்.எங்கள் பிரச்சினைகளை தீர்த்துக் கொள்கிறோம் என்று கூறி கடந்த 4 நாட்களாக அவர்கள் உண்ணாவிரதம் இருந்து வருகின்றனர்.

திருவள்ளூர்- காஞ்சி டி.எஸ்.பி.ராமசுப்பிரமணியம் அகதிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தினார்.ஆனால் அகதிகள் உண்ணாவிரதத்தை கைவிடவில்லை.

உண்ணாவிரம் இருந்த சந்திரகாந்தன், சகாயம்,விக்கிரமசிங்கன் ஆகிய 3பேர் அதிக சோர்வடைந்ததால் செங்கல்பட்டு அரசு வைத்தியசாலையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டுள்ளனர்.

அகதிகளில் 27 பேரில் 9பேர் உடல் நிலை பாதிக்கப்பட்டதால் மருத்துவ சிகிச்சை மேற்கொள்வதால் உண்ணாவிரதத்தில் கலந்துகொள்ள முடியவில்லை என்று தெரிவித்தனர்.(ஸ்ரீ-2)


# காரைக்காலில் ஆர்ப்பாட்டம்; 2500 மீனவர்கள் கைது

தமிழக மீனவர்கள் மீது தொடர்ந்து தாக்குதல் நடத்திவரும் இலங்கை கடற்படையைத் கண்டித்து காரைக்காலில் நேற்று மீனவர்கள் ஆர்ப்பாட்டம் செய்தனர்.

மீனவர்களுக்கு ஆதரவாக கடையடைப்பு நடத்தப்பட்டதுடன் பேருந்து சேவைகளும் இடம்பெறவில்லை.இதனால் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டது.

மேலும் மீனவர்கள் வீதியில் அமர்ந்து மறியலில் ஈடுபட்டனர்.இதையடுத்து மறியலில் ஈடுபட்ட 2 ஆயிரத்து 500 மீனவர்களை பொலிஸார் கைது செய்தனர். (ஸ்ரீ-2)

# காளஹஸ்தி ஆற்றில் தங்கப் புதையல்



காளஹஸ்தி சிவன்கோயில் அருகே உள்ள சுவர்ணமுகி ஆற்றில் சந்தமைதானம் பகுதியைச் சேர்ந்த மீனவர்கள் சிலர் நேற்று முன்தினம் மாலை மீன்பிடித்துக் கொண்டிருந்தனர்.

அப்போது ஆற்றின் கரையோரத்தில் தங்க நாணயம் ஒன்று கிடப்பதை பார்த்தனர்.அந்த இடத்தில் மேலும் தங்க நாணயங்கள் இருக்கலாம் என்று கருதி குழி தோண்டினர்.

ஒரு சிறிய மூட்டையில் தங்க நாணயங்கள் புதைக்கப்பட்டிருந்தது கண்டுபிடிக்கப்பட்டது. அந்த மூட்டையை வெளியே எடுத்துப் பார்த்தபோது அதில் 2 ஆயிரத்து 148 நாணயங்கள் இருந்தன. உடனே அவர்கள் அந்த நாணயங்களை விற்க முடிவு செய் தனர்.

இதையடுத்து காளஹஸ்தியில் உள்ள ஒரு அட குக் கடைக்கு சென்றனர். அடகுக் கடை உரிமையாளர் சங்கரய்யா, நாணயங்களை வாங்கிப் பார்த்தபோதுஅதில் 1891 இல் விக்டோரியா மகாராணி காலத்தில் தயாரிக்கப்பட்டதற்கான முத்திரையிருந்தது.


நாணயங்களின் மொத்த எடை 3 கிலோ 481 கிராம்.உடனே சங்கரய்யா அவர்களிடம் தங்க நாணயங்கள் எப்படிக் கிடைத்தது? என்று விசாரணை நடத்தினார். இதுகுறித்து காளஹஸ்தி ஆர்.ஐ.முனிரத்தினத்திற்கு தகவல் தெரிவித்தார்.

அங்கு வந்த ஆர்.ஐ முனிரத்தினம், மீனவர்களை சப் இன்ஸ்பெக்டர் சுப்பாரெட்டியிடம் ஒப்படைத்தார்.தங்க நாணயங்கள் தாலுகா அலுவலகத்தில் ஒப்படைக்கப்பட்டது.(ஸ்ரீ-2)

# எகிப்தில் 7 வது நாளாகவும் கலவரம் தொடர்கிறது

## பலியானோர் எண்ணிக்கை 150 ஆக உயர்வு





எகிப்தில் 7 ஆவது நாளாக கலவரம் தொடர்கிறது. இதனால் உயிரிழந்தோர் எண்ணிக்கை 150 ஆக உயர்ந்துள்ளது. ஆயிரக்கணக்கான மக்கள் வீதிகளில் இறங்கி போராடி வருகின்றனர். எனவே கலவரத்தை அடக்க இராணுவமும் பொலிஸாரும் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

அவர்கள் ஆயுதம் தாங்கிய படி வாகனங்களில் ரோந்து சுற்றி வருகின்றனர். கடந்த வாரம் செவ்வாய்க்கிழமை தொடங்கிய கலவரம் இன்றும் முடிவுக்கு வரவில்லை.

கெய்ரோ, அலெக்சாண்டிரியா, ஆஸ்லான் உள்ளிட்ட பல்வேறு நகரங்களில் கலவரம் பரவி தீவிரம் அடைந்துள்ளது. எகிப்தில் கடந்த 30 ஆண்டுகளாக ஆட்சி செய்து வரும் ஜனாதிபதி ஹோஸ்னி முபாரக் வயது (82) பதவி விலக வலியுறுத்தி மக்கள் போராட்டம் நடத்தி வருகின்றனர். அதில் வன்முறை ஏற்பட்டதால் அது கலவரமாக மாறியது. கலவரத்துக்கு இதுவரை 150 பேர் பலியாகியுள்ளனர்.

கடந்த வெள்ளிக்கிழமை மட்டும் 62 பேர் இறந்தனர். 4 ஆயிரம் பேர் காயம் அடைந்துள்ளனர். கைதிகள் தப்பி ஓட்டம். அலெக்சான்டிரியா, அஸ்லான் தெற்கு, கெய்ரோ உள்ளிட்ட பல்வேறு சிறைகளில் கைதிகள் அடைக்கப்பட்டிருந்தனர்.

அவர்கள் சிறைகளை உடைத்து ஆயிரக்கணக்கில் தப்பி ஓடி விட்டனர். அவர்களை தடுத்த உயர் பொலிஸ் அதிகாரி ஒருவர் கொல்லப்பட்டார்.

இந்தக் கலவரத்தைப் பயன்படுத்தி சமூக விரோதிகள் கொள்ளை சம்பவத்தில் ஈடுபட்டுள்ளனர். வர்த்தக வளாகங்கள் மற்றும் கடைகளில் புகுந்து அடித்து நொறுக்குகின்றனர். பூட்டியுள்ள கடைகளை உடைத்து உள்ளே புகுந்து துணிகள், இலத்திரனியல் சாதனங்கள் மற்றும் மரப் பொருட்களை அள்ளிச் செல்கின்றனர்.

கொள்ளை கெய்ரோவில் உள்ள அருங்காட்சியகம் மற்றும் அரபு சர்வதேச வங்கிக்குள் ஒரு கும்பல் புகுந்தது. அவர்கள் அங்கிருந்த அரிய பொருட்களை அடித்து நொறுக்கியதுடன் பொருட்களை கொள்ளையடித்து சென்றனர்.

இதற்கிடையே ஆட்சி நிர்வாகத்தை ஜனாதிபதி முபாரக் மாற்றி அமைந்துள்ளார். அவருக்கு நம்பிக்கைக்குரியவர்களை துணை ஜனாதிபதி, பிரதமர் உள்ளிட்ட முக்கிய பதவிகளில் அமர்த்தியுள்ளார். பதவி விலக மறுப்பு, மேலும் ஜனநாயக மற்றும் பொருளாதார சீர்திருத்தம் செய்வதாகவும் அறிவித்துள்ளார்.

இதை மக்கள் ஏற்றுக் கொள்ளவில்லை. பதவி விலகும்படி வலியுறுத்தி வருகின்றனர். ஆனால் பதவி விலக மாட்டேன் என பிடிவாதமாக அவர் மறுத்து வருகிறார். இதற்கிடையே கலவர செய்திகளை ஒளிபரப்பிய அல்- ஜசீரா தொலைக்காட்சியையும் இன்டர்நெட் சேவைகளையும் முபாரக் தடை செய்வதாக அறிவித்துள்ளார். இருந்தும் கலவரம் தொடர்ந்து நீடிக்கிறது.

கலவரம் தொடர்ந்து நீடிப்பதைத் தொடர்ந்து எகிப்தில் தங்கியிருக்கும் வெளிநாட்டினர் அங்கிருந்து வெளியேறி வருகின்றனர். அமெரிக்காவைச் சேர்ந்த ஆயிரக்கணக்கான வர் விமானங்கள் மூலம் நேற்று அழைத்து செல்லப்பட்டனர். (ஸ்ரீ-2)

# பெர்லுஸ்கோனியின் மகள் இத்தாலிய பிரதமர் ஆவாரா?

இத்தாலி நாட்டிற்கு எதிர்வரும் 2013 ஆம் ஆண்டு பொதுத்தேர்தல் நடைபெறவுள்ளது. இத்தேர்தலில் தற்போதைய பிரதமராக பதவிவகிக்கும் பெர்லுஸ்கோனியின் மகள் மரினாவை போட்டியிடச் செய்ய சுதந்திர மக்கள் கட்சி முடிபு செய்துள்ளது.

தற்போதைய பிரதமர் பெர்லுஸ்கோனியின் மீது எழுந்துள்ள பாலியல் குற்றச்சாட்டால் கட்சிக்கும் பதவிக்கும் அவப்பெயர் ஏற்பட்டுள்ளது. அதனை போக்கும் வகையில் அவரது மகளான மரினாவுக்கு வாய்ப்பு அளிக்கப்படுவதாக கட்சி வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

44 வயதாகும் மரினா திருமணமானவர். தந்தைக்கு சொந்தமான நிறுவனங்களை நிர்வகித்து வருகிறார். இவர் கம்பனி நிர்வாகத்தை சிறப்பாக நிர்வகித்து வருவதால் அதேபோன்ற திறமையையும் அரசியலில் பயன்படுத்த கூடும் என்றும் போர்ப்ஸ் பத்திரிகை 100 பேர்களில் இவரையும் சிறந்த பெண்மணியாக தேர்ந்தெடுத்துள்ளது.

தற்போதைய அவுஸ்திரேலிய பிரதமராக உள்ள யூலியா கில்லார்டு மற்றும் ஜோர்டான் அரசி ராணியா ஆகியோரை காட்டிலும் முன்னிலையாக 48 ஆவது இடம் பிடித்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.


கட்சிக்கு இவரின் வருகை மற்ற பெண் உறுப்பினர்களுக்கு ஒரு உத்வேகத்தை கொடுக்கும் என்று கட்சியின் மூத்த ஆண் உறுப்பினர்கள் வாழ்த்து தெரிவித்துள்ளனர். (ஸ்ரீ)





இராமநாதன் மகளிர் கல்லூரியின் இல்ல மெய்வல்லுநர் போட்டியில், விருந்தினர்கள் அழைத்து வரப்படுவதையும், வட மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் எல். இளங்கோவன், வட மாகாண விளையாட்டுத்துறைப் பணிப்பாளர் எஸ். அண்ணாத்துரை ஆகியோர் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு பரிசில் வழங்குவதையும் படங்களில் காணலாம்.

# இலங்கை - மேற்கிந்தியத்தீவு அணிகள் மோதல் மழை காரணமாக முடிவின்றிக் கைவிடப்பட்டது



(கொழும்பு)

இலங்கை- மேற்கிந்தியத் தீவுகளுக்கிடையிலான முதலாவது ஒரு நாள் போட்டி மழை காரணமாக முடிபின்றிக் கைவிடப்பட்டது.

இலங்கைக்குச் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள மேற்கிந்தியத் தீவுகள் அணி 03 ஒருநாள் போட்டிகள் கொண்ட தொடரில் விளையாடுகின்றது.

இதில் முதலாவது ஒருநாள் போட்டி நேற்று எஸ்.எஸ்.சி. மைதானத்தில் ஆரம்பமானது.

இப் போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய மேற்கிந்தியத் தீவுகள் அணி பாரத்- சர்வானின் சிறப்பான இணைப்பாட்டத்தின் மூலம் நிர்ணயிக்கப்பட்ட 50 ஓவர்களில் 05 விக்கெட்டுக்களையிழந்து 245 ஓட்டங்களை எடுத்தது.

இதில் ஏடிரன் பாரத் 129 பந்துகளில் (08 பவுண்டரிகள், 02 சிக்ஸர்கள் அடங்கலாக) 113 ஓட்டங்களை எடுத்து தனது முதலாவது ஒருநாள் போட்டிச் சதத்தைப் பூர்த்தி செய்தார். அத்துடன் ராம் நரேஷ் சர்வான் 100பந்துகளில் (04 பவுண்டரிகள், ஒரு சிக்ஸர் அடங்கலாக) 75 ஓட்டங்களையும் அணித் தலைவர் சமி ஆட்டமிழக்காமல் 21 ஓட்டங்களையும் எடுத்தனர்.

பந்துவீச்சில் மலிங்க 03 விக்கெட்டுக்களையும் குலசேகர ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

இந்நிலையில்மதியபோசன இடைவேளையின்பின் துடுப்பெடுத்தாடத் தயாரானபோது மழையின் குறுக்கீட்டால் ஆட்டம் தாமதமானது.

மழை இடைவிடாது தொடர பிற்பகல் 3.30 மணிக்கு ஆட்டம் கைவிடப்பட்டதாக நடுவர் அறிவித்தார்.

இலங்கை- மேற்கிந்தியத் தீவுகள் அணிகளுக்கிடையிலான ஒருநாள் போட்டி தொடர் கடந்த வருடம் நவம்பர் மாத இறுதியில் நடைபெறவிருந்த நிலையில் மழை காரணமாக கைவிடப்பட்டது.

இந்நிலையில் இத் தொடர் தற்போது நடைபெறுகின்றது. இப்போதும் மழையின் தாண்டவம் தொடர்கின்றது.

# பெங்களூரில் முதல் போட்டியை நடத்த ஐ.சி.சி உறுதி

இந்தியா-இங்கிலாந்து மோதும் உலகக்கிண்ண போட்டி பெங்களூரில் நடக்கவுள்ளது. சர்வதேச கிரிக்கெட் சபை (ஐ.சி.சி) நேற்று இதை உறுதி செய்தது.

இந்தியா, இலங்கை, பங்களாதேஷ் ஆகிய நாடுகளில் உலகக்கிண்ண கிரிக்கெட் தொடர் நடக்கவுள்ளது. இதில் கொல்கத்தா ஈடன் கார்டன் மைதானத்தில் மொத்தம் நான்கு போட்டிகள் நடக்க இருந்தன. ஆனால் மைதானத்தில் கட்டுமானப் பணிகள் நிறைவு பெறாத காரணத்தினால் வரும் பெப்ரவரி மாதம் 27 இல் இங்கு நடக்க இருந்த இந்தியா- இங்கிலாந்து அணிகளுக்கு இடையிலான போட்டியை வேறு மைதானத்தில் நடத்த சர்வதேச கிரிக்கெட் சபை (ஐ.சி.சி) முடிபெடுத்தது.

மீண்டும் ஒரு வாய்ப்பு கொடுங்கள் என கொல்கத்தா கிரிக்கெட் சங்கம் (சி.ஏ.பி) விடுத்த வேண்டுகோளை ஐ.சி.சி ஏற்க மறுத்தது. இப்பிரச்சினையில் மேற்கு வங்க முதல்வர் புத்ததேவ் பட்டாச்சாரியா, மத்திய அமைச்சர் பிரணாப் முகர்ஜி ஆகியோர் தலையிட்டனர். பல தரப்பில் இருந்து ஐ.சி.சி.தலைவர் சரத் பவாரிடம் முறையிட்டனர்.

ஆனால் போட்டியை மாற்றுவது என்ற திட்டத்தில் எந்த மாற்றமும் இல்லை என நேற்றுமுன்தினம் ஐ.சி.சி உறுதியாக தெரிவித்தது. தவிர கொல்கத்தாவுக்குப் பதில் பெங்களூரில் போட்டியை நடத்த இந்திய கிரிக்கெட் சபையும் (பி.சி.சி.ஐ) பரிந்துரை செய்தது.

இது குறித்து நேற்று ஐ.சி.சி வெளியிட்ட அறிக்கையில், எதிர்வரும் 27 ஆம் திகதி கொல்கத்தாவில் நடக்க இருந்த இந்தியா-இங்கிலாந்து அணிகள் இடையிலான போட்டியை குறிப்பிட்ட அதேதேதியில் பெங்களூரில் நடத்த ஐ.சி.சி. முடிபு செய்துள்ளது. அடுத்து எதிர்வரும் 7ஆம் திகதி ஈடன் கார்டனில் ஆய்வு செய்து மீதமுள்ள மூன்று போட்டிகளை நடத்துவது குறித்து முடிபு செய்யப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

# மேசன் தொழில் பயிற்சி பெற்ற முன்னாள் போராளிகளுக்கு சான்றிதழ்

(வவுனியா)

வவுனியா செட்டிக்குளம் மருதமடு புனர்வாழ்வு நிலையத்தில் மேசன் தொழில் பயிற்சி பெற்ற முன்னாள் விடுதலைப் புலி உறுப்பினர்களான 504 பேருக்கு இளைஞர் விவகார அமைச்சர் டலஸ் அழகப்பெரும அதற்கான சான்றிதழ்களை வழங்கியுள்ளார்.


இளைஞர் விவகார அமைச்சின் தொழிற் பயிற்சி அதிகார சபையினால் இந்தப் பயிற்சி 03 மாத காலத்திற்கு வழங்கப்பட்டிருக்கின்றது. இந்தச் சான்றிதழைக் கொண்டு உள்ளூரிலும் வெளிநாடுகளிலும் மேசன் தொழிலைப் பெற்றுக்கொள்ள முடியும் என அரசு தெரிவிக்கின்றது.

இந்தப் பயிற்சியின் முடிவில் தமக்கு விடுதலை கிடைக்கும். சமூகத்தோடு இணைந்து கொள்ளலாம் என்ற ஆவலோடு அந்த இளைஞர்கள் காணப்பட்ட போதி லும் அவர்களது எதிர்பார்ப்பு நேற்று நிறைவேறவில்லை.

தாங்கள் விடுதலை பெற்றதும் தமது வாழ்வாதாரத்திற்கு இந்தப் பயிற்சி பெரிதும் உதவியாக இருக்கும் என்ற நம்பிக்கையை வெளியிட்ட அதேவேளை வேறு வழிகளிலும் தமது குடும்பத்தை கொண்டு செல்ல முடியும் என அவர்களில் சிலர் கூறுகின்றனர்.

புனர்வாழ்வுப் பயிற்சியின்போது உளவியற் பயிற்சி உட்பட பல்வேறு வாழ்வியல் பயிற்சிகளும் தங்களுக்கு வழங்கப்பட்டதாக விடுதலைப் புலிகள் அமைப்பில் பல வருடங்கள் வைத்தியராகக் கடமையாற்றிவந்த ஒரு இளைஞன் குறிப்பிட்டார். தகைமைக்கேற்ப வெவ்வேறு தொழிற் பயிற்சிகள் வழங்கப்பட்ட போதிலும் மேசன் தொழிலுக்கான 03மாதகால பயிற்சியில் இணைந்தால், பயிற்சி முடிந்ததும் விடுதலை கிடைக்கும் என்ற நம்பிக்கையில் தானும் அந்தப் பயிற்சியில் சேர்ந்து கொண்டதாகவும் அவர் தெரிவித்தார்.

இறுதிக் கட்ட யுத்தத்தின்போது விடுதலைப் புலிகள் அமைப்பைச் சேர்ந்த 11 ஆயிரம் பேர் இராணுவத்தினரிடம் சரணடைந்துள்ளதாக தெரிவித்துள்ள அரசு, இதுவரை யில் 5 ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் புனர்வாழ்வுப் பயிற்சி முடிந்து விடுதலை செய்யப்பட்டுள்ளதாகக் கூறி வருகின்றது. பெப்ரவரி 04 ஆம் திகதி இலங்கையின் சுதந்திர தினத்தை ஒட்டி மேலும் ஒரு தொகுதி முன்னாள் விடுதலைப் புலி உறுப்பினர்கள் விடுதலை செய்யப்படலாம் என எதிர்பார்க்கப்பட்ட போதிலும் எதிர்வரும் ஏப்ரல் மாதம் சித்திரைப் புத்தாண்டை ஒட்டி இந்த விடுதலை இடம் பெறும் என இளைஞர் விவகார அமைச்சர் டலஸ் அழகப்பெரும தெரிவித்திருக்கின்றார். (ந-5)



காந்தி சிரார்த்த தின விழாவினை முன்னிட்டு 30.01.2011 ஞாயிற்றுக்கிழமை காந்தி திருவுருவ சிலையினை ஆ.சுபாகரன் தலைமையிலான நிர்வாகத்தினர் மூலம், வி.மகாலிங்கம் (இலங்கைக்கான இந்திய துணைத் தூதுவர்) அவர்களால் திறந்து வைக்கப்பட்டது. சிலையை வடிவமைத்தவர் தென்னிலங்கையைச் சேர்ந்த சிற்பாச்சாரியார் கே.புருஷோத்மன் ஆவார்.

# மோட்டார் திருட்டு

(யாழ்ப்பாணம்)

புகையிரத வீதி கொக்குவிலில் உள்ள வீடொன்றில் நேற்று அதிகாலை மோட்டார் திருடப்பட்டுள்ளது.

படையினர் ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்ட பின்னரும் இத்தகைய திருட்டுச் சம்பவம் இடம்பெறுவது குறித்து மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர். (ந)

# மெய்வல்லுநர் போட்டி

(யாழ்ப்பாணம்)

சித்தன்கேணி பிளவத்தை அ.மி.த.க. பாடசாலை வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று பிற்பகல் 2.00 மணிக்கு அதிபர் கு.லோகநாதன் தலைமையில் நடைபெறும்.

இந் நிகழ்வில் காரைநகர் கோட்டக் கல்வி அதிகாரி பு.ஸ்ரீவிக்னேஸ்வரன் பிரதம விருந்தினராகவும், சங்கானை மக்கள் வங்கி உதவி முகாமையாளர் செ.சரத் சந்தர் சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொள்வர். (ந-5)

CSC®
COMPUTER EDUCATION
AN ISO 9001 : 2000 CERTIFIED INSTITUTION

Quality Education @ affordable cost



O/L மாணவர்களுக்கான விசேட பிரிவுகள் 01 02 03 February

75% நேரடி ஸ்கொலர்சிப் விசேட சிறப்புச் சலுகை

- Office Application
- Web Design & development
- Adv. Digital Pre-Press
- Digital Video Production
- Adv. Java Programming
- Tally Accounting Training
- Hardware & Networking
- Computer Graphic Design

ASIAN COMPUTER EDUCATION

2G, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். T.P : 021-222 5677

230,1ம் மாடி கண்டி வீதி, சாவகச்சேரி, T.P : 021-2270267

கொடிகாமம் வீதி, நெல்லியடி. T.P : 021-2262399

## மீனவர்கள் மீது வன்...

நிருபமா ராவ் ஜனாதிபதி மகிந்த ராஜ பக்ஷ மற்றும் வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் ஆகியோரைச் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தியிருந்தார்.

இச்சந்திப்புக்களின்பின் இலங்கை அரசாங்கமும் இந்திய அரசாங்கமும் இவ் விவகாரம் தொடர்பில் இணக்கப்பாடு காணப்பட்ட விடயங்கள் குறித்து கூட்டறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளன. இவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

இந்திய-இலங்கை கடற்பரப்பில் அண்மையில் இடம்பெற்ற தமிழக மீனவர்கள் மீதான தாக்குதல் சம்வங்கள் தொடர்பில் இந்திய வெளிவிவகாரச் செயலாளர் நிருபமா ராவ் ஆழ்ந்த கவலையை வெளியிட்டார்.

இச்சம்பவங்கள் குறித்து முழுமையான விசாரணைகள் நடத்தப்பட வேண்டும் எனவும் இத்தகைய சம்பவங்கள் எதிர்காலத்தில் இடம்பெறாத வகையில் தடுத்து நிறுத்த வேண்டும் எனவும் நிருபமா ராவ் வலியுறுத்தியுள்ளார்.

இரு நாடுகளுக்கும் இடையில்மிக நெருங்கிய இருதரப்பு உறவுகள் உள்ள நிலையில், இரு நாடுகளுக்கும் இடையிலான ஜீவனோபாய நடவடிக்கைகளை மேற்கொள்ளும் மீனவர்களின் நலன்களில் பாதிப்புக்களை ஏற்படுத்தக் கூடிய எந்தவொரு நடவடிக்கையையும் இலங்கையின் மிகுந்த கரிசனத்திற்கு உரியதாகும்.

இச் சம்பவங்கள் குறித்து விசாரணைகளை மேற்கொள்வதற்கு இலங்கை அரசாங்கம் முடிவு செய்துள்ளதுடன், விசாரணைகளைத் தொடரும் நிலையில் மேலதிக தகவல்களை வழங்குமாறு இந்தியாவிடம் அரசாங்கம் கேட்டுக்கொண்டுள்ளது.

சர்வதேச கடல் எல்லையைக் கடந்து வரும் மீனவர்களைக் கையாள்வதற்காக மீன்பிடி ஏற்பாடுகள் தொடர்பாக 2008ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 16ஆம் திகதி வெளியிடப்பட்ட கூட்டறிக்கை இத்தகைய சம்பவங்களை குறைவடையச் செய்திருந்தன என இரு தரப்பினராலும் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

இந்நிலையில் தற்போதைய சூழ்நிலைகளின் அடிப்படையில் ஏற்பாடுகளை மேற்கொண்டு மீனவர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கான அவசியத்தை இரு தரப்பினரும் வலியுறுத்தினர் என இரு நாடுகளும் இணைந்து வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ந-5)

## அரசாங்கத்தின் ஆட்டம்...

ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்ன்னியின் முக்கிய பங்காளிக் கட்சியான ஜாதிக ஹெல உறுமய எதிர்வரும் உள்ளூராட்சித் தேர்தலில் தமக்கு அதிக இடங்களை ஒதுக்க வேண்டும் என அரசை வலியுறுத்தி வந்துள்ளது.

இருந்தும் அரசு அதற்கு இடம் கொடுக்காமையால் ஆத்திரமடைந்த ஜாதிக ஹெல உறுமயவின் தலைவர் அத்துரலிய ரத்தின தேரர், உங்கள் ஆட்டம் எல்லாம் இன்னும் கொஞ்சக் காலத்திற்குத்தான் என அரசை எச்சரித்துள்ளார்.

ஜாதிக ஹெல உறுமயவின் தலைவர் ரத்தின தேரரின் இந்த எச்சரிப்பால் அரசு ஆத்திரமடைந்துள்ளதாகக் கூறப்படுகின்றது.

இம்முறைத் தேர்தலின் போது ஜாதிக ஹெல உறுமயவினர் அரசாங்கத்தின் பிரதான பங்காளிக்கட்சி என்ற வகையில் தங்களுக்கு சம்பந்தம் இல்லாத, வாக்கு வங்கி இல்லாத இடங்களில் எல்லாம் பெரும் எண்ணிக்கையிலான வேட்பாளர்களை நிறுத்துவதற்கு முனைப்புக் காட்டியிருந்தனர்.

ஆனால் ஆளும்கட்சி அதற்கு இடமளிக்கவில்லை. ஜாதிக ஹெல உறுமயவுக்கு ஆரம்பத்தில் 125 பேருக்கு வேட்பாளர் பட்டியலில் இடமளிப்பதாக ஏற்றுக்கொள்ளப்பட்டிருந்த இணக்கப்பாட்டையும் மீறி வெறுமனே 59 பேருக்கு மாத்திரமே இடமளிக்கப்பட்டுள்ளது.

இனிவரும் காலங்களில் சிறு கட்சிகளைவிட ஸ்ரீ லங்கா சுதந்திர கட்சியை கட்டியெழுப்புவது குறித்து ஆளும்கட்சி முக்கிய கவனம் செலுத்துவதால் இம்முறை ஜாதிக ஹெல உறுமய, லங்கா சமசமாஜக் கட்சி, கம்யூனிஸ்ட் கட்சி, விமல் வீரவன்சவின் தேசிய சுதந்திர முன்னணி, வாசுதேவ நாணயக்காரவின் கட்சி என்பன கடும் அதிருப்திக்குள்ளாகியுள்ளதாகவும் கூறப்படுகின்றது.

ஆளும்கட்சிகளுக்குள் ஏற்பட்டுள்ள முரண்பாடுகள் உள்ளூராட்சித் தேர்தலில் பாரிய விளைவுகளை ஏற்படுத்தும் என அரசியல் விமர்சகர்கள் கருத்து வெளியிட்டுள்ளனர். (ந-5)


# STUDY & WORK IN UK

- பகுதிநேர வேலைவாய்ப்புக்கான 100% உத்தரவாதம்.
- 3 நாட்களுக்குள் CAS LETTER கிடைக்கும் வகையில் துரித ஏற்பாடுகள்.
- குடும்பமாக செல்லக்கூடிய வாய்ப்புகள்.
- தற்போது U.K யில் கல்வி கற்றுக் கொண்டிருப்பவர்களுக்கு கனடாவில் கல்வியைத் தொடரும் வசதிகளை செய்து தருகிறோம்.

விசா கிடைத்தபின்பே கல்லூரிக் கட்டணம் செலுத்தும் அரிய வாய்ப்பு

(3608)



245, பலாலி வீதி,
கந்தர்மடம்.

தொடர்பு:- 0771484541


## சந்திரிகா சாட்சியமளி...

எதிர்வரும் வாரங்களில் முன்னாள் ஜனாதிபதி வெளிநாட்டில் இருப்பார் என்பதால் அவர் சாட்சியமளிக்க தீர்மானிக்கும் பட்சத்தில் இதற்கான ஏற்பாடுகளை செய்வதற்கு இரண்டு வாரங்களுக்கு மேல் செல்லும் என அவர் கூறினார்.

இதேவேளை நல்லிணக்க ஆணைக்குழு முன்னிலையில் சாட்சியமளிப்பது தொடர்பில் சந்திரிகா குமாரதுங்க இதுவரை தீர்மானிக்கவில்லை என அவர் சார்ந்த வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. (ந-5)

## புலிகளுக்கு நிதி வழங்...

குறித்து அமெரிக்க அரசாங்கத்துடன் இணைந்து செயற்படவுள்ளோம்.

தமிழீழ விடுதலைப்புலி ஆதரவு அமைப்புக்கள் பெயர்களை மட்டும் மாற்றி அதே நோக்கத்தில் இயங்கி வருகின்றன.

யுத்த காலத்தில் உயிரிழந்தவர்களின் குடும்ப உறுப்பினர்கள் தமிழீழ விடுதலைப் புலி ஆதரவாளர்களுக்கு எதிராக வழக்குத் தொடருமாறு அரசாங்கத்திடம் கோரியுள்ளனர்.

சில மனித உரிமை அமைப்புக்களும் தன்னார்வத் தொண்டு நிறுவனங்களும் புலிகள் ஆயுதங்களை கொள்வனவு செய்வதற்கு ஒத்துழைப்பு வழங்கியுள்ளன.

தமிழீழ விடுதலைப் புலி ஆதரவு அமைப்புக்கள் தொடர்பில் விசாரணை நடத்தப்பட்டு வருவதாகவும் இதனால் தகவல்களை வெளியிட முடியாது என அவர் தெரிவித்தார். (ந-5)

## லங்கா ஈ நியூஸ்...

தீயணைக்கும் படையினர் இப் பகுதிக்குள் வர சுமார் ஒரு மணிநேரம் எடுத்ததாகவும் அதற்குள் அலுவலகம் முற்றாக எரிந்துவிட்டதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

சிங்கள மொழியில் செய்திகளை வெளியிடும் முக்கிய இணையத்தளமான லங்கா ஈ நியூஸ் நிறுவனத்தின் ஊடகவியலாளர் பிரகீத் எக்னாலிகொட கடந்த ஜனாதிபதித் தேர்தலின் போது கடத்தப்பட்டு காணாமற் போயிருந்தார்.

இவர் காணமற்போய் ஒரு வருடமாகியும் இன்றுவரை இவரைக் கண்டுபிடிப்பதற்கான முழுமையான விசாரணை எதனையும் பொலிஸார் மேற்கொள்ளவில்லையென கடந்த வாரம் சர்வதேச மனித உரிமை அமைப்புக்கள் இலங்கை அரசாங்கத்தின் மீது குற்றம் சுமத்தியிருந்தன.

கடந்த வருடம் இடம்பெற்ற ஜனாதிபதித் தேர்தலின் போது எதிர்க்கட்சிகளின் பொது வேட்பாளர் சரத் பொன்சேகாவை ஆதரித்து இவ் இணையத்தளம் செய்திவெளியிட்டது.

இந்த இணையத்தளத்தின் பிரதம ஆசிரியராகக் கடமையாற்றிய சந்தாருவன் சேனாதீர தொடர்ச்சியான அச்சுறுத்தல்களை அடுத்து நாட்டை விட்டுத்தப்பிச் சென்றுள்ளார்.

ஆனாலும் இவ்வாறான அச்சுறுத்தல்களுக்கு மத்தியிலும் இணையத்தளம் தொடர்ச்சியாக இயக்கப்பட்டு வருகின்றது.

லங்கா ஈ நியூஸ் அலுவலகம் தீப்பற்றிக்கொண்டது தொடர்பில் உடனடி விசாரணைகளை மேற்கொண்டு அறிக்கையொன்றைசமர்ப்பிக்குமாறு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ பொலிஸ்மா அதிபரை பணித்துள்ளதாக ஜனாதிபதியின் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது. (ந-5)


**நல்லின பப்பாசி**
**Red Lady**
**விற்பனைக்குண்டு**

இல.18, குமாரசாமி வீதி, கந்தர்மடத்தில் நல்லின பப்பாசிகள் (Red Lady) விற்பனைக்கு உண்டு.

தொ.பே.இல:021 3002634


## விருப்பு...

மகிந்த தேசப்பிரிய வெளியிட்டுள்ளார்.

உள்ளூராட்சி மன்ற வேட்பாளர்களது விருப்பு எண்கள் அந்தந்த தேர்தல் தெரிவத்தாட்சி அதிகாரிகளுக்கு அனுப்பவுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார். (ந-5)

## கொழும்பு...

தெரிவிக்கப்படுகின்றது. கடந்த 26-ம் திகதி யாழ்ப்பாணத்திலிருந்து புறப்பட்டுச் சென்றவர் வவுனியாவிலிருந்து புகையிரதம் மூலம் பயணிக்கவிருந்ததாக அவரது தந்தையார் தனது முறைப்பாட்டில் தெரிவித்துள்ளார். (ந-5)

# மரண அறிவித்தல்

## கதிரவேலு குணசேகரம் (பேபி)



கோப்பாய் தெற்கை பிறப்பிடமாகவும் இலக்கம் 21 றக்கா லேன் சுண்டுக்குழி யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட கதிரவேலு குணசேகரம் 30.01.2011 அன்று இறைபதம் அடைந்துவிட்டார்.

இவர் அமரர்கள் கதிரவேலு ஆச்சிமுத்து தம்பதிகளின் புதல்வனும், பராசக்தியின் (பெற்றியின்) அன்புக் கணவரும், சுபாசினி (சுவிஸ்), பிரணவன் (AMT ரான்ஸ் போர்ட் சேவீஸ்), பிரபாகினி (சோபா) லண்டன்), தனுசாந்தன் (லண்டன்) ஆகியோரின் அன்புத் தந்தையும், றமேஸ் (சுவிஸ்), சேகர் (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமனாரும், அஸ்வின், அபினாஸ், அஸ்வினியா ஆகியோரின் அன்புப் பேரனும், அமரர் குணம், குணரத்தினம், குணசீலன், குணபாலன் (வவா), குணபாலசிங்கம் (குஞ்சுக்கிளி) லெபனான்), சந்திரசேகரம் (பிரான்ஸ்), இராஜசேகரம் (ஹொலண்ட்), செயக்குமார் (மோகன்) ஹொலண்ட்) ஆகியோரின் அன்புச் சகோதரனுமாவார்.

இறுதிக் கிரியைகள் பற்றிய அறிவித்தல் பின்னர் அறிவிக்கப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

21, றக்கா லேன், சுண்டுக்குழி,
யாழ்ப்பாணம்.

தகவல்
பிரணவன் (பிரதி)
மகன்

(3618)

இப்பத்திரிகை வலம்புரி அன். கோஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 01.02.2011 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.